# புதுமைக் கட்டுரை

.கோபாலகிருஷ்ணக்கோன்.
மதுரை. திருநெல்வேலி. சென்னை.

6498

அன்பளிப்பு
M.O.L.
THE MADURA TAMIL SANGAM
மதுரைத் தமிழ்ச் சங்கம்

# புதுமைக் கட்டுரை


கவிராஜ பண்டித

**நா. கனகராஜையர், M. A.,**

முன்னாள் தமிழ்ப்பேராசிரியர், குடந்தைக்கல்லூரி,

மதுரை.



இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை :: திருநெல்வேலி :: சென்னை

பதிப்புரிமை] **1955** [விலை ரூ. 1-8-0

முதற் பதிப்பு — 1955

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை. - '55

# முகவுரை

பல்கலைக் கழக வகுப்புக்களிற் பயிலும் நம் தமிழ்ச் சிறுவர் இந்நாளில் தமிழ்ப்பற்றும் தமிழறிவும் எழுத்துத் திறமும் பேச்சுத் திறமும் மிகுந்தவராய் இருக்கின்றார். ஆதலின் அன்னவர் மொழியறிவு வளரத்தக்க உருவத்திலே அவர் கைக்கு வரும் புது நூல்கள் அமையவேண்டும். தமிழ் நடையின் சிறப்பை இந்நாளிலே பற்பல புதிய எழுத்தாளர் நன்கு விளங்கச் செய்யும் திருப்பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்.

நம் நாடு தமிழ் மொழியை அரசியல் மொழியாகக் கொண்ட ஒரு பெரும் பகுதியாக அமைய இருக்கிறது. பிறமொழிக் கலப் பற்ற தமிழ் நாட்டிலே வாழும் இளைஞரும் முதியாரும் நற்றமிழில் எழுதவும் பேசவும் வல்லவராய் இருத்தல் வேண்டும். அயல் நாட்டு மொழியான ஆங்கிலத்துக்கு அடுத்த நிலை பெற்று அதற்குப் பின்பாட்டுப் பாடியிருந்த காலம் மலையேறிவிட்டது. இனித் தன்னுரிமையை, நம் தாய்மொழி, கலாசாலை, கல்லூரி முதலிய கலைநிலங்களில் மட்டுமன்றி, நீதிமன்றம் பொது மக்கள் அரசியல் பொறுப்பு எற்கும் நாட்டு ஆட்சி மன்றம் முதலிய பொது நிலங்களிலும் விளக்க வேண்டும்.

பிற மொழிகளால் அழுத்தம் திருத்தம் தெளிவு முதலிய பண்புகளோடு உரைக்க வல்ல கருத்துகளை நம் தாய்மொழியும் உரைக்கத்தக்கதே என்ற நிலை விரைவில் வரவேண்டும். அதற்கு ஒரு சிறு உதவியாக இப்புதுமைக் கட்டுரைகள் வெளியாகின்றன. இவை கல்லூரி மாணவர்க்குத் தமிழார்வம் ஊட்ட உதவுமாயின் அதுவே ஆசிரியன் பெறும் கைம்மாறாகும். இதை வெளியிட முன்வந்த மதுரைப் புத்தக வர்த்தகர், இ.மா. கோபாலகிருஷ்ணக் கோன் அவர்கட்கு ஆசிரியன் நன்றி உரியதாம்.

மதுரை
15—10—55

**ஆசிரியர்.**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தாய்மொழி | ... | 1 |
| 2. | அன்பரசு | ... | 9 |
| 3. | வெறுப்புக் கொள்கை | ... | 16 |
| 4. | தவம் செய்த தவம் | ... | 23 |
| 5. | கோயில்கள் | ... | 35 |
| 6. | குளக்கரைப் பிள்ளையார் | ... | 44 |
| 7. | அயல்மொழிப் பயிற்சி | ... | 53 |
| 8. | வாழ்க்கைத் துணை | ... | 60 |
| 9. | தமிழ்மக்களும் மலர்களும் | ... | 70 |
| 10. | போரும் அமைதியும் | ... | 76 |
| 11. | ஏடுகளும் எழுதுவோரும் | ... | 84 |
| 12. | சொல்லும் பொருளும் | ... | 91 |
| 13. | வாய் வாளாமை | ... | 100 |
| 14. | காலமும் உலகமும் | ... | 109 |
| 15. | உறக்கமும் விழிப்பும் | ... | 117 |

# புதுமைக் கட்டுரை

## 1. தாய்மொழி

உறவின் முறைகளில் உரிமையும், அருமையும் பெருமையும் மிக்கது தாய்மை உறவே. தமக்கு உரியவர் ஆதலால் தமர் எனவும் சுற்றி ஓட்டுதலால் சுற்றம் எனவும் கருதப்படும் உறவுக் கெல்லாம் அடிப்படை தாயுறவே ஆகும். வாழ்வு ஒரு பெரு மரமென்று கருதப்படுமாயின், அம் மரத்தின் ஆணிவேர் தாய்மையே என்பதை ஒவ்வோருயிரும் உணர்ந்தே வாழ்கிறது. தாய் தன்னை இயல்பாக உணர்த்தித் தன்னை ஒரு மதலை உணர்ந்த பிறகே தந்தை தமையன் தமக்கை பாட்டன் பாட்டி முதலிய உறவுகளை உணர்த்துகிருள். அறிவுச் செல்வம் பெருதவை என்று எண்ணப் பெறும் பிற உயிர்களும் தாய் உறவையே முதற்கண் உணர்ந்து, அதன் பிறகே இனத்து உறவை எய்துகின்றன.

தாய் என்ற சொல் ஈன்றவளை உணர்த்துவது என்பதை ஒவ்வொரு சிறுவனும் உணர்வான். ஈன்றவளே தான் ஈன்ற செல்வத்தைப் போற்றிப் பேணும் பொறுப்புடையவள் என்பது உலகம் அறிந்த உண்மையாம். தாயுறவு மதலைக்கு முதற்கண் விழிதிறந்த நாள் முதலே அமைந்தது. மதலையைத் தனது பாலைத் தந்து வளர்க்கும் தாய் சில நாளில் தனது இன்றியமையாமை விளங்கும்படி செய்கிருள். ஒரு செடி தன்னிற் பிறந்த அரும்பைப் பூவாக்கிப் பூவைக் காயாக்கிக் காயைக் கனியாக்கி உலகிற்கு உதவி இன்புறுகிறது. பூவின் மணத்துக்கும் காயின் சுவைக்கும் கனியின் இனிமைக்கும் தன்னையே அச்செடி உதவி வளர்க்கும் இயல்பை அறியாதவர் இல்லை. மண்ணுள் மறைந்த வேரில்

மனிதன் சிறிது தண்ணீர் ஊற்றியவளவில் செடியின் பல பகுதிகளுக்கும் வேண்டிய ஊட்டம் மறைவாகவே ஏறு கிறது. தாய்ச் செடி தந்த ஊட்டம் ஒன்றே ஆயினும் அரும்பிலும் மலரிலும் காயிலும் கனியிலும் வெவ்வேறு பயன் விளைந்திருப்பது காண்கிறோம்.

பிறந்து வளர்ந்து ஊட்டம் பெற உதவிய பேருறவைத் தாய் என்று கருதுவது போலவே, பிறந்து வளர்ந்து ஊட் டம் பெற உதவிய நிலப் பகுதியைத் தாய் நாடு என்கிறோம். அந்த முறையாலே பிறப்போடு ஒட்டி வளர்ந்து வாழ்வு டன் இணைந்து அறிவுக்கு ஊட்டம் தர உதவும் ஒரு மொழியைத் தாய் மொழி என்று துணிகிறோம். தாய் மொழி என்பது தாய் தன் மதலைக்குத் தன் இனிய பாலு டன் குழைத்து அறிவுறுத்திய மொழியாம். தாயும் தந்தை யும் மதலையை அவன் செங்கிரை யாடும் பருவத்தில் மழலை மொழியும்படி பயிற்றிய மொழியாம். மதலைக்கு அறிவுச் செல்வம் அருளும் குரவருள் முதன்மை நிலைக்கு உரியவள் தாயே ஆதலின், அவன் உலகத்தை உணர, அகத்தையும் புறத்தையும் உணர, அம் முதற்குரு பயன்படுத்திய மொழியே தாய் மொழியாம்.

மொழிகள் ஒருவர் கருத்தை மற்றொருவர் அறிய உதவும் கருவிகளே ஆகும். நேரிற்கண்டு கருத்தைத் தெரி விக்க நேரும்போது வாய்மொழியே உற்றதுணையாகிறது. நெடுந்தொலையில் இருப்பார்க்குக் கருத்தை யுணர்த்த எழுத்துமொழி துணையாகிறது. மொழியைப் பயன்படுத்த அறிந்த மனித இனத்திற்கே, பேச்சுக்கும் எழுத்துக்கும் முதற்கண் உதவிய மொழி தாய்மொழியே. ஒரு மொழி யைப் பேசி எழுதிப் பல்லாண்டு பயின்றபிறகே பிறமொழி யிற் பயிற்சிபெறும் திறமை வரும். பல மொழிப் பயிற்சி பெற்றுப் பெரும்புலமை பூண்டிருக்கும் பேரறிஞரும் உள்ளம் உருக உவப்போடு பயின்ற முதன்மொழி தாய் மொழியே.

தமிழர்க்குத் தாய்மொழி தமிழ்மொழியே ஆவது போல வங்கர்க்குத் தாய்மொழி வங்கமே; சிந்தியர்க்குத் தாய் மொழி சிந்தியே; ஆங்கிலர்க்குத் தாய்மொழி ஆங்கிலமே. செருமனியர்க்குத் தாய்மொழி செருமனியமே. ஆங்கிலே யர் முதற்கண் ஆங்கில மொழியை நன்கு பயின்று, வேண்டு மளவு புலமை படைத்த பிறகு, பிரெஞ்சு லத்தீன் செரு மனியம் முதலிய பிற மொழிகளிலும் அழுத்தமான பயிற்சி பெறுகின்றனர். எத்தனை மொழிகளில் நிரம்பிய புலமை படைத்தாலும் ஆங்கிலேயன் தன் இனத்தாரோடு பேசவும் எழுதவும் தன் தாய்மொழியையன்றிப் பிறிதொன் றையும் பயன்படுத்தத் துணியமாட்டான்.

வங்க மொழியிலே ஆழ்ந்தகன்ற புலமை படைத் திருந்த மாபெரும் புலவர் இரவீந்திர நாததாகூர், ஆங்கில மொழியில் ஒப்புயர்வற்ற எழுத்துத் திறமையும் பேச்சுத் திறமையும் படைத்திருந்தார். அவர் உலகப்பெரும் புலவ ராக மதிக்கப்பெறும் நோபெல் பரிசுபெற உதவிய செயல் வங்கமொழியில் முதற்கண் இயற்றிய செய்யுட்களே ஆகும். அச் செய்யுட்களை உலகம் இன்று ஆங்கிலவாயிலாக நன்கு உணருமே ஆயினும், அப்புலவர் பெருமான் முதற்கண் இயற்றியது தாய் மொழியிலேயே என்பதை நாம் நன்கு உணரவேண்டும்.

மாபெரும் புலவரும் வழக்கறிஞரும் நாட்டன்பருள் ஒப்புயர்வு அற்றவருமான பாலகங்காதர திலகர், தமது தாய்மொழியான மராத்தி மொழியில் ஒரு புது அமைப் பையே தோற்றுவித்த பெருமை பூண்டவராவர். சிறைக் களத்தில் இருந்தவண்ணம் அவர் இயற்றிய அரும்பொருட் பேழையான பகவத்கீதா ரஹஸ்யம் இன்றும் பல மொழி களில் மொழி பெயர்க்கப்பெற்று உலகம் எங்கும் வழங்கி வருகின்றதாயினும், திலகர் அந்நூலை முதற்கண் இயற்றி யது அவர் தாய் மொழியான மராத்தி மொழியிலேயே என்பதை உலகம் உணரும். வடமொழியும் ஆங்கிலமும்

நன்கு பயின்றுணர்ந்த இப்பெரியோர் தாய்மொழிக்குத் தந்த மதிப்பை இச்செயலால் அறிகின்றோம்.

உலகமே பாரதப் பெருநாட்டை நோக்கும் வண்ணம் அறப்போர் நிகழ்த்திய காந்தியடிகள், குசராத்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவராவர். ஆங்கில மொழியில் எளிய இனிய பொருட் பொலிவுள்ள நடை ஒன்றைத் தமக்கென்றே அமைத்துக்கொண்ட இப்பெரியோர், தாய்மொழியிலேயே சிறந்த பற்றுடையவர் என்பதை அவரோடு பேசவும் அவர்க்கு எழுதவும் பேறுபெற்ற நண்பர்கள் உணர்வர். உலகப் பெருமொழியான ஆங்கிலம் நம் நாட்டில் அறிவுடைய மக்களுக்கு உதவும் மொழியாக வளர்ந்திருப்பதை உணர்ந்தும், நாட்டு மொழியாகும் உரிமை இந்தி மொழிக்கே உண்டு என்று இவரே கூறினர்.

பல்லாவரத்தில் வாழ்ந்த மறைமலை யடிகள் வடமொழி ஆங்கிலம் முதலிய பல மொழிகளில் ஆழ்ந்தகன்ற புலமை படைத்திருந்தும், உடம்பும் உயிரும் ஒன்றியிருந்த நாளெல்லாம் பிற மொழிக் கலப்பற்ற தனித் தமிழ் மொழி வளர்க்கும் திருப் பணியிலேயே தலை நின்றார் என்பதை உலகம் உணரும். திரு. வி. க. என்று உலகம் உணரும் பேரறிஞர் ஆங்கிலத்தில் மிக்க பயிற்சி பெற்றிருந்தும் தாய் மொழியான தமிழில் எழுதுவதும் பேசுவதுமே தலையாய கடன் என்று கருதியதை அவர் வாழ்க்கை வரலாறு உணர்ந்த எவரும் அறிவர்.

தாய் மொழியில் அகன்ற நூற்பெருக்கு இல்லாதிருக்கலாம். பழமை இல்லா திருக்கலாம். புதுமையின் முறுக்கும் மிடுக்கும் எடுப்பும் ஏறா திருக்கலாம். ஆயினும் இது என் தாய்மொழி; எத்தனையோ பெண்மக்களை உலகிற் கண்டாலும் அவர் ஒருவரும் எனக்கு என் நற்றாய் போன்ற உறவு ஆகார். அவ்வண்ணமே எத்தனையோ மொழிகளில் எத்தனையோ செல்வங்கள், இருப்பினும் எனக்கு என் தாய் மொழியினும் சிறந்த மொழி ஒன்று இல்லை என்று ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும்.

இன்று உலகப் பெருமொழியாக விளங்குவது ஆங்கில மொழியே. உலகப் பெரு மன்றங்களில் முதன்மை பெறுவதும் ஆங்கில மொழியே. கலைத் துறையிலே தலையெடுத்து ஓங்கி விளங்குவது பிரெஞ்சு மொழியே. விஞ்ஞானத் துறையில் உயர்ச்சி பெற்றிருப்பது செருமனிய மொழியே. உலகத்தில் எந்தத் திசையில் எந்தக் காலத்தில் எப்பெரும் புலவர் எக் கருத்தை எவ் வுருவத்திலே உரைத்தாரோ அதற்குச் சிறிதும் மாறுபடாமல் உலகம் எங்கும் பரப்பத் தக்க திறம்படைத் திருப்பது ஆங்கிலம் என்ற மொழியே. இன்று ஆங்கிலம் அறிந்தவர், அறிய இயலாத பொருளே உலகத்தில் இல்லை என்று கூறலாம். இத்தகைய சிறப்புடைய மொழியைத் தாய்மொழியாகப் பெற்றவர் பெரும் பேறு உடையவரே.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கும் தமிழர் நினைவுக்குரிய கருத்துக்கள் சில உண்டு. ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் அதனை உலகப் பெரு மொழி ஆக்கியது எவ்வழிகளால்? அது போல நம் தாய் மொழியை நாமும் தலை நிமிரச் செய்யும் வழிகள் உண்டோ? பிற மொழிகளிற் பிற நாட்டார் கூறிய கருத்துக் களை நம் தாய் மொழியில் நாம் எளிதிற் கூற இயலுமா இயலாதா? இயலாதாயின் இயல்வதற்குரிய தந்திரம் யாது?

சங்கச் செய்யுளும் ஐம்பெருங் காப்பியமும் ஐஞ்சிறு காப்பியமும் தொல்காப்பியர் ஆகியோர் தந்த இலக்கண வகைகளும் இன்று நம் தாய்மொழியின் மதிப்பை உலகம் உணரச் செய்ய உதவுமா? வடமொழியிலே எத்தனையோ கிளைகளாக அறிவுத்துறை வளர்ந்திருந்தும் அம்மொழி இன்று உலகத்துக்குப் பயன்படும் அளவுக்குத் தகுதி பெறுமை ஏன்? நம் நாட்டு மொழிகளுள்ளே வங்க மக்கள் தம் தாய் மொழியை வளர்த்துள்ள அளவுக்கு நாம் நம் தாய் மொழியை வளர்த்துள்ளோமா? இந்தி பேசும்

மக்கள் நாட்டுப் பொது மொழியாக அது தலைமை தாங்கத் தக்க மதிப்பை எவ்வண்ணம் இயற்றினர்? நம் மொழியில் ஆழம் அகலம் அழகு இனிமை உணர்ச்சி ஊற்றம் ஏற்றம் முதலிய சிறந்த பண்புகள் இல்லையா? நாம் பிறர் மொழிகளைப் பயின்று சிறப்புற விழைகின்ற அளவுக்கு அயல் மக்கள் நம் மொழியைப் பயின்று சிறப்புற விழையாமை ஏன்? பல கோடி மக்கள் உள்ள உலகில் பேசப்படும் மொழிகள் பலவே ஆயினும் அவை எல்லாம் இலக்கண இலக்கிய விஞ்ஞான நவீன வளர்ச்சி பெற்றன என்று கூற இயலாது. பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி பெற்ற மொழிகள் பழமை சிறவாவிடினும் புதுமைச் சிறப்பு அடைவதை நாம் காண்கிறோம். மொழிப் பயிற்சியிலே ஈடுபட்ட அறிஞர் தாய் மொழிப் பற்று மிக்கிருந்தாலும் பல மொழிகளையும் பயின்றே பெருமை படைக்கின்றார். பிற மொழிகள் வளர்த்த செல்வத்தைத் தம் தாய் மொழிக்குத் தரவே முயல்கின்றார்.

நம் மொழி ஒரு காலத்திற் செய்யுளுருவத்திலே சிறந்து விளங்கியது. இன்று கதை கட்டுரை சிறு கதை முதலிய துறைகளில் பாய்ந்து வளர்கிறது. முன்னைய செய்யுட் செல்வமும் இன்றைய உரைச் செல்வமும் நம் தாய் மொழிக்கு இரு விழிகள் என்றே நினைக்கத் தக்கன. ஆயினும் புதுமைக் கருத்துக்களை யெல்லாம் பிற மொழியாளர் தெளிவாக உரைப்பது போல நாமும் நம் மொழியாலே உரைக்க அறிந்தாலன்றி, இன்று உலகம் ஓடும் ஓட்டத்தில் நம் தாய் மொழி பின்னிற்கும் நிலை உண்டாகிவிடும். தாய் மொழிப் பற்று என்பது பிற மொழிகளை வெறுக்கத் தூண்டும் நோய் ஆகக் கூடாது. தாய்க்குத் தக்க மதிப்பு அளித்த மகன் பிற உறவின் முறையாரையும் தழுவிக் கொள்வது போலவே தாய்மொழிக்குரிய தலைக் கடனை முறைப்படி நிறை வேற்றிய பிறகு பிற மொழிகளினும் நுழைந்து இன்புறலாம்.

தாய் மொழி என்ற தொடர்க்கு மற்றொரு பொருளும் கூறலாம். உலகத்தில் வழங்கும் மொழிகள் பலவாம். அவற்றை ஆராய்வதே தமது அறிவுத் துறைப் பொழுது போக்காகக் கொண்ட அறிஞர் உலகமொழிகளை இரண்டு மூன்று இனங்களாக வகுப்பர். நான்கு இனம் என்று கருதுபவரும் உளர். பல நூற்றுக்கணக்கான மொழிகளை ஆராய்ந்த பிறகே அறிஞர் இம் முடிவுக்கு வந்தனர். மக்கள் பேசும் மொழிகளிற் பல இன்னும் இலக்கிய இலக்கண வரம்பு பெறாமல் இருக்கின்றன. இவ் வரம்பு பெற்றவற்றுட் பழமை மிக்கவை சில. புதுமையுருவமே பெற்றவை பல. புதுமை மொழிகளில் வழங்கும் சொற்களை ஆராய்ந்து அவற்றின் இனங்களை அறுதியிடவேண்டும். பழமை மொழிகளில் எவை எவை இனமாகும் தகுதியுள்ளவை என்று ஆராய வேண்டும். இங்ஙனம் பொறுமையோடு ஆராய்ந்து வந்தால் இனம் என்று கூறிய நான்கும் மூன்றும் சுருங்க இடம் உண்டாகும்.

முதற்கண் மனிதன் பிறந்தது எங்கு? அவன் பேச்சுக்களைப் பயின்றது எப்படி? அவன் முதன் முதலிற் பேசிய மொழி எது? அவன் வகையார் இப்பொழுது எங்கு இருக்கின்றார்? அவ்வகையார் பேசும் மொழியிலே பழமை யுருவம் ஏதேனும் காண்கின்றதா? அம்மொழியின் பழமைக்கும் இன்று உலகில் வழங்கும் பிற மொழிகளின் அடிப்படைக்கும் உள்ள தொடர்பு யாது? இங்ஙனம் எழும் வினாக்களுக்கு விடை கூறுவது எளிதென்று மொழி நூலறிஞரே கூறத்துணியார்.

ஆரிய மொழியே உலக முதன் மொழி என்று கூசாது கூறுவர் சிலர். செருமனிய மக்கள் பண்டு பேசிய முது மொழியே உலக முதன் மொழி என்பர் சிலர். ருசிய மக்கள் பண்டைய மொழியே முதன் மொழி என்பர் சிலர். எம்மொழி உலகத்தின் முதல்மொழி என்பதை இன்னோரன்ன ஆராய்ச்சிகளால் நாம் முடிவு கட்ட இயலா

தாயினும்; உலகத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழியே உலக மக்களுக்குத் தாய்மொழி என்று சிறிதும் கூசாது கூறலாம். உலகத்தின் தாய்மொழி எதுவே ஆயினும் இன்று வழங்கும் மொழிகள் எல்லாம் அதன் கிளைகளே என்பதை நாம் மறுத்தல் இயலாது. ஒவ்வொரு மொழியிலும் அத் தாய்மொழியின் மணம் சிறிது இருக்கவே வேண்டும்.

# 2. அன்பரசு

அன்பு அரசு செய்க. அருள் தலைதூக்குக. இன்பம் எழுக. துன்பம் ஒழிக. வன்பு வளர்ச்சி பெருதழிக. நலம் சிறக்க. நாடு வாழ்க. மக்கள் வளர்க. விலங்குகளும் அழிவற வாழ்க. தீமை நீங்குக. செம்மை ஓங்குக. வாய்மை மலிக. நோய்மை கழிக. சேய்மையும் அண்மையும் மறைக. வேற்றுமை மறைக. ஒற்றுமை ஒளிர்க. வேண்டிய விழுச் செல்வம் எல்லாம் எவர்க்கும் எளிதில் வாய்ப்பன ஆகுக.

இன்று உலகை அரசுசெய்வது அன்பில்லை, வன்பே; அருளில்லை, பொருளே; இன்பில்லை, துன்பே; செம்மை இல்லை, சிறுமையே; நன்மை இல்லை, தீமையே; உண்மை இல்லை, பொய்மையே; வண்மை இல்லை, வறுமையே; அறம் இல்லை, மறமே; ஒளி இல்லை, மயக்கமே; பிறர்வாழ்வது கண்டு மகிழும் மனம் இல்லை, பிறர் தாழ்வதுகண்டு மகிழும் மனமே.

உலகவுயிர் எத்தனை கோடிஆயினென்? அத்தனை கோடிக்கும் தலைவன் ஒருவனே. இறைவன் ஒருவனே. அரசன் ஒருவனே. அவன் அன்பின் உருவம். அருளின் திருவுருவம். அறிவின் செறிவுருவம். ஒளியின் தெளி வுருவம். மாற்றமில்லாத தோற்றத்தின் உருவம். அளப் பரிய ஆற்றலின் ஒரு பேருருவம். அவன் ஆணல்லன், பெண்ணல்லன், அலியல்லன். உருவம் உள்ளவனும் அவனே. இல்லாதவனும் அவனே. காலம் இடம் என்ற எல்லைகளைக் கடந்த கடவுளும் அவனே.

கர்த்தா என்று அவனைக் கருதுவார் கருதுக. அல்லா என்றே அடைபவர் அடைக. அகாலன் என்று அணுகு வார் அணுகுக. ஏகன் அநேகன் அரி அரன் அயன் என்று இறைஞ்சுவாரும் இறைஞ்சுக. அவன் இலன் என்று கூறு வாரும் கூறுக. உளன் என்று உணர்வாரும் உணர்க. கருமை செம்மை வெண்மைகளையும் வெம்மை தண்மைகளை

யும் நன்மை தீமைகளையும் கடந்த அவன் அன்பே உருவமான ஒருமை அரசுபூண்ட ஆண்டவன் என்பதை உணர்வோம்.

உலகத்திலே பலவேறு நாடுகள் உள்ளன. பல்வேறு வகையான மக்களும் உள்ளனர். நாடு தோறும் மொழி வேறுபாடு இருப்பது போலவே கொள்கை வேறுபாடும் இருக்கக் காண்கின்றோம். நூற்றுக் கணக்கான கொள்கைகள் இருந்தாலும் உயிர்க் கெல்லாம் தந்தையும் தாயும் ஆனவன் ஒருவனே என்ற மெய்யுணர்வு படைத்த நன்மக்களும் நாடுதோறும் சிலரேனும் இருப்பர்.

அரசு ஒன்றாய் அமையாமல் நாடுதோறும் அரசு வேறு வேறாய் இருப்பதால், அவ்வவ் நாட்டு மக்கள் பண்பாட்டுக் கேற்ப ஆங்காங்கு அரசு நிகழ்கின்றது. எந் நாட்டரசும் அந் நாட்டு மக்களின் நலத்துக்கு மாறான வழியில் நிகழ்வது இல்லை. வேற்று நாட்டார் ஒரு நாட்டை அடிப்படுத்தாளும் அரசிலும் சில நன்மைகள் இருக்கவே செய்யும். ஆனால் எந்த நாடும் தனக்கு வரும் நலம் எல்லாம் தன்னை அடுத்த அயல் நாட்டுக்கும் வருக என்று நினைப்பது இயல்பில்லை. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கருத்து, உயர்ந்தோர் நெஞ்சில் உதித்த ஒரு பெருங்கனவே.

நாம் நெல்லும் நீரும் குறைவின்றி வாழ்வது போலவே நம்மை அடுத்த நாட்டாரும் வாழவேண்டும். அயல்நாட்டு மக்கள் நம் நிலைக்குச் சிறிதும் குறைவுறாத நிலையில் வாழ்ந்தாலன்றி நம் வாழ்வு நமக்கே இன்பம் விளையாது. பாண்டிய நாட்டார் செழிப்பு மிகுந்து இந்திர விழாக் கொண்டாடும்போது, சோழநாட்டார் நோயில் ஆழ்ந்து பஞ்சத்தில் இறந்தால், பாண்டிய மக்கள் அயல் நாட்டார் துயரைப் பற்றி நாம் ஏன் வருந்த வேண்டும் என்று கண்மூடிக் களியாட்டம் ஆட முடியுமா? சேரநாடு கடலுள் மூழ்கினால் தென் பாண்டிநாடு திருவிழாக் கொண்டாட முடியுமா?

சிறு நாட்டு எல்லைக்குள் விளையும் ஏற்றத்தாழ்வுகள் அயல் இருப்பார் மனத்தை உருகச் செய்வது போலவே, நெடுந் தொலையில் இருக்கும் மக்களுக்கு உண்டாகும் துயரும் நம் உள்ளத்தை உருக்க வேண்டும்.

உலகத்தின் நாடுகள் எல்லாம் ஒரு அரசின் கீழ் அடங்கியிருந்த காலம் என்றும் இருந்ததில்லை. இனி என்றேனும் அந்நிலை உலகத்துக்கு வரலாம் என்ற உறுதியும் இல்லை. இன்று உலக அரசியலில் உள்ள அரசுகளின் நிலையும் போக்கும் நாம் அறிந்தனவே. இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பு இவ்வரசுகள் எங்ஙனம் இருந்தன என்ற உண்மையை உணர விரும்புவோர் வரலாற்று நூல்களுட் புகுந்து ஆராய வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னே இவை எப்படி இருக்கும் என்பதை மனக் கண்ணால் ஒருவாறு அறியலாம்.

இன்று உலகில் உள்ள அரசுகளைச் சில வகைகளில் அடக்கலாம். நம் இந்திய நாட்டின் அரசுபோல் நிகழும் குடியரசு வகை ஒன்று. இங்கிலாந்து முதலிய நாடுகளைப் பாராளு மன்றத்தின் உதவிகொண்டு அரசர் ஆட்சி புரியும் முறை மற்றொன்று. பல நாடுகளை ஒரு கொள்கைக்கு உட்படுத்தி மக்களை ஆள்வதாக உரைக்கும் ருசிய அரசு போன்ற பொதுவுடைமை அரசு வேறொன்று. போர்க் குழப்பத்தால் ஒரு பெரு நாட்டைத் துண்டாடி இரு வேறு நாட்டார் மேலிருந்து அழுத்திக் கொண்டு குடி மக்கள் மனப்போக்கு உணர இயலா வண்ணம், இரு வேறு பிரிவாக நிகழும் செருமனிய அரசு போன்ற அரசின் வகை இன்னொன்று. ஒரு பெரு நாட்டின் அழுத்தத்தால் தனது பண்டைய நிலையை இழந்து என்று நம் உயிரைக் காண்போம் என்று கனாக் கண்டு கொண்டிருக்கும் ஜப்பான் அரசு போன்ற அரசு மற்றொன்று. குடிகளுக்குள்ளே பல கட்சிகளும் ஆள்பவர் வகையில் இரண்டு மூன்று பிளவுகளும் அமைந்து ஒழுங்கு முறை இன்னது என்று அறியாது நிகழும் அரசு வகை பிறிதொன்றாம்.

இவ்வரசு வகைகளில் எந்த வகையாக இருந்தாலும், அந்தந்த நாட்டில் வாழும் மக்கள் கல்வி செல்வம் குறைவறப்பெற்று வாழவேண்டும் என்ற கருத்து எங்கும் பொதுவாக உள்ளதே. ஆயினும் முன்னாளில் நம் நாட்டில் இருந்ததாக உரைக்கப்படும் முடியரசு முறை இன்று உலகில் எங்கும் இல்லை என்றே கூறலாம். முடியரசில் தலைவன் ஒருவனே ஆயினும் அவன் மனம் போல் அரசு நிகழ்த்தலாம் என்று நமது அறநூல்கள் எங்கும் உரைக்கவில்லை. குடிகளை மக்களாகக் கருதி அரசன் தந்தைபோல் அன்பு விளக்கி ஆண்ட அரசு முறையே சிறந்ததென்று ஒரு காலத்தில் உலகம் நினைத்தது. இன்றைய உலகத்தின் நினைப்பு இதற்கு முற்றிலும் மாறுபட்டுளது.

அரசு எந்த வகையைச் சேர்ந்ததே ஆயினும் நாட்டு மக்களுக்கு உணவு, உடை, உறையுள் என்ற மூன்று அடிப்படை நலன்கள் குறைவின்றி அமையும்படி பார்க்கவே வேண்டும். நூறு மக்கள் வாழத்தக்க நிலத்தில் ஐஞ்ஞூறு மக்கள் வாழநேர்ந்தால் நிலம் என்னும் நல்லாள் எல்லா மக்களையும் வயிறார உண்பிக்க இயலாது. எம் நாட்டில் இன்று உள்ள மக்கள் தொகுதி உணவு உடை உறையுள் பற்றாக்குறையால் வருந்துதலாலே, நாங்கள் அயல்நாடுகளிற் குடியேறி வாழும் உரிமையை எங்கள் குடிகளுக்கு அளிக்கிறோம் என்று ஒரு நாடு கூறுவது இயல்பே ஆகும்.

பலகோடி மக்கள் வாழும் உலகத்திலே உணவும் வளமும் செழித்த நிலப்பகுதிகள் எவ்வளவு என்பதும் மக்கள் தொகை எவ்வளவு என்பதும், உலகவுணவு உலக மக்கள் எல்லார்க்கும் போதுமளவு அமையுமா என்பதும் பொருள் நூற் புலவர் ஆராயவேண்டும். இந்த ஆராய்ச்சியின் பிறகு எந்த நாட்டில் செழித்த நிலங்கள் மிகுந்திருந்தும் மக்கள் தொகை மிகக்குறைவாய் உள்ளது என்றும், நிலம் குறைந்திருக்க மக்கள் தொகை மிகுதி எங்கு என்றும் ஆராய வேண்டும். நடுநிலை மனப்பண்புள்ள நன்மக்கள் நன்கு

ஆராய்ந்துமுடிவு கட்டிய பிறகு குறைமிக்கநாட்டு மக்களின் மிகுதியானதொகையினர் செழித்தநாட்டுப்பகுதிகளிற் குடியேறி அந்நாடுகளைத் தம் நாடுகளாகக் கருதி வாழலாம். குடியேற்ற முறையில் ஒரு சிறு வம்பு இயல்பாகவே வரும். ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் அமெரிக்கா நாட்டிலும் மக்கள் குறைந்தும் நிலம் மிகுந்தும் இருப்பது கண்டு சிலநாட்டு மக்கள் குடியேறினர்.

இங்ஙனம் குடியேறிய மக்கள் பண்டை நாளில் அந்நாடுகளில் வாழ்ந்த மக்களை நசுக்கித் துடைத்து உருத்தெரியாமலே அழித்துவிட்டார்கள். தம்மைப்போலவே பிறநாட்டு மக்கள் அந்நாடுகளிற் குடியேறி வாழவந்தால் அவர்களுக்கு உவப்போடு இடம்தந்து வரவேற்க விரும்பாது இருக்கிறார்கள். இந்த நாடுகளில் வெள்ளை இனம் கரிய இனம் என்ற பிணக்குப் பெரிதாக நிகழ்கிறது.

உலகம் ஒரு பேரரசின்கீழ் இருந்தால் குடியேற்றத்தில் விளையும் இக்குழப்பங்கள் தோன்ற இடம் உண்டா? செழித்த சில பெருநாடுகளை ஒருசில மக்கள் கைப்பற்றிக் கொண்டு முற்றாட்டாக ஆண்டுகொள்ளவும், இடம் பற்றாத நாடுகளிலே கோடிக்கணக்கான மக்கள் புற்றீசல் போலவே பிறந்து மடியவும் அமைந்த இந்நாள் வாழ்வு நிலையை மாற்ற வழி உண்டா?

அன்பு உலகத்தை அரசாளப் புறப்பட்டால் இந்த வம்புகள் எல்லாம் மறையும்; குறையும். ஒவ்வொரு நாட்டின் அரசும் அவ்வந்நாட்டின் மக்கள் மனப்போக்கின்படி நிகழ்வதால் எவர்க்கும் எவ்வகை இடையூறும் இல்லை. செழித்த நாடுகள் வறியநாட்டு மக்களை அன்போடு வரவேற்று வாழ இடம்தருவது என்ற நெறிமுறை அறம் உலக அரங்கில் ஆட்சிபுரிய வேண்டும். இனப்பகையும் நிறப்பகையும் உலகைவிட்டு ஒழிந்தால் அன்றி, அன்பு அரசுபுரிய முடியாது.

அமெரிக்க நாட்டார் செல்வக் கொள்கையும் வாழ்வுக் கோட்பாடும் ஒன்ருய் இருக்கலாம். ருஷிய நாட்டார் செல்வக் கொள்கையும் வாழ்வுக்கோட்பாடும் வேறொன்ருய் இருக்கலாம். பிரிட்டிஷ் நாட்டார் செல்வக் கொள்கையும் வாழ்வுக் கோட்பாடும் இன்னென்ருகவே இருக்கலாம். நம் இந்திய நாட்டின் அரசியற் கொள்கையும் அரசியல் அறநிலைக் கோட்பாடும் முற்றிலும் வேருக இருக்கலாம்.

நால்வகையாகத் தோன்றும் இவ்வேற்றுமைகளை ஒற்றுமைப்படுத்தி, உலகம் ஒன்ருக வாழும்படிசெய்ய இயலாதா? அவரவர் கொள்கையை அவரவர் உறுதியாக நம்புவது எந்நாளும் தவறு என்று கருதப்படாது. தம் கொள்கைக்கும் பிறர் கொள்கைக்கும் இணக்கம், மோதுதல் உண்டாக நேரும்போது எப்படி நடந்துகொள்கின்ருர் என்பதே நாம் நினைக்கவேண்டிய பொருளாம்.

பாம்பைக் கண்டதும் மனிதன் நடுங்குகிருன். பாம்பு மனிதனைக் கண்டதும் நடுங்குகிறது. பாம்பு 'நான் உயிர் வாழவேண்டும்' என்றே எண்ணுகிறது. மனிதன் 'நான் உயிர் வாழவேண்டும்' என்றே எண்ணுகிருன். 'இது பாம்பு! நஞ்சுள்ளது; என்னைக்கொன்றுவிடும். இது என்னைக்கொல்ல வரும்முன்பு நான் இதனைக் கொன்றுவிடவேண்டும்' என்று மனிதன் தடியை எடுக்கிருன். பாம்பும் 'இந்தப்பாவி என்னைக் கொல்லவருகிருனே, நான் சாவாது பிழைக்க வேண்டுமே, இவனைக் கடிக்கவே வேண்டும்' என்று படம் எடுக்கிறது. பாம்பும் கடிக்கிறது. மனிதனும் அடிக்கிருன். பாம்பும் சாகிறது. மனிதனும் சாகிருன். இவன் தடியை எடுக்காதிருந்தால் பாம்பு படம் எடுத்திருக்குமா? தன்னைக் கொல்லவருகிருன் என்ற உணர்ச்சி அதன் உள்ளத்தில் தோன்ருதிருந்தால் அது அவனைக்கொன்று தானும் செத்திருக்குமா?.

ஒரு நாடு தானே மனிதன் என்று நினைத்து அயலிருக்கும் நாட்டைப் பாம்பு என்று நினைக்கிறது. இந்த எண்

ணத்தை அந்த அயல் நாடும் மாற்றிக்கொள்கிறது. இந் நாடு என்னை விழுங்கிவிடுமே! நான் என்னை நன்கு காத்துக் கொள்ள வேண்டுமாயின் இதனை அழித்தே ஆகவேண்டும். அயல்நாடு அழியாவிட்டால் நான் வாழமுடியாது. ஆகவே நான் என் படையை வளர்க்கவேண்டும். என்ற எண்ணம் உண்டாகிறது.

இன்று உலகில் நிகழும் அணுகுண்டுக் குவியலை வளர்க் கும் பெருமுயற்சி, வல்லரசுகள் என்று தம்மைத்தாமே மதித்திருக்கும் இருவேறுதிறத்தரசுகள் ஒன்றையொன்று விழுங்கநினைக்கும் நினைப்பால் எழுந்ததே. இந்த நினைப் புக்கு அடிப்படைக் காரணம் அச்சமே. அந்நாடு நம் நாட்டை அழித்துவிடுமோ என்று நாம் அணுகுண்டு செய் தால், இதே உரிமையை அந்நாடும் தேடிக்கொள்கிறது. ஒரு நாடும் தன் கொள்கையைக் கைவிடாமல் பிறநாடுகளுக் குத் தீங்கு விளைக்க நினையாமல் தனக்கே தீங்குவர இடம் தராமல் வாழவேண்டும் ஆயின், ஒவ்வொரு நாட்டிலும் இன்று அரியணையில் வீற்றிருக்கும் வன்பு அரசை இனிய மொழிகளால் காட்டுக்கு ஓட்டிவிட்டு, அன்பு அரசை அரி யணையில் ஏற்றவேண்டும்.

நாமும் நன்கு வாழ்வோம். பிறரும் நம்மைப்போலவே நம்மினும் நலமாகவே வாழ்வதால் நமக்கு எவ்வகைக் குறை யும் இல்லை. நாம் பிறர்க்கு நம்மால் இயன்ற உதவிகளைப் புரிவோம். பிறர் நமக்கு உதவ விரும்பிவந்தால், ஏற்றுக் கொள்வோம். மனித இனத்தை மனிதத்தன்மை குன்றா மல் வாழச்செய்வதற்கு உலகம் எங்கும் அன்பரசு நிகழ வேண்டும். மனிதஇனத்தை விலங்கினத்திலும் இழி வாக்க முயலும் அழிவுக்கொள்கைகள் அன்பரசின் ஆட்சி யில் இருக்க இயலாது.

# 3. வெறுப்புக் கொள்கை

எலியைப் பாம்பு விழுங்குவது இயல்பு. எலி நம் வீடுகளில் வளை செய்து நமக்குரிய உணவுப்பொருள்களைத் திருடுவதே அன்றித் தெள்ளுப் பூச்சியால் நோய்ப்பட்டு இறந்து நம் குடியையே கெடுக்க வழி செய்வதும் இயல்பே. பூனை எலியினத்தையே ஒழிக்க முயல்வதும் இயல்பாகும். அழகிய புற்றுக்களை எழுப்பி அரசியல் முறைப்படி அமைதியுற வாழ்ந்த சிதலையைக் குடியோடு கொன்று புற்றுக்குட் பாம்பு குடி புகுவதும் இயல்பென்றே நினைக்கிறோம். அரும்பாடு பட்டுத் தூக்கணங் குருவி கட்டிய கூடுகளைக் குரங்குகள் எளிதாக அழித்து ஒழிப்பதும் இயல்பென்றே தோன்றும். வன விலங்கு வகைகள் பசும்புல் மேய்ந்து வாழ அறியாமல் ஒன்றையொன்று கொன்று விழுங்கி உயிர் வாழ்வதும் கடவுள் செயலே என்று எண்ணுகிறோம்.

அன்பும் அருளும் அறிவும் ஆற்றலும் தனது உருவமாக உடைய ஒரு கடவுள் உண்டு என்று உலகத்து மதங்கள் எல்லாம் உரைக்கின்றன. எல்லா உயிரும் அவன் படைப்பே என்று கூறாத மதங்கள் இல்லை. அவன் படைத்த உயிர்களில் வலியவை எளியவைகளை வாட்டி வருத்தி விழுங்கி வாழவேண்டும் என்ற நெறியை அவனே அமைத்து வைத்தானா? உயிர்களுள் அறிவு மிக்க இனம் என்று மதிக்கப்படும் மனிதன் இயல்பாகப் பிற வுயிர்களைத் தன்னால் அடக்கி யாள இயலாமை கண்டு, அவைகளைத் தனக்குக் கீழ்ப்படுத்தும் பொருட்டே படைகளை ஏந்தினான். தற்காப்பாக உதவுக என்று எடுத்த படைகள் வயிற்றை வளர்க்க உயிர்களை வாட்ட உதவுவன ஆயின. அவ்வளவேயோ, தின்ன உதவாத விலங்குகளையும் வேட்டையாடிக் கொன்று அவை துடித்து விழுந்து இறக்கும் காட்சி கண்டு மகிழ்வதற்கும் உதவுவன ஆயின. வேட்டை என்ற தொழில் முதலில் உணவு தேட அமைந்ததே ஆயினும்,

பிறகு பொழுது போக்கும் உடற் பயிற்சி போல ஆகி, எண்ணற்ற உயிர்களுக்கு இறுதி விளைப்பதாய் முடிந்தது. விலங்குகள் ஒன்றை யொன்று கொன்று வாழ்வது போல மனிதன் விலங்குகளைக் கொன்று வாழப் பழகினன். இயல்பாக இப்படி மனிதன் எடுத்த படைக்கலம், பிறகு போர்த் தொழிலுக்கும் பயன் படுவதாகி, இன்று தன் இனத்தையே மூல நாசம் செய்ய உதவுவதாயிற்று.

ஒன்றை ஒன்று கொன்று வாழ வேண்டும் என்ற நெறி ஒவ்வொரு உயிரின் உள்ளத்திலுங் அச்சத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த வெறுப்பின் பயனக விளைந்ததே. 'நான் இவனை அழியாவிட்டால் இவன் என்னை அழித்து விடுவான்' என்று இரண்டாம் மனிதன் இருக்கும் அளவும் மனிதன் நினைக்கவே செய்வான். விலங்குகள் ஒன்றை ஒன்று கொல்ல நினைத்தால், பல் நகம் முதலிய படைகளைப் பயன்படுத்துகின்றன. ஒரு விலங்கு மற்றொரு விலங்கைப் பகைத்தால், தன் ஆற்றல் முழுதும் காட்டி நேர்மையாகப் போர் புரிந்து, அவ்வொரு பகை விலங்கையே கொல்லும். விலங்கினத்துள் ஒன்று ஆயிரக் கணக்கிலே கூடி மற்றொரு இனத்தை அழிக்கப் போர் புரியும் கதை அவைகளின் வரலாற்றிலேயே இல்லை.

விலங்கினம் குறுக்கே வளர்ந்து அறிவுச் சிறப்பு அமையாத குறையால், ஒன்றை ஒன்று கொல்லும் அளவில் வெறுப்பு பகை என்ற நோய்களை விரைவில் மறந்து விடுகின்றது. விலங்கினத்தினின்று உயர்ந்து அறிவுச் செல்வம் படைத்து நிமிர்ந்து வளர்ந்த மனித இனமோ, ஒருவனை ஒருவன் கொல்லும் சிறு பகையளவில் அடங்கி விடாமல், நூறாயிரக் கணக்கான மக்களை ஒரு பெரும் போர்க் களத்தில் வதைக்கவும் அதற்கு நியாயம் கற்பிக்கவும் துணிகின்றது. எங்கேயோ போர் நிகழ்ந்து கொண்டிருந்தபோது ஹீரோசிமா என்ற நகர்ப்புறத்தில் அணுகுண்டை எறிந்து ஜப்பானிய மக்கள் உயிரையும் மானத்தையும் ஒழித்த

பெருமை மனிதன் பயின்ற போர்த் துறைகளின் விளைவாக முற்றி யெழுந்த கொடிய நஞ்சேயாம்.

வெறுப்பு விளையலாம், பகை எழலாம்; ஒருவரை ஒருவர் அழித்து அமையாமல், பலரை அழிக்கவே துணியலாம். அந்த நிலையிலும் சில நெறி முறைகள் இருக்கவே வேண்டும் என்று தமிழ் மக்கள் கருதினர். "ஐய, நாங்கள் உங்கள் நாட்டிற் படை யெடுத்து வரத் துணிந்திருக்கிறோம். படை எடுக்கத் தெரிந்த ஆடவர் படையேந்திக் களங்களுக்கு வருக. தம்மைத்தாமே காத்துக்கொள்ள அறியாத ஆவினமும் ஆவினம் போன்ற நற்பண்பே படைத்த நன்மக்களும் பெண்மக்களும் பிணியாளரும் மக்கட் பேறு பெறாதவர்களும் தக்க காவல் உள்ள இடங்களில் ஒளிந்து கொள்க" என்று பகை நாட்டில் விளம்பரப் படுத்திய பிறகே போர் தொடங்குவது தமிழர் போர் முறையாகும்.

ஆரியர் போர் முறையிலும் ஒரு சிறப்பு உண்டு. பகைவன் சிறந்த வலிமை படைத்தவனே ஆயினும், அவன் படைஞரை இழந்து களத்தில் எறியும் படைகள் எதுவும் இன்றி வெறுங்கையாக நிற்கும் நிலைகண்டால் "அப்பனே இன்று நிகழ்ந்தபோர் இவ்வளவில் நிற்கலாம். நீ வலியிழந்து பொலிவிழந்து வெறுங்கையனாக நிற்கும்போது உன்னை என் படைகொண்டு தாக்க மாட்டேன். இன்று நீ உன் நகர்க்குட் சென்று வேண்டிய படைகளைத் திரட்டிக்கொண்டு நாளை இக் களத்திலே போர் புரிய வருவாயாக" என்று விடை தரும் வழக்கம் உண்டு. பெரும் போரில் ஈடு கொடுத்து நிற்கும் மறத்தைப் பேராண்மை என்று கூறிய திருவள்ளுவர், பகைவனுக்கு உயிர்ப்பிச்சை தந்து அளிக்கும் இப் பெருந்தகைமையை ஊராண்மை என்று கூறி உலகுக்கே நன்னெறி காட்டுகின்றார். உள்ளத்தில் எத்தனை வெறுப்பு இருந்தாலும் போர் நிகழும்போது இந்த அறநெறியைக் கடைப் பிடிப்பதே சிறப்பு என்று நன்மக்கள் வகுத்து வைத்தனர்.

முன்னாளில் நிகழ்ந்ததாக நாம் நினைக்கும் இப்போர் முறைக்கும் இன்று உலகெங்கும் நாம் காணும் போர் முறைக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. இந் நாளில் பலவகைக் குண்டுப் படைகள் வானத்திலிருந்தே மழை போல விழுந்து, நிலத்தில் இருக்கும் படைகளை எளிதில் அழிக்கலாம். நிலப்போரிலும் ஒருவரை ஒருவர் நேரிலே காணுமற் பள்ளங்களில் மறைந்து போர் புரிய வேண்டும். அப்படி மறைந்திருக்கும்போதும், வான் வழியே வரும் குண்டுகள் பல்லாயிரக்கணக்கான படைஞரை ஒரு நொடி யில் அழிக்கக்கூடும். நோய்களைப் பரப்பும் சிற்றுயிர் வகை களை வானத்திலிருந்தே சிதறுவதாலும் போரில் ஈடுபடாத மக்களும் நோய்களால் அழியும்படி செய்ய இடம் உண்டு. நச்சுக்காற்றுக்களை எழுப்பும் குண்டுகளை எறிந்து பலபடை ஞரை நொடியில் அழிப்பதும் உண்டு. வான ஊர்திகள் குண்டு களை எறிந்து அழிவு செய்யும் நிலையை நாம் சென்ற பெரும் போரின் பிறகு இங்கிலாந்து, செருமனி, பிரான்ஸ் முதலிய நாடுகளிலும் ஜப்பானிலும் கண்டோம். விஞ்ஞானத்தின் விளைவாக எழுந்த புதுப் படைகள் பகைவனை நேரிற் பாரா மலே பல்லாயிரக் கணக்கில் அழிக்கவே உதவுகின்றன. வானப் படைகளுக்கு அஞ்சியே நம் நாட்டு நகர்களில் நினைத்த பக்கம் எல்லாம் ஒளியும் இடங்களும் தண்ணீர் நிரப்பி வைக்கும் பெரிய தொட்டிகளும் அமைத்து வைத் தோம். இன்னும் அத் தொட்டிகள் பெரும் போரின் ஞாபகச் சின்னங்களாகப் பெரு நகரங்களில் நிலைத்துள்ளன.

அச்சத்தால் எதிர்த்தவனை அழிக்க எழுந்த வெறுப் புணர்ச்சி, மனித இனத்தில் இன்று விளைந்திருக்கும் பெருங்கேட்டை, அறிவுடைப் பெருமக்கள் நினைத்து நினைத்து மனம் உருகுகிறார்கள். "இந்த அணுகுண்டு சகாப்தம் இன்னும் என்னென்ன தீங்குகளை விளைக்க இருக்கிறதோ! புதுமை புதுமையான உருவத்திலே தோன்றும் இக்குண்டுகள் அமெரிக்காவிலும் ருஷியா விலும் மலை மலையாகக் குவிகின்றனவே. இங்கிலாந்திலும்

எழுகின்றனவே. அணுசக்தி, மின்சார சக்தியினும் சிறந்ததோர் ஆக்கத்திறமாக ஒவ்வொரு நாட்டிலும் உதவும் காலம் வருமா? அணுசக்தி உலகத்தின் ஒவ்வொரு நாட்டுக்கும் எந்தெந்தப் புதுமை வழிகளில் நலம் விளைக்குமோ; என்று நினைக்கிறார்கள். 'உலகம் எங்கும் எப்புறம் திரும்பினும், படைக்கடல் பெருகுவது எதன் பொருட்டு? படைக்கடல் அலை முழக்கத்தோடு உலகத்தை வளைந்து முன் நிகழ்ந்த இரண்டு பெரும்போர்களைப் போல மற்றொரு பெரும் போரை விளைத்து விடுமாயின் அணுகுண்டரக்கன் துணை பெற்ற இக் கடல் உயிரினமே இல்லாமல் உலகத்தைப் பாழாக்கி விடுமே!' என்ற பெருங் கவலை நன் மக்கள் உள்ளத்தில் எழுந்துளது. இக் கவலை ஒழிய வேண்டுமாயின் மக்களுள் ஒருவரை ஒருவர் காரணம் இருப்பதாக நினைத்தோ காரணம் இன்றியேயோ வெறுக்கும் பகை யுணர்ச்சி ஒழிய வேண்டும். பெருந் தொகையில் மக்களைப் பிழிக்கும் இப் பகை யுணர்ச்சி ஒழியும் முன்பு மற்றொரு வகையான பகை யுணர்ச்சி ஒழிந்தாக வேண்டும்.

உலக மக்களை நிறம் காரணமாக நான்கைந்து வகையாகப் பிரிப்பது உண்டு. ஒரு தாய்ப்பூனை நான்கு குட்டிகளை ஈன்றதில், ஒவ்வொன்றும் வெவ்வேறு நிறமாய் இருப்பதால், அவை வேறுவேறு இனம் என்று பிரிபடாதது போல, உலக மக்கள் நிறம் காரணமாகக் கற்பனையாக எழுந்த பிரிவுகளை மறந்து ஒன்றுபடும் காலம் வரவேண்டும். ஒரு வீட்டுள் வாழும் ஒரு குடும்பத்துள் அண்ணன் தம்பியையும் தம்பி அண்ணனையும் வெறுக்கிறான். முன்னோர் வைத்த செல்வம் இருந்தால் ஒரு தாய் வயிற்று மக்கள் அச் செல்வத்தைத் தம்முட் பிரித்துக் கொள்ளும் போது மூத்தவனுக்குச் சிறிது குறைந்தாலென், இளையவனுக்கே குறைந்தாலென் என்ற அன்பு உணர்ச்சியோடு பிரித்துக் கொண்டு ஒற்றுமைக்குக் கேடு விளையாமல் வாழ்வது சிறப்பாம். இன்று நாட்டில் உள்ள வழக்கறிஞர் எல்லாம் வழக்

கூறி மன்றங்கள் எல்லாம், கொழுத்து வளர்வது எதனால்? கிராமத்திலிருந்து எழுந்த வழக்கு டில்லிமா நகரம் வரையில் நடந்து குடும்பத்தின் செல்வம் அழிந்த பிறகும் முடியா திருப்பது எதனால்? சிறு நிலம் ஒன்றின் வரப்பு மூன்று அங்குலம் கிழக்கே சென்றதால் ஒரு குடியே பாழாகும் வழக்கு விளையலாமா? உடன் பிறந்தவர்க்குள்ளே இத்துணை வெறுப்பு எழுந்து குடியைக் கெடுக்கும் அளவுக்குப் பகை முற்றுமாயின் அயலார் இருவர் மோதிக் கொள்ளும்போது முடிவு என்னாகும் என்று கூறவும் வேண்டுமா!

அயலரசு ஒன்று இந்தியப் பெருநாட்டை ஆண்ட கதையை இன்று மறந்து விட்டோம். அதன் விளைவுகள் ஒன்றும் இன்னும் மறையவில்லை. அவ்வரசு இங்கு நிகழ்வதற்கு அரசினர் ஒரு சிறு சூழ்ச்சியைக் கையாண்டனர். ஆளப்படும் மக்கள் எல்லாம் ஒற்றுமைப்பட்டால் நமக்குக் கேடாக முடியுமே என்று எண்ணி, ஆளும் இனத்தார் என்ற உணர்ச்சியால் இந் நாட்டில் உள்ள பலவகை மக்களிடையே ஒற்றுமையுணர்ச்சி குறைபட்டு வேற்றுமை விளைவதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைக் காலம் இடம் அறிந்து செய்தார்கள்.

வட நாட்டில் இந்து முஸ்லீம் என்ற இன வேற்றுமை நன்கு வளரும்படி செய்து, ஒன்றாக இருந்த பெரு நாட்டைத் துண்டாடிப் பிரிந்துபோகும் அளவுக்குச் சூழ்ச்சிகள் நிகழ்ந்தன. அங்ஙனமே தென்னாட்டில் ஆங்கிலக் கல்வியின் பயனை முதற்கண் பெற்று அரசினர் தரும் சிறு சிறு ஊழியங்களை எளிதில் ஏற்றுக்கொண்டு மேல் வந்த ஒரு சிறு பான்மை வகுப்பினரைப் பெரும் பான்மையாக உள்ள மற்ற வகுப்பினர் எல்லாம் வெறுத்து எதிர்க்கத்தக்க நிலைமை எழுந்தது. தமிழகத்தில் எத்தனையோ தலைமுறையாக வாழ்ந்து தமிழே பேசித் தமிழே கற்றுத் தமிழராகவே இருக்கின்ற இச்சிறுபான்மை வகுப்பினரை அரசினர் தரும் சலுகைகளை மிகுதியும் பெற்ற இனமாகக்கருதி எழுந்த

வெறுப்பு இன்று திராவிடத்தானம் என்ற தனி நாடு கேட்கும் நிலைக்கு முற்றிவிட்டது. பல்லாண்டாக ஒரு நாட்டில் அடுத்தடுத்த வீடுகளில் வாழ்ந்த மக்களிடையே இவ் வெறுப் புணர்ச்சி எழுந்தது. எவர் முயற்சியால் ஆயினும் அறிவுடைப் பெருமக்கள் இனியும் இவ்வுணர்ச்சி முற்றாது அடங்கி, அன்புணர்ச்சி பெருகும்படி செய்யவேண்டும். இன்று கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் கற்றுத் தேர்ந்து வெளிவரும் எல்லார்க்கும் அரசினர் ஊழியம் அமைக்க இயலாது. இந்த நிலையில் நாம் ஒரு தாய் வயிற்று மக்கள் போல் ஒட்டிப் பயின்று நம்முள் எழுந்து வளர்ந்திருக்கும் வெறுப்புணர்ச்சியை ஒழித்தால் நம் நாட்டின் பெருமை உலகம்போற்றும் நிலைமை அடையும்.

# 4 தவம் செய்த தவம்

கற்கள் மலையில் உள. மலைமேற் காட்சி தரும்போது அவை ஒருவகை அழகுற்றிருப்பதாகவே நினைக்கிறோம். கற்களுக்கு அழகு, ஒளி, குழைவு, இழைவு முதலிய பண்புகளையேற்றி உயிர்தந்து, நம்மோடு உரையாடி இன்பதுன்பங்கள் அடைவனபோலக் காட்சி தரும்படி அமைக்கும் கலையே சிற்பக்கலையாம். அவ்வண்ணமே சொற்கள் நாடு முழுதும் நடக்கின்றன, ஓடுகின்றன, பறக்கின்றன, பாய்கின்றன, இரங்குகின்றன, ஏங்குகின்றன, முழங்குகின்றன. அவைகளை நாம் காணும்போது தெருவிலே சிதறிக்கிடக்கும் கற்களுக்கும் அவைகளுக்கும் மிக்க வேற்றுமை இருப்பதாக உணரமாட்டோம். மலையிற்கிடந்த கல்லை ஒரு கலையால் ஒரு கலைஞன் சிற்பமாக்கிச் சிரிக்கவும் அழவும் செய்தான். அவனைப்போலவே மற்றொரு பெருங்கலைஞன் மக்கள் வாயிலே வழங்கிய பொதுத்தன்மை பூண்ட சொற்களைத் தனது கற்பனைக் களஞ்சியத்துட் சேர்த்து உயிர் உணர்வு ஊட்டி இழைத்துக் குழைத்து வடித்து தெளித்து நயப்படுத்தி முறுக்கேற்றி உயிர்தந்து நடமாடச் செய்கிறான்.

கவி என்ற சொல் வடமொழியாளர் கருத்திற்கிணங்க இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற முக்காலங்களையும், சேய்மை அண்மை நடுநிலை என்ற மூன்று இடங்களையும், நன்கு உணர்ந்து வெளியிடவல்ல கலைஞனையே உணர்த்துவது. கவிதைக் கலை ஒருவருக்கு எளிதில் வாய்ப்பதன்று. சொற்செல்வம் படைத்துப் பொருட்செல்வத்தை உலகுபெற உதவும் பெரும்பேறுபெற்ற புண்ணிய மூர்த்திகளையே கவிஞர் என்று கூறுவது பொருத்தமாம். இத்தகைய அரும்பிறவிகளில் முன்னும் பின்னும் தோன்றிய பல மாபெரும் புலவரைத், தனது சொற்கலையால் வென்று உயர்ந்த கம்பர் என்ற கவிசிகாமணியைத் தமிழ்மொழி வழங்குமளவும் உலகம் மறக்க இயலாது. இப்புலவர் ஆண்ட சொற்களுக்

குத் தனித் தன்மை உண்டு. தனிச்சிறப்பு உண்டு. தனிப் பண்பு பண்பாடு அழுத்தம் அகலம் ஆழம் உள்ளுறை எல்லாம் உண்டு.

தவம் என்ற சொல் திருவள்ளுவர் திருவாக்கில் அடிப்பட்ட பெருமை உள்ளதே. அவர்க்கு முன்னும் தமிழ் மொழியில் வழங்கியதே. கம்பர்க்குப்பின் வந்த புலவர் பலரும் அம்மொழியை ஆண்டு பயன்படுத்தியே இருக்கின்றனர். ஆயினும் கம்பர் வாக்கில் அம்மொழிபெற்ற பெருமை வேறு எங்கும் பெறவில்லை என்று துணிந்து கூறலாம். தவம் என்று தனியே நிறுத்தி அதன் சிறப்பை வெளியிட்டதேயன்றித் தவம் செய்த தவம் என்ற தொடர் மொழியாக இசைத்தும் அம்மொழியின் சுவைகளை நாம் நன்கு உணர்ந்து இன்புறும்படி செய்துள்ளார்.

வள்ளுவப் பெருந்தகையார் தவம் என்ற சொற்குப் பொருள் கூறுவார்போல ஒரு குறள் அமைக்கிறார். தவத்தின் சிறப்பைப் பல குறள்களாற் கூறுகிறார். அவர் கருத்தின் வண்ணம் தவம் என்பது பிறரால் தனக்குவந்த வருத்தம் எதனையும் பொறுத்தலும், பிற உயிர்களுக்கு எவ்வகைத் தீங்கும் இயற்றாமையும் ஆகும். தவத்தின் உண்மையுருவம் இந்த இருவகைப்பட்ட சாயலை உடையது என்று அப்புண்ணியர் தம் தெளிந்த மொழிகளால் தெளிவிக்கிறார். முதற்கண் தவத்துருவம் இது என்று உரைத்த புலவர் அதன் வண்மைகளையும் பெருமைகளையும் கூறக்கருதி "வேண்டாதவரை அழித்தலும் வேண்டியவரை ஆக்கலும் தவத்தால் இயலும். வேண்டிய வாழ்வுகளை வேண்டியவாறு அடைதலால் தவம் முயலப்படும். தவம் செய்பவரே தம் கருமம் செய்பவர். மற்றவர் எல்லாம் ஆசையுள் அகப்பட்டு அவம் செய்பவரே. துன்பம் தம்மைச் சுடச்சுட மேன்மேலும் தவநோன்பு பூண்டிருப்பவர்க்கு நெருப்பில் இட்டுக் காய்ச்சக் காய்ச்ச ஒளிவிடும் பொன்போன்ற ஒளி படரும். தவத்தின் சிறப்பு அடைந்தவர் கூற்றுவனையும் வெல்லலாம். இவ்வுலகில் வறியவர் பலராய் இருக்கக் கார

ணம் முன்பு தவம் செய்தவர் சிலர்; செய்யாதவரே பலர்'' என்று பலபடியாக உரைத்திருக்கிறார். மேலும் 'இத்தகைய தவம் முன்பு தவம்செய்த புண்ணியப்பேறு உள்ளவர்க்கே வாய்க்கும். மற்றவர் தவத்தை மேற்கொள்வது அவமே' என்றும் கூறுகிறார்.

வள்ளுவர் அருளிய தவக்கருத்துக்களை எல்லாம் ஆய்ந்து உள்ளத்துள் அடைத்துக் கொண்ட கம்பர் தமது இராமகாதையிலே தமது கவிதைச் சிறபத்துக்கு அமைந்த, தவப்பெருமாட்டியான சீதையை உள்ளக்கண்ணிற் கண்டு இக்கருத்துக்களைச் சார்த்திச்சார்த்தி மெருகு அமைத்து உலகங்காண உதவுகின்றார்.

தவத்தின் சிறப்பை விளக்குவதே கருத்தாகச் சுந்தர காண்டத்திலே பல அழகிய சித்திரங்கள் அமைத்து அவற்றின் முதிர்ந்த முடிபை இரண்டிடங்களில் வெளியிட்டிருக்கிறார். வள்ளுவர் வாக்கின் சாரத்தை வடித்தொத்த கருத்துக்களே தவத்தைப் பற்றிய கற்பனை வரும்போதெல்லாம் வருகின்றது.

"தேவர் யாரும் இலங்கை மன்னனுக்கு ஏவல் செய்து திரிகின்றார். இலங்காதிபன் மும்மூர்த்திகளினும் மிக்கவன் என்றால் அவன் செய்த தவத்திலும் மிக்கது ஒன்று உண்டோ?'' என்று கேட்கின்றார். கவி சிறபத்தில் எழுந்த காவியவுண்மை இது. உலகவுண்மைகளோடு மாறுபடுகின்றதே என்ற நினைப்பிற்கே இங்கு இடமில்லை. தவம்புரிந்து தேவர் ஆகப்பெற்ற உயரினத்தவரும் தம்மினும் மிக்க தவம்புரிந்தவனுக்கு ஏவல் பூண்டிருக்கின்றார் என்று கூறத் துணிகின்றார். மும்மூர்த்திகளையும் அவன் மதிக்கவில்லை என்பது பல இடங்களில் உரைக்கப்பட்டுளது. வேண்டிய வேண்டிய வண்ணம் எய்தல் தவத்தால் விளையும் பயன் என்ற வள்ளுவர் கருத்து இங்கு விளக்கமாயிற்று.

இலங்கை அமைப்பைப் புகழ நினைத்த புலவர், "இந்நகரத்தை அமைத்த தெய்வத்தச்சனையே வியப்போமோ?

இராவணன் உள்ளமும் உடலும் ஒத்து இயற்றிய தவத்தையே வியப்போமா? நான்முகன் அளித்தருளிய வரத்தையே வியப்போமா? இன்னதை இவ்வண்ணம் புகழ்வது என்று அறியாத நாம் எவரை எப்படி மதிப்போம்!" என்று கூறுகின்றார். நகரமைப்பு ஒரு புலவர் மனத்தைக் கவர்வது இயல்பே. அதனைப் பாராட்ட நினைத்த போது அவர் உள்ளத்தில் எழுந்த மூன்று சொற்றொடர்களை இங்கே காண்கிறோம். நகரமைக்கும் சிற்பி பெருந்திறமை உள்ளவனே என்று அவனைப் புகழ்வது முதற்படியாம். 'இந்த நகரம் இவ்வண்ணம் அமையுமாறு இராவணனிடம் ஆற்றல் யாது என்று நினைவு கூர்ந்து, அவன் தவமன்றோ' என்று அறிந்து உள்ளம் உருகுகின்றார். குறளில் மேற்காட்டிய கருத்தே இங்கும் வலியுறுத்தப் பெறுகின்றது. தவத்தைப் புகழ்வது இரண்டாம் படியாம். எத்துணைத் தவத்தை எவரே இயற்றினும் அத்தவத்துக்கு உரிய பயனை அருளும் தெய்வத்தின் திருவருளை மூன்றாம்படியிற் சிறப்பிக்கிறார். தவமே இப்பயனை அளித்ததாதலின் தவம் வேறு அருள்வேறு என்று பிரித்துணர இயலாது. நடுநாயகமாய் அமைந்த தவமே இங்கு நகரமைப்பின் பெருமைக்குச் சிறந்த காரணம் ஆயிற்று.

நகரமக்கள் வாழ்வை நோக்கிய அனுமான், அமரமாதர் நீராட்ட அரக்கமாதர் பொய்யிடை நையப் பூநீர் ஆடும் காட்சியைக் காண்கின்றான். "என்னே புதுமை இது! அமரமாதர் பணிபூண்டு அடிச்சியராகவும் சிலதியராகவும் நிற்கின்றார். அரக்கர் மகளிர் மணநீரில் தமது இளமை நலம் எல்லாம் விளங்குற ஆடுகின்றனரே! இதன் காரணம் என்னையோ? தவத்தால் அன்றி வேறு எப்பெருமையாலும் இந்நிலை வந்து அமைந்திருக்குமா? அமராவதியிலே கற்பக தருவும் சிந்தாமணியும் காமதேனுவும் தரும் செல்வங்களோடு வாழ்ந்த தேவமகளிர் தமது சிறப்பெல்லாம் இழந்து மண்ணுலகத்தில் அரக்கர் வாழும் இலங்கைக்கு வந்து அரக்கியர்க்கு நீராட்டம் காணும் பணிபூண்டிருக்க

வேண்டும் என்றால், இதற்கு ஒரு தக்க காரணம் வேண்டுமே! தேவர் வாழ்வு எத்துணைத் தவத்தால் வாய்த்த சிறப்புள்ளது! அவ்வாழ்வு பெற்ற மெல்லியல் மகளிர் மென்மை அறியாத அரக்கியர்க்குச் சிறு பணிபூண அவர் இயற்றிய பாவம் என்னையோ? தேவர் இனத்து மகளிர் பாவம் செய்திருப்பார் என்று கூற மாட்டேன். அவரை ஏவல் கொள்ளும் பேறு அரக்கியர்க்கு வாய்த்தது அவ்வினத்தின் தலைவனாகி இன்றிருக்கும் இராவணன் இயற்றிய தவமே. என்னே தவத்தின் சிறப்பு!'' என்று கருதி மனம் உருகுகிறார். இராவணனும் தவம் செய்தவனே என்று உலகம் உணர இத்துணைக் கருத்துக்களை உரைத்த புலவர் உண்மைத் தவக்கோலம் பூண்ட சீதையை அனுமான் காணும் போது தவச்சிறப்பை நன்கு விளக்குகிறார்.

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்று வள்ளுவர் அருளிய கருத்தைச் சீதை சிற்பத்தில் நன்கு அமைக்கின்றார்.

"கல்லின் மருங்கே எழுந்து என்றும் ஒரு துளிவரக் காணாத நல்ல மருந்து போலத் தன் நலங்களை இழந்து வாடிய நங்கை, இயல்பாகவே ஒடுங்கி இருந்த மெல்லிய இடைபோலவே வேறு அங்கங்களும் மெலிந்திருந்தாள். இப் பெண்ணரசு துயில் கொள்வது இல்லை. கண்களை இமைப்பதும் முகிழ்ப்பதும் இல்லை. வெயிலில் வைத்த விளக்குப்போல ஒளியிழந்த மெய்யினள் இளமான்பேடை புலிக்குழாத்திடை அகப்பட்டது போல அரக்கியர் இடையே இருந்தாள். விழுதல், விம்முதல், வெருவுதல், ஏங்குதல், இராமனை எண்ணித் தொழுதல், துயர் உழந்து உயிர்த்தல், அழுதல் அன்றி வேறு ஒன்றும் அறியாள். உரிய காதலர் ஒருவரை ஒருவர் பிரியும் பிரிவு இப்படி இருக்கும் என்று அமைத்த உருவமே போன்றவள். நாயகன் வரும் வரும் என்று திக்கு அனைத்தையும் அளக்கும் விழியாள். ஒரு துகில் அன்றி வேறு அறியாள். அனங்கன்

அமுது கொண்டு இழைத்த ஓவியம் புகையுண்டது போன்ற உருவாள். மீண்டு மீண்டு புக்கு எரிநுழைந் தாலன்ன மெலிவாள். இருந்த மாநிலம் செல் அரித்திட வும் அங்கிருந்து எழாதவள்'' என்று பல படியாகத் தேவி யின் தவக்கோலம் புனையப்பெற்றது. உற்றநோய் நோன் றல் என்ற துறையில் இத்தவம் எல்லாம் அடங்குவதைக் காண்கிறோம்.

'உயிர்க்கு உறுகண் செய்யாமை என்ற சிறப்பும் இத் தவச்செல்விக்கு உண்டோ' என்று வினவுவார்க்கு உரிய இடத்தில் இராமாவதாரப் புலவர் தக்க விடைதருகின்றார்.

இலங்கைப்போர் முடிந்தது. இராவணன் போர்க் களத்தில் இறந்து விழுந்தான். இராமன் வெற்றிபெற் றான். வெற்றிச் செய்தியைச் சிறையிருந்த தவச்செல் விக்கு உரைக்க அனுமானே வருகின்றான். அவன் தன்னை மறந்து தாயை வணங்கி நற்செய்தி கூறும் மகன்போலப் போர்வெற்றியைப் புகல்கின்றான். இராம நாமங்களைப் பலமுறை பாடினன், "ஏழை சோபனம்! ஏந்திழை சோப னம்! வாழி சோபனம்! மங்கல சோபனம்! அரக்கனை இராமபிரான் அழித்தருளினன்'' என்று கூறினன். இன்பச்செய்தி கேட்டுத் தன்னைமறந்த தேவி ஒன்றும் தோன்றாதிருந்தாள். சிறிது பொழுதில் தன்னுணர்வு பெற்று அனுமானை நோக்கி, "அன்ப, முன்பு என்சிறை நீக்குவேன் என்றாய். இப்பொழுது, உண்மையாகவே என் சிறையை நீக்கி அதனை விளக்கும் உவகையும் பேசினை. உனக்கு என்ன பேறு தருவது என்று தெரியாதே மவுனம் பூண்டேன். உலகம் மூன்றையும் உதவினும் உன் உதவி யின் விலைக்கு அவை பற்றமாட்டா. அன்றியும் அவை நிலையற்றவை. உன்னை இப்பொழுது நான் தலையால் தொழுவதே தகும்'' என்றாள். அனுமான் அப்பொழுது தவப்பெருமாட்டி அடிகளை வணங்கித், 'தாயே உன்னை அடியேன் இராமபிரானிடம் சேர்ப்பிக்கும் பேறு பெறுவ தைக் காட்டிலும் சிறந்த வரமும் ஒன்று உண்டோ?

ஆயினும் இங்கு உன்னை இத்தனைகாலமும் துன்புறுத்திய இவ்வரக்கியரை ஒதுக்க ஆணை தந்தருளவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான். அரக்கியர், 'தாயே, எம்மைக் காத்தருள்க' என்று சரண்புகுந்தனர். அரக்கியர்க்கு உடனே அபயம் அருளிய தேவி அனுமானை நோக்கி, "அனுமானே, நீ எனக்கு இவ்வரம்தருக. இவ்வரக்கியர் வருந்தும் செயல் எதுவும் செய்யாதொழிக. எனக்கு இத்துயரம் வந்தடுத்தது நான் புரிந்த வினையின்பயனே. இவ்வரக்கியர் கூனியினும் கொடியவர் இல்லையே! பொறுக்க'' என்று வேண்டி அப் பெண்டிரைக் காத்தருளினாள். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யவேண்டும், என்ற சால்பு பூண்ட தவச்செல்வி உயிர்க்கு உறுகண் செய்யாமை என்ற தவநெறிக்கு உத்தமச்சான்று ஆவதை இவ்வரலாறு விளக்குகிறது.

'தவமும் தவமுடையார்க்கு ஆகும். அஃது இல்லாதவர் தவத்தை மேற்கொள்வது அவம்' என்று வள்ளுவர் அருளியது தவத்துக்குச் சிறப்பருளும் சீதையைப்போன்ற கற்பின் செல்விகளை நினைத்தேபோலும். பிறர் தவம்புரிய முற்பிறப்பின் தவம் துணைபெறவேண்டும். அத்தவத்தால் அவர் சிறப்பு அடைகின்றார். பிறர்க்குப் பிறப்புத்தொறும் ஓட்டிவருதலாற் சிறப்புதவும் தவம் சீதை சரிதத்தில் நுழையப் பல்லாண்டு தவம்புரிந்தது. பிறர் பாவத்தைப் போக்கும் கங்கை தன்பாவம் போக்கச் சான்றோரைத் தேடுவது போலவே இக்கருத்தும் உள்ளது. தவம் தவம் புரிந்து சீதையைத் தன்தலைவியாகப் பெற்றது. அதனால் அனுமானை பாராட்டத்தக்க தவக்கோலம் பூண்ட தேவியிடம் நிலைத்த பெருமையைப்பூண்டு சிறப்புற்றது.

அணியும் பணியும் பூண்டு அழகுபெறும் மகளிரும் உண்டு. பூணுக்கு அழகு அளிக்கும் பொற்றொடியும் அருமையாய் உலகத்திலே தோன்றுவது உண்டு. அறம் செய்தவர் அதனாற் பெருமைபெற்ற கதைகள் உண்டு. தீவினைசெய்தவர் அதனாலே தீமையும் துன்பமும் பெற்ற

கதைகளும் பல உண்டு. "உலகத்தில் எவர் எவரோ இன்றளவும் நம்மை அடையமுயன்றார். நாம் அவர்க்குப் பெருமையே தேடித்தந்தோம். நாம் ஒருவரைச்சார்ந்து நமக்குள்ள குறைகளைப் போக்கிக்கொள்ள வேண்டாமா? என்று அறம் நினைத்தது. தக்கதோர் நிலைக்களத்தை அடையும் பொருட்டுத் தவம் புரிந்து உயர்வு படைத்தது. அதன்பயனாகக் கோசலை இராமனை ஈன்றாள். உலகத்தை நெடுங்காலமாகச் சூழ்ந்திருந்த தீவினை, சார்ந்தவர் எவர்க்கும் தன்னால் இயன்ற தீமைகளை விளைத்து மதங்கொண்டிருந்தது. அறம் பண்ணிய அறம் முதிர்ந்து அதன் பயனாக இராமன் பிறந்ததுபோலவே மறம் பண்ணிய மறம் முதிர்ந்து உலகம் தாங்கலாகாத நிலை வரவே அதுவும் ஒரு காரணமாக இராமாவதாரம் நிகழ்ந்தது" என்று கம்பர் கூறுகிறார். இச்செய்யுளில் அறம் செய்த அறம் தீவினை செய்த தீவினை என்ற தொடர்மொழிகளை எத்தனை கலைத்திறத்தோடு ஆண்டிருக்கின்றார் என்பதை உணர்ந்து இன்புறவேண்டும்.

இவ்வண்ணமே தவத்தின் சிறப்பை விளக்கிய தமிழ்க் கலைஞர் தவம் செய்த தவத்தை விளக்க இரண்டு தக்க உதாரணங்கள் உயர்வு விளங்கவும், ஒரு உதாரணம் வேறு வகையிலும் தருகின்றார். வேறுவகை என்பதை முதற்கண் ஆராய்வோம். இலங்கைக் கரைக்குத்தாவிய அனுமான் மலைமேல்நின்று நகர்க்குள் நோக்கும்போது ஒரு அற்புதக் காட்சி காண்கின்றான். "மரம் அடங்கலும் கற்பகம்; மனைஎல்லாம் கனகம்; அரமடைந்தையர் அரக்கியர்க்குச் சிலதியர், அமரர் உரம் அடங்கி உழையராய் ஆட் செய்கின்றார். இஃது ஒருவர் தரத்தில் அடங்குவ தன்று. தவம் செய்த தவமே" என்று கூறுகின்றான். இராவணன் தவச்சிறப்பாலே இலங்கைபெற்ற சிறப்புக் களை முன்னும் காட்டினோம். இங்கு தவம் செய்த தவம் என்ற தொடரை அமைத்ததில் புலவர்க்கு ஆழ்ந்த கருத்து ஒன்று உண்டு. தலைதடுமாற்றமான நிலைஎனத்

தோன்ற அமைந்த இவ்வாழ்வு இராவணன் தவத்தால் இலங்கைக்கு வந்தது என்று எளிதாக எண்ணக்கூடாது. தவமே செய்த தவம் இது! உத்தமத்தவம் புரிந்தார்க்கு நான் ஆட்படுவேன் என்று முடிவுசெய்திருந்த தவம் இராவணன் கடுந்தவம் புரிந்து தன்னை வசப்படுத்தியதால் அவனுக்கு ஆளாகி இங்ஙனம் சான்றோருலகம் விபரீதம் என்று நினைக்கத்தக்க வாழ்வுகளை அவனுக்கு அளித்தது. தவம் தன்நிலை எண்ணித்தலைதாழ நேர்ந்திருப்பினும் இது தவத்தின் தவமே. என்று கூறுகின்றார்.

தவம் செய்த தவம் என்னும் இத்தொடர்மொழியைக் கம்பர், இராமனுக்கும் சீதைக்கும் தக்க இடங்களிற் பொருத்துகின்றார். சூர்ப்பணகை வாய்மொழியால் இராமனைப் புகழ இடம் அமைக்கின்றார். பஞ்சவடியிலே இராமனும், இளையோனும், சீதையும் இருக்கையில் அங்கு வந்த சூர்ப்பணகை இராமபிரான் திருமேனி அழகைக் கண்டு பலவாறு எண்ணம் இடுகின்றாள். அவன் தவக்கோலம் பூண்டிருப்பது கண்டு, "அழகே உருவமான இனிய இவ்வுடம்பை எய்திய இவன் உடம்பு வாடும்படி தவம் செய்வது எதற்காகவோ? இக்கமலக்கண்ணண் தவக்கோலம் பூண அத்தவம் செய்த தவம் தான் என்னே!" என்று தனக்குள் வினவுகின்றாள். பிறர் தவம் புரிய முற்பிறப்பில் தவத் தொடர்பு பெற்றவராய் இருக்கவேண்டும். அத்தகைய சிறப்புப் பூண்ட தவம் இராமனை அடைந்ததால் அவனுக்குப் பெருமை விளைப்பது என்ற நிலை மாறித் தானே சிறப்பு அடைந்தது. அதனை உணர்ந்த சூர்ப்பணகை இவ்வுடலிலே ஒட்டி உறைய எத்தனை புண்ணியம் பண்ணியிருக்கவேண்டும் இத்தவக்கோலம்! தவமே நெடுங் காலம் தவம் புரிந்து தனக்குச் சிறுமை விளைத்த பிறரால் நேர்ந்த குறையெல்லாம் தீரும் பொருட்டே இவனைச் சார்ந்ததோ! என்று கேட்கின்றாள்.

சீதைக்கும் இச்சிறப்பு இருப்பதைக் கம்பநாடர் அநுமான் வாய்மொழியால் இராமன் முன்னிலையில் விளக்கு

கின்றார். அநுமான் சீதையை இலங்கை நகரில் அசோக வனச் சிறையிற் கண்ட செய்தியை இராமனுக்கு அறிவிக் கின்றான். 'கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்' என்று தொடங்குகின்றான். இலங்கையிற் கண்ட காட்சி யைத் தன் மனக் கண்ணிற் கொணர்கின்றான். தேவியை நேரிற் கண்டபோது அறம்வீடினதன்று நானும் அழியேன். தேடிக் கண்டு கொண்டேன், இவள் தேவியே. மாசுண்ட மணி போன்ற இவள், வெங்கதிர் ஒளி படர்ந்த திங்கள் போலவே ஒளியிழந்திருக்கின்றாள். இவள் கற்பும், நிறையும் குறையுறவில்லை. அறத்துக்கு ஈறு உண்டோ? இக்காட்சி கண்ட அடியேன் இராகவன் புயத்தையோ, இவ்வனிதை யர் திலகத்தின் மனமாண்பையோ, சனக குலத்தையோ எதனைப் புகழ்வேன்! இவ்வொப்பற்றவள் தவநெறிக்குச் சிறிது பழுது விளைந்திருக்குமேயாயின் ஊழி இறுதி வரும் என்றே அஞ்சினேன். இறை செயலால் எக் குறையும் நேர்ந்திலது. உலகம் வாழ்க. வெம்மையே மிகுந்த நெருப் புள் மூழ்கியும் ஐம்புலன்களையும் அடக்கியும் உண்பன பரு குவன ஒழித்தும் தவம் புரிந்த சான்றோர், இப்பெண் மணிக்கு இணையாவர் என்று நினைக்கவும் இடம் உண்டா? நற்குலத்தே பிறந்து இல்லின் மாண்பைக் காத்தப் பெண் டிர் மனத்தவம் இத்தகையது என்று உரைக்கவும் இயலுமா? இற்பிறப்பு இப்புண்ணியச் செல்வியைப் பெறத் தவம் புரிந்தது. பெண்மையும் நாணமும் தவம் புரிந்து இப் பெண்ணரசைச் சார்ந்து உயர்வு பூண்டன. இத் தவச் செல்வி இங்ஙனம் தவக் கோலம் பூண்டு இங்கு இருந்த இவ்வருங் கோலத்தைக் கண்களாற் காண எம்பிரான் இராமன் தவம் புரிந்திலனே" என்று பலபட அன்னை தவத் தை நினைத்தே உருகினான்.

அநுமான் இலங்கையினின்று மீண்டபோது மயேந் திர மலையில் தன்னை யெதிர் நோக்கியிருந்த வானரர் முன் ஆண்டகை தேவியுள்ளத் தருந்தவம் அமையச் சொன்னான். பிறகே மற்றவை பேசினான். இராமபிரான் திருமுன் வந்து

நிற்கையில் இலங்கை இருந்த திசை நோக்கித் தலை வைத்து, இராமன் முன் கால் நீட்டி வணங்கிய குறிப்பாலேயே தேவியின் தவச் சிறப்பை விளக்கினான். பிறகு பலவாறு தான் கண்ட காட்சிகளை உரைக்கு முகத்தால், "விற்பெருந் தடந் தோள் வீர, இலங்கையில் நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன். இற்பிறப்பு இரும் பொறை கற்பு என்ற மூன்றும் நடம் புரியக் கண்டேன். ஐய, நீ அத் தவச் செல்வியின் கண்ணிலும், கருத்திலும், மனப்புண்ணிலும் இருக்கின்றாய் ஆதலின், அவள் உன்னைப் பிரிந்தாள் என்பது பொருந்துமோ? எம்பெருமாட்டி, தவம் செய்த தவமே உருவமான தையல், கடலுள் இலங்கை நகர் ஒரு சார் விண்தோயும் கற்பகச் சோலையில் உன் தம்பி புல்லினால் அன்று தொடுத்த தூய சாலையுள் இருக்கின்றாள்" என்று கூறி முடித்தான். இங்கு தவம் செய்த தவமாம் தையலுக்கு ஏற்ற திருக் கோயில் அமைக்கக் கருதியே இராவணன் சிறைக்களமே ஆயினும் அங்கும் தூய சாலையில் இருக்கின்றாள் என்று உணர்த்தினான்.

தவம் என்ற சொல்லை நினைக்கும் போது உள்ளத்தே எழும் உணர்ச்சிகள் எல்லாம் உருவெடுத்து வந்த கற்பின் செல்வியைத் தவத்தி என்றோ தவச் செல்வி என்றோ எளிதாக உரைத்து விடாமல் தவம் செய்த தவமே திரண்டு ஒன்றாகி உருவெடுத்து வந்த தெய்வம் என்று உள்ளம் உருகி உரைக்கின்றான். தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்று கூறிய வள்ளுவர் கருத்தை நன்கு சுவைத்து அதன் உள்ளுறை அனைத்தையும் உணர்ந்திருக்கும் கம்பர் தவமுடையார்க்கே அரும்பெரு முயற்சியின் மேல் பல பிறவித் தொடர்பின் பயனாக வாய்ப்பதான தவம் உலகத்தின் துயரை நீக்கும் பொருட்டே மண்ணுட் பிறந்த தலைவனுக்கு உற்ற துணையாகப் பெண்ணுருக்கொண்டு போந்த தவக் கோலத் தெய்வத்தை எத்துணையோ பலவாண்டுகள் தவம் புரிந்த பயனாக அடைந்து, பிறர்க்குத் தான் தந்த சிறப்பினும் பன்மடங்கான சிறப்பை அப் புண்ணியவதியின்

சார்பால் அடைந்து சிறந்தது என்று கம்பர் கூறுகிருர். தவம் என்ற சொல்லைப் புண்ணியம் என்ற பொருளிலும் வள்ளுவர் ஆண்டிருக்கிருர். கம்பர் இங்குக் காட்டிய இடங்களில் எல்லாம் உற்ற நோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாது வாழும் மனவாக்குக்காயம் ஒரு நெறிப் பட்ட தவத்தையே குறிக்கின்ருர் என்பதை நாம் சிந்தித்து உணர வேண்டும். தமிழ் கற்கும் தவம் படைத்தவர்க்குத் தமிழ்க்கலைக் களஞ்சியத்துள் இங்ஙனம் அகப் படும் சொற் சிற்பங்கள் எத்துணையோ உள.

---

# 5. கோயில்கள்

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று; வையம் தோறும் தெய்வம் தொழு; கோயில் இல்லா வூரிற் குடியிருக்க வேண்டாம்.” என்ற முதுமொழிகள் நம் முன்னோர் மனப்பண்பை நமக்கு உணர்த்தவே அமைந்துள்ளன. நம் அறிவின் எல்லையைக் கடந்ததோர் பொருளை நினைத்து வணங்குதல் வேண்டும் என்ற நினைப்பு வரும்போது நம் மனப்பண்புக்கு ஏற்ற கோயில் தானே எழுகிறது. கடவுளைப் பற்றி எழுந்த பேச்செல்லாம் சோம்பேறிகளின் கட்டுக் கதையே என்று கூறத்துணியும் நல்லறிஞரும் தம் உடலும் மனமும் தம் வயப்படாத ஒரு நிலையில், ‘நமக்கு மேல் ஏதோ ஒன்று இருக்கிறது. அது இன்னது இத்திறத்தது என்பது விளங்க வில்லை’ என்று கூறி அமைகின்றனர்.

உயிர் இனத்தை எல்லாம் படைத்துக் காத்து அழித்து அருள்பவன் ஒருவனே என்று அறிவு நூல்கள் உரைக்கின்றன. படைக்கப்பட்ட உயிர் இனத்தில், ‘நம்மைப் படைத்த ஒருவன் உண்டு, நாம் அவனை நினைத்து வழிபடவேண்டும்’ என்ற எண்ணம் மனிதப் பிறவி ஒன்றுக்கே உண்டு. மற்ற உயிர்கள் தம்மைப் படைத்த தலைவனை நினைத்து உருகும் மனப்பண்பு பெறவில்லை என்றே உலகம் நினைக்கிறது. இது பொது நியதியே ஆயினும் இதற்குச் சில விலக்குக்கள் உண்டு. புராணங்களில் நாரை வழிபட்டதாக, ஆன்கன்று வழிபட்டதாக, கபிலை பூசித்ததாக வரும் கதைகளை நாம் நம்ப வேண்டாம்.

நம் கண்காண நிகழ்ந்த சில புதுமைச் செய்திகளால் விலங்கினத்திலும் சில கடவுளை வழிபடும் மனப் பண்பு படைத்துள்ளன என்று எண்ண நேர்கிறது. திருவழுந்தூர் என்ற ஊரே கம்பர் பிறந்த ஊர் என்பது உலகம் அறிந்த உண்மையே. திருவழுந்தூர்க் காளி கோயில் கம்பர்

காலம் முதல் புகழ்பெற்ற கோயிலே ஆகும். இரண்டு ஆண்டுகளின் முன்பு இக்கோயிலில் ஒரு நாகப் பாம்பு வழிபாடு இயற்றிய முறையைப் பல்லாயிரம் மக்கள் கண்டனர். அதற்கு நீராட்டம் செய்வித்து உணவு தரும் பேறு படைத்த நன்மக்கள் இன்றும் அவ்வூரில் இருக்கின்றனர். கோயில் வாயிலிலே பலர் காண விளையாடிய இந்தப் பாம்பு ஒருவரையுமே கடியாது மறைந்தது என்பது இன்றும் அவ்வூரார் உரைக்கும் உண்மையாம்.

ஒரு கோழிச் சேவல் சிவாலயத்தைச் சுற்றி வந்த வரலாற்றைச் செய்தித் தாள்களிற் படித்து அறிவோம். திருக்கழுக்குன்றத்தில் இரண்டு கழுகுகள் நாள்தோறும் இறைவனை வழிபட வரும் செய்தியை எவரும் மறுத்தல் இயலாது. புதுக்கோட்டைக்கருகில் உள்ள பேரையூர்ச் சிவாலயத்தில் எப்பொழுதும் பாம்புகள் சுற்றிய வண்ணம் இருக்கின்றன. எப்பொழுதேனும் எவரேனும் தவறு செய்து விட்டால் அவரை அவை அச்சம் காட்டி வெளிப்படுத்துவதும் உண்டு. திருவனந்த புரத்துக்கு அருகே உள்ள நாகர் கோயிலில் நாகங்கள் தம் இயல்பான குணங்களை மறந்து வழிபாட்டின் பொருட்டே கூடியுள்ளன.

அபூர்வமாக எங்கெங்கோ நிகழும் இச் செய்திகளைக் கொண்டு மனிதப் பிறப்பு ஒழிந்த மற்றப் பிறப்பு அடைந்த உயிர்களுக்கும் கடவுளை வழிபடும் உரிமை உண்டு என்று எவரும் துணிந்து கூறுவதற்கில்லை. மனித வுருவம் பெற்ற உயிரினமே தன்னை அறிந்து தன்னைப் படைத்தவனை நாடி அறியும் பண்பு பெற்றுள்ளது.

நிலப் பகுதி நீர்ப் பகுதியினின்று எழுந்து வளரத் தொடங்கியது எந்த நூற்றாண்டில் என்று அறுதியிட்டுரைக்க வல்லவர் இன்று எவரும் இல்லை. உலகத்தின் எந்தப் பகுதியில் முதல் மனிதன் வாழ்ந்தான் என்பது பற்றி அறிஞர் பலர் பலவகைக் கருத்துக்களை வெளியிடுகின்றனர். நிலத்தை இயற்கை முறையால் குறிஞ்சி

முல்லை மருதம் நெய்தல் என்று நான்கு வகையாகப் பிரிக்கலாம். இந்நால் வகை நிலத்துள் முதலில் எழுந்தது குறிஞ்சி நிலமாகத்தான் இருக்க வேண்டும். அதன் பிறகு முல்லை நிலம் தோன்றியிருக்கும்; மருதமும் நெய்தலும் பிறகு பிரிந்தவையே. இந்த முறையால் மனிதன் முதல் முதல் மலையில் வாழ்ந்தபோது கடவுளைப் பற்றி நினைக்கத் தொடங்கினன். பிறகு காட்டிலும் கடலிலும் நகரிலும் சூழ்நிலைக்கு ஏற்ப வழிபாடு இயற்றினன்.

முதல் மனிதன் வானத்தைப் பார்த்திருப்பான். மேகங்களையும் மின்னலையும் இடி முழக்கத்தையும் கண்டு நடுங்கி, வானமே தெய்வம் என்று வணங்கி யிருப்பான். மலையில் எழுந்த நெருப்பைக் கண்டு அஞ்சி, வணங்கி யிருப்பான். பின்பு தனக்கு அச்சம் விளைத்த உயிர்களை யெல்லாம் கை கூப்பி வணங்கி வாழ்த்தி யிருப்பான். இயற்கையில் இங்ஙனம் வணங்கிப் பயின்ற பிறகு தன் கண் காணத் தான் வழிபடத் தக்க உருவம் ஒன்று வேண்டும் என்று நினைத் திருப்பான். அந்த நினைப்பு எழவே மலைமேல் ஒரு தனிக்கல்லை நிறுத்தி முதற்கண் வணங்கினன். மரத்தை வணங்கியும் நலம்பெற முயன்றான். கல்லும் மரமும் தனியே நின்ற அளவில் கோயில் ஆக வில்லையே என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் ஒரு நாள் எழுந்தது.

வழிபட அமைந்த ஒரு சிறு கல்லையோ மரத்தையோ நடுவே வைத்து அதனைச் சுற்றி மண் சுவர் எழுப்பினன். சில கற்களை அடுக்கிச் சுவர்போல் அமைத்தான். மேற் கூரை ஒன்று வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலே இங் ஙனம் இயன்ற கோவில்கள் பல நூற்றாண்டுகள் அவன் மனத்தைக் கொள்ளைக் கொண்டன. இங்ஙனம் அமைந்த கோவில்களே பிறகு கற்சுவர் பெற்று வளர்ச்சி கண்டு இன்று நாம் காணும் விமானம் கோபுரம் பிராகாரம் முதலிய அங்கங்கள் பூண்டு விளங்கலாயின.

உருவ வழிபாடு தோன்று முன்பே அருவ வழிபாடு நிகழ்ந்திருக்க வேண்டும். அந்நாளில் நம் முன்னோ

நினைத்த இடத்தில் நின்றவாறு கைகூப்பி வணங்கியிருக்க வேண்டும். அவன் செய்த அருவ வழிபாட்டின் அறிகுறிகளை இன்றும் நாம் சில பெரிய கோயில்களிற் காண்கிறோம். மணிவாசகர் திருவருள் படைத்த திருப்பெருந்துறை என்ற கோயிலில் அப்பன் அம்மை என்ற இருவர்க்கும் உருவ வழிபாடு இன்றும் இல்லை. அன்று முதல் இன்றளவும் அருவ வழிபாட்டுக் கோவிலாகவே அஃது இருக்கின்றது. தேவதானப்பட்டிக்கு அருகேயுள்ள காமாட்சி கோயிலில் உருவ வழிபாடு அன்றும் இல்லை, இன்றும் இல்லை. முன்பு இக் கோயில் மேற்கூரை இல்லாத வெளிக் கோயிலாக இருந்து பின்னுளிலே கோபுரம் முதலிய சிறப்புக்களைப் பெற்றது. இன்றும் கருநிலத்திலே மேற்கூரை தென்னையோலைக் கீற்றுக்களால் இயன்றதாகவே உளது. உள்ளே இருக்கும் உருவம் இன்னது என்று அறிந்தவர் எவரும் இல்லை. இலங்கைத் தீவில் உள்ள கதிர்காமக் கோயிலை முருகன் கோயில் என்று வழிபடுகின்றோம். கருநிலம் எவரும் புகுந்தது இல்லை. அங்குள்ள உருவம் இன்னது என்று அறிந்தவரும் இல்லை.

ஒருரும் ஒருருவும் இல்லான் என்று இறைவனை நினைத்து வழிபட்ட மக்களே பின்பு அவனுக்கு உருவம் அமைத்தல் நன்று என்று நினைத்தலாயினர். அருவத்திலிருந்து அடுத்த படியாக உருவம் பிறந்திருக்க முடியாது. அருவமும் இன்றி உருவமும் இன்றி நடுத்தரமாக இருந்த ஒரு வழிபாடு இடையே நிகழ்ந்திருக்கவேண்டும் அதுவே கண், காது முதலிய கொண்ட முகம் அமையாத ஒரு சிறு கல்லை வைத்து வணங்கிய வழிபாடாம். இலிங்க வழிபாட்டின் அடிப்படை இதுவே. முகம் இல்லாத உருவம் ஆதலின் இது உருவ அருவம் என்று கருதப்பட்டது.

பின்பு மனிதன் தன் மனத்தில் எண்ணிய உருவங்களை எல்லாம் கடவுளுக்கு ஏற்றி உருவ வழிபாடு செய்யத் தொடங்கினன். இங்ஙனம் உருவம் அமைக்க அறிந்த பிறகு உருவத்திலே பல வகைகள் தோன்றின. வழிபாடும்

பல வகை ஆயிற்று. காளி கட்டத்தில் அச்சமே உருவ மாகத் தோன்றும் காளி உருவம் மனிதன் அமைத்ததே. காசி, காஞ்சி, மதுரை முதலிய தலங்களில் அருளே உரு வமாக அமைத்த அன்னையின் திருவுருவமும் மனிதன் அமைத்ததே. காமரூப தேசத்தில் காமாட்சி ஆலயத்தில் உள்ள சக்தியும் கஞ்சி காமாட்சியும் ஒன்றே. ஆயினும் அங் கங்கு மனிதன் மனம் எவ்வண்ணம் வேண்டியதோ அவ் வண்ணம் உருவம் அமைக்கப்பட்டது. உருவ வழிபாடே சிற்பக்கலைக்கு அன்னையாயிற்று.

கோரப் பற்களும் உருட்டி விழிக்கும் விழிகளும் வளைந்த மீசையும் நீண்ட வாளும் வில்லும் வேலும் வைத்து அமைத்த உருவமும் மனிதன் வழிபடவே எழுந்தது. கலை நிலைத்தின் உச்சியில் உள்ள கூத்தப்பிரான் உருவமும் மனி தன் மனத்தினின்று எழுந்ததே. வெண்ணெய்க் கண்ணன் உருவமும் மனிதன் அமைத்ததே. காலிகளின் பின் சென்ற வேய்ங்குழற் கண்ணன் உருவமும் மனிதன் அமைத்ததே. நூறடி உயரத்தில் கண்ணுற் காண்பதற்கே நடுக்கம் தரும் உருவங்களும் மனிதன் அமைத்தவையே. உருவம் இவ்வாறு பல திறப்பட்டது போலவே வழிபாடும் பல திறப்பட்டன.

தெய்வம் இல்லை என்றே எழுந்த புத்த மதத்துக்கும் கோயில் வேண்டியிருந்தது. புத்ததேவனே ஆலயமூர்த்தி ஆயினன். சைனர் தமது தீர்த்தங்கரரை வழிபட்டதே அன்றிப் பிறமூர்த்திகளையும் வழிபடத் துணிந்தனர். அகாலனை வணங்கும் சீக்கியர் குருகிரந்தத்திற்கு மிக்க மதிப்பு வைத்தனர். அவர்கள் கோயிலும் சிற்பக்களம் ஆயிற்று. கிறித்தவரிற் சிலர் உருவ வழிபாடு ஏற்பதுண்டு. பெரும்பாலோர் அருவ வழிபாடு கைக்கொண்டனர். முசல் மான்கள் உருவ வழிபாடே ஏற்கவில்லை. இவர்க்கெல்லாம் வேறு வேறு வகையிற் கோயில் அமைந்திருப்பதை உலகம் எங்கும் காண்கிறோம். பாரசீகத்திலிருந்து நம் நாட்டிற் குடி புகுந்த பார்சிகள் தமது வழிபடு கடவுளான ஒரு வனைத் தமது வேதவாக்கியங்களால் ஓதி யுணர்ந்திருந்தும்

தனிப்பட்ட கோயில் அமைத்து அக் கோயிலுள் என்றும் அழியாத அக்கினி இருக்கத்தக்கவாறு சந்தனக்கட்டை களைப் பயன்படுத்துகின்றனர்.

நம் நாட்டுக் கோயில்கள் பல நூற்றாண்டுகளாக வளர்ந்த சிற்பச்சிறப்பு உள்ளவை. கற்கோயில்கள் சிற்பச் சிறப்போடு விளங்கும்பொலிவு தமிழகத்துக்கே சிறப்பாக உள்ள பெருமையாம். கற்கோயில்கள் பல்லவர் ஆட்சிக் குப்பிறகே எழுந்தன. பல்லவமன்னர் மலைகளைக் குடைந்து கற்கோயில் அமைத்திருக்கும் அழகை மாமல்லபுரத்தி லும் திருச்சிராப்பள்ளியிலும் நாமக்கல்லிலும் காணலாம். குடைவரைக் கோயில்களுக்குப் பிறகு எழுந்த கற்பணிக் கோயில்களைக் காஞ்சியிலே காணலாம். இன்று நாடு முழுதும் அழகுக் கொள்ளையாக விளங்கும் கற்கோயில் எல்லாம் இந்த அடிப்படையில் வளர்ந்தவையே ஆகும்.

இளங்கோவடிகளும் சாத்தனும் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் என்னென்ன கோயில்கள் இருந்தன என்பது அவ்விருபுலவரும் இயற்றிய காப்பியங்களால் நன்கு விளங்குகின்றது. புறப்பாட்டிலும் ஆலயவழிபாடு பேசப் படுகின்றது. பத்துப்பாட்டிலும் ஆலயவழிபாடு வருகின் றது. மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் திரு முருகாற்றுப்படையில் முருகனுக்குரிய ஆறுபடைவீடு களையும் கூறுகின்றார். திருப்பரங்குன்றம் திருச்சீரலை வாய் முதலிய கோயில்களைக் கூறிவிட்டு இறுதியில் எங் கும் அவனைக் காணலாம் என்று முடிக்கின்றார்.

சங்கச் செய்யுட்களில் எட்டுத்தொகை ஒரு வகை யாகும். ஒவ்வொரு தொகைநூலுக்கும் கடவுள் வாழ்த்து உண்டு. இக்கடவுள் வாழ்த்துக்கள் முக்கண்ணன் திரு மால் முருகன் முதலிய உருவம்பூண்ட கடவுளை வழிபடு கின்றன. இந்திரவிழா என்பது மருதநிலத்தார் சிறப் பாகக்கொண்ட விழா என்றும் அவ்விழாக்காலத்தில் எல்லா வகைக் கோயிலிலும் முறைப்படி வழிபாடு நிகழும் என் றும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூறுகின்றன.

புறநானூற்றிலே நக்கீரர், ஏற்றுக் கொடியேந்திய எரி போன்ற செஞ்சடையுள்ளவனும், மாற்றுதற்கு அரியகணிச் சிப்படை பூண்டவனுமான மணிமிடற்றுப் பெருமானையும், கடலில் வளர்கின்ற சங்குபோல் மேனியுள்ள கலப்பைப் படைதாங்கிய பனைக்கொடியோனையும், புட்கொடி உயர்த்த மண்ணுறுமணிபோல் நீல மேனியுள்ள திருமாலையும், மயிற் கொடிபிடித்த யானையூர்திகொண்ட முருகப்பிரானையும் குறிப்பித்திருக்கிறார்.

பத்துப்பாட்டில் மலைபடுகடாம் என்ற பாட்டுள் நவிரமலையில் உறையும் காரியுண்டிக்கடவுளைக் காண்கி றோம். நஞ்சுண்டபிரானை இப்பெயரால் அன்று அங்கு ஆலயம் அமைத்து வழிபட்டனர் என உணரவேண்டும். திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டுள் முதற்பாட்டா கும். அது முருகன் வழிபாட்டைப் பலபடியாக விளக்கி யிருப்பதை அறிவோம்.

இந்திரவிழாவைச் சிறப்பிக்கப் புகுந்த இளங்கோவடி களும் கூலவாணிகன் சாத்தனாரும் புகார் நகரத்தில் அந் நாளில் இருந்த கோயில்களை அடுக்கியுரைக்கின்றனர். இளங்கோவடிகள் புகார்ப் பெருநகரில் பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும் அறுமுகச்செவ்வேள் அணிதிகழ் கோயிலும், வால்வளை மேனி வாலியோன் கோயிலும் நீல மேனி நெடியோன்கோயிலும் மாலைவெண்குடை மன்னவன் கோயிலும் இருந்தன என்கிறார். சாத்தனார் அந்நகரில் நுதல்விழி நாட்டத்திறையோன் கோயில் முதலாகச் சதுக்கத்துத் தெய்வத்தின்கோயில் ஈறுகப் பலவகைப் பட்ட கோயில் இருந்தன என்றார்.

அன்றியும் தேவர்கோமான் ஏவலிற் போந்தகாவற் பூதத்தின்கோயிலில் ஒரு பீடிகை உண்டுஎன்றும், அப்பீடி கையிற் பலிகொடுக்கும் வழக்கம் உண்டு என்றும் இளங்கோ வடிகள் உரைக்கின்றார். புகார்நகரத்தில் இருந்த மன்றங் கள் சில கோயில்கள் போன்றே மதிக்கப்பட்டன. களவுத்

தொழில்செய்ய நினைப்பவரை அவர் களவாடியபொருளைச் சுமந்து சுற்றிவரும்படிசெய்யும் ஒரு வெள்ளிடை மன்றம் இருந்தது. இம்மன்றத் தெய்வம் கள்வர் இவர் என்று காட்டிக்கொடுக்க உதவியது. குளத்தோடிருந்த இலஞ்சி மன்றம் கூனும் குறளும் ஊமும் செவிடும் அழுகு மெய்யுடையவரும் முழுகுநீராடிப் பழுதில்லாக்காட்சியும் நல்ல நிறமும் பெற்று மீள உதவியது. பிறர்செய்த வஞ்சத்தால் மனம் மருளப்பெற்றவரும் நஞ்சுஉண்டு வருந்தியவரும் நாகத்தின் பல்பாய்ந்து நஞ்சேறியமக்களும் பேய் கோட்பட்டவரும் சுற்றிவந்து தொழுதவளவில் தம்குறை நீங்க உதவிய நெடுங்கல்மன்றம் ஒன்று இருந்தது. தவம் கெட்ட பாவியரையும் ஒழுக்கம்கெட்ட பெண்டிரையும் அரசன் மறையை வெளியிட்டு அரசைக்கெடுக்கும் அமைச்சரையும் பிறர்மனைவியரை விரும்பும் பாவியரையும் பொய்ச்சான்று உரைப்பவரையும் புறங்கூறுபவரையும் பாசத்தாற் பற்றிப் புடைத்துண்ணும் சதுக்கப்பூதம் ஒன்று இருந்தது. அரசர் செங்கோல் கொடுங்கோல் ஆயினும், அறம்கூறும் அவையகத்திலே ஒருதிறமாக முடிவுவிளைந்தாலும் நாவாற் சொல்லாமலே கண்ணீர்சிதறி ஒரு பாவை நின்று அழும்பாவை மன்றமும் இருந்தது. இம்மன்றங்களில் இந்திரவிழாக்காலத்திற் பலியிடும்வழக்கம் இருந்தது. இந்திரவிழா நிகழ்ந்த அழகே நினைத்து இன்புறத் தக்கதாம்.

இந் நாளில் கோயில்கள் பலவகைப்பட்ட சிற்பச் சிறப்பு அமைந்த மண்டபங்களோடு விளங்குகின்றன. கோபுரங்கள் சிற்பக்கலைக்களங்களாகவே விளங்குகின்றன. மாமல்லபுரம் கடற்கரையில் ஏழு கோயில்கள் இருந்த வரலாற்றை அறிவோம். கடல் விழுங்கிய கோயில்கள் ஐந்தாம். ஒன்று கடற் கரையில் முக்கால்வாசி அழிந்திருக்கிறது. மற்றும் ஒன்று கரையிற் சற்றே ஒதுங்கி இருக்கிறது. கற்களைப் பயன்படுத்தி அழகுக் கொள்ளையை ஒருசேர அமைத்து வைத்தும் அவை அழிந்த துயரக்

காட்சி இங்குள்ளது. இன்றும் காணற்குரிய சிற்பக் காட்சி இங்குண்டு.

சோழநாட்டிலே மலை இல்லை. கற்கள் கிடைப்பது அருமையே. ஆயினும் தமிழகத்திற் சோழ நாட்டிலே சிற்பச் சிறப்பு அமைந்த கோயில்கள் பலநூறு என்று கூற லாம். தமிழகத்துக் கோயில்களில் இறை இருக்கும் நிலையைக் கருவகம் என்பர். அதனை அடுத்து மண்டபங் களும் சுற்றுக்களும் அமைந்து ஆங்காங்கு சிற்பமும் சித் திரமும் விளக்கம்பெற இடம்பெறும். வடநாட்டுக் கோயில்களில் இத்தகைய அழகிய அமைப்புக்கள் பெரும் பாலும் இல்லை. வதரி என்ற திருமால் கோயில் இமய மலைப் பக்கம் உள்ளது. தென்னாட்டுக் கோயில்போலவே அது நன்கு அமைக்கப்பட்டுள்ளது. வட நாட்டுக் கோபு ரங்கள் அமையும் முறை வேறு. தென்னாட்டுக் கோபுர அமைப்பின் முறையே வேறு.

நம் முன்னோர் நம் நாட்டில் ஆயிரத்தெட்டுச் சிவன் கோயிலும், நூற்றெட்டுத் திருமால்கோயிலும் நமக்கென்றே அமைத்து அருளினர். இவைகள் பழமை மிக்கவை. பின் னெழுந்த கோயில்களும் பலவுண்டு. இவ்வளவோடு நின்று விடாமல் கடல் கடந்து வாணிகம் செய்த காலத்தில் சாவக நாட்டை அடுத்த பலித்தீவில் அமைத்து வைத்த சிற்பக்களமான பெருங்கோயிலைப் போன்ற பெருமையும் சிறப்பும் பொருந்திய கோயிலை இன்று நம் நாட்டிலே காண் பது அரிதாயிற்று. செஞ்சியில் இருந்த கோயில்கள் அழிந்து இன்று பாழ்பட்டு நிற்பது போன்றே இப்புற நாட்டுக் கோயிலும் இன்று அழிந்திருப்பினும் கண்கொள் ளாக் காட்சியாகவே இருக்கின்றது.

# 6. குளக்கரைப் பிள்ளையார்

ஆலங்குளம் என்பது சோழ நாட்டில் அழகு கொழிக்கும் ஒரு சிற்றூர். தமிழகத்தைக் கால் நடையாகச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்ட நண்பர் இருவர் அவ்வூர்க்கு வந்தனர். பழமையின் உருவம் வடிவம் தோற்றம் இதுவே என விளங்கிய ஒரு பேரால மரத்தின் நிழலில் இளைப்பாற அமர்ந்தனர். ஆல மரம் பரந்து ஓங்கி, நூறு விழுதுகள் நிலத்திலிறங்கித், தாயின் முதுமை தோன்றுது தாங்கும் தனயர் போலத் தாங்கி நிற்க நிமிர்ந்து நின்றது. அம் மரத்தின் வடபால் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒரு குளம் இருந்தது என்பதற்கு அடையாளமாகச் சில படிக் கற்கள் அங்கங்கே சிதறிக் கிடந்தன. இடை யிடையே சில குண்டும் குழியும் குளம் இருந்த நிலையைக் குறிப்பிட்டன. "ஒரு பெருங் குளம் முன்னே இந்த நிலத்தில் இருந்தது அடையாளமே தெரியாமல் மறைந்து விட்டதே. இதன் வரலாற்றைக் கூற வல்லவர் இங்கு யாரும் இல்லையா?" என்று இருவரும் கூறிவிட்டு மரத்தடியிலே படுத்துக் கண் மூடினர்.

இருவரும் நடந்து வந்த களைப்பால் தம்மை மறந்து உறங்கினர். உறக்கத்தின் இடையே 'நான் இருக்கிறேன்' என்ற மொழிகளைக் கேட்டனர். கனவோ நனவோ என்று அறியாது மயங்கினர். இருவரும் ஒரு படித்துறையில் அமர்ந்து குளத்தை நோக்குவதாகக் கண்டனர். நாற் புறமும் படித்துறைகளை நோக்கினர். என்ன ஒழுங்கு! என்ன ஒழுங்கு! சிற்றூர் ஓரத்தில் உள்ள குளம் இத்தனை அழகுற அமைந்திருப்பதை நான் எங்கும் கண்டதில்லை. நான்கு திசைகளிலும் உள்ள படித்துறை அமைப்பே ஒரு சிற்பியின் திறத்தை விளக்குகிறதே. வடக்கே நான்கு படிகள் தண்ணீருக்குள் இருந்து எட்டுப் படிகள் மேலே இருப்பது எத்தனை தெளிவாகத் தெரிகிறது! தண்ணீரின் தூய்மை என்னே! குளிர்ச்சி என்னே! ஆடு மாடுகள் இக்

குளத்தின் பக்கம் வருவதே இல்லை என்று தோன்றுகிறதே. மனிதரும் முறைப்படி குளித்துப் போகும் வழக்கம் உண்டு போலும். படித்துறையிற் பாசம் இல்லை. தண்ணீர் வெண்மை காட்டுகிறது. திருப்பாற் கடலின் செல்வப் பிள்ளையோ இச் சிறு குளம்? இறங்கித் தண்ணீரைக் குடித்துப் பார்ப்போமா? இங்கே நான் இருக்கிறேன் என்று கூறியவர் யார்? ஒருவரையும் காணவில்லையே,'' என்முன் வடிவேலன்.

'குழந்தைகளே, என்னைப் பாருங்கள்' என்று ஒரு குரல் எழுந்தது. இருவரும் மேலும் கீழும் நோக்கினர். தணிகாசலா, என்ன புதுமை இது! கம்பன் பாடிய பம்பைப் பொய்கையோ இது! இமயத்துச்சியில் இருக்கும் மானத மடுவோ? கங்கையும் சிந்துவும் பிறக்கும் நீர் நிலையோ? இறங்கி நீந்துவோமா? ஆழம் அறிய முடியுமா? கவுரி குண்டத்தில் இறங்குதல் அரிது என்பர். மானத சரகில் இறங்கிக் குளிக்கலாம் என்று கூறக் கேட்டிருக்கிறேன். ஆலங் குளம் அமுதக் குளமாகத் தோன்றுகிறதே. ஆல மரத்தின் பரந்த நிழல் விழுந்தும் தண்ணீரின் வெண்மை பளிங்கு போலத் தோன்றுகிறதே. படிக்கட்டுக்கள் இருக்கும் ஒழுங்கில் ஓடி ஓடி இறங்கி யேற வேண்டும் என்று தோன்றுகிறது. இறங்குவோம் நாம்.'' என்று கூறினான்.

இருவரும் சிறு குழந்தைகள் குதித்து ஓடுவது போலவே படி வழி இறங்கித் தண்ணீர்க்குள் போயினர். பாறைகள் மணற் பாங்கான நிலம் இரண்டும் கலந்ததே அடித்தலம் என உணர்ந்து அச்சமின்றி நீந்தத் தொடங்கினர். "குழந்தைகளே, களைப்புத் தோன்று முன்பு கரை யேற வேண்டும்.'' என்று ஒரு குரல் கேட்டது. யார் பேசியது? என்று இருவரும் கரைப்பக்கம் பார்த்தனர். ஆலமரத்தின் வேரில் இருந்த பிள்ளையார் துதிக்கை அசைப்பது கண்டனர். பிள்ளையாரே நீரா பேசினீர்?'' என்று இருவரும் ஓரே மூச்சில் கேட்டனர்.

"ஆம் நானே பேசினேன். ஏன், நான் பேசக் கூடாது என்ற சட்டம் ஏதேனும் உண்டா? இரு குழந்தைகள்

ஆழம் அறியாத ஒரு குளத்தில் இறங்கிக் கூத்தாடும் போது நான் கரையில் அமர்ந்து அக்காட்சியை மவுனமாகப் பார்த்துக்கொண்டிருப்பேனு? எனக்கும் உணர்ச்சி உண்டு என்பதை விளக்கவே பேசுகிறேன். மேற்கே நீங்கள் போக வேண்டாம். அங்கே உங்கள் ஆற்றலுக்கு மீறிய ஆழம் உண்டு. இது ஒரு காலத்தில் தாமரைக் குளமாய் இருந்தது. இன்றும் தாமரைகள் எழவே துடிக்கின்றன. நீங்கள் ஒரு சுற்று வருமுன், கொடிகள் உங்களை வளைக்க வரலாம். ஆகவே விரைவில் கரை யேறுங்கள்'' என்ருர் பிள்ளையார்.

"பிள்ளையாரே, நாங்கள் கரையேற மாட்டோம். நான்கு நாழிகை நீந்திய பிறகே வருவோம். உமக்குப் பேசத் தெரிந்தால் இக் குளத்தின் கதை சொல்லும். நீந்திக் கொண்டே கேட்போம்'' என்ருர் இருவரும். "குழந்தை களே, நான் கதை சொல்கிறேன். இக் குளக்கரையில் நான் ஆறு நூற்ருண்டு அரசு நடத்தினேன். இன்று எனக்குக் குளக்கரைப் பிள்ளையார் என்ற பெயர் ஒன்றே எஞ்சியுளது. ஆதியில் என்னை இங்கு அமர்த்தியபோது நடந்த சிறப்பை இன்று நினைத்தாலும், என் கண்ணில் இன்பக் கண்ணீர் பெருகுகிறது. காலக் கணக்கை மறந்து கதை கேட்கச் செய்கிறேன் கேளுங்கள்.

இந்தக் குளம் இன்று நேற்றுத் தோன்றியது என்று எண்ண வேண்டா! இது இங்கு பிறந்த நாளை நான் அறிவேன். இது தாமரைக் குளமாகி ஆயிரக் கணக்கான பூக்களைத் தன் வயிறு மறையத் தாங்கிய காலத்தையும் அறிவேன். பாசக் குளமாகிச் சேறும் நீரும் ஆகத் தேடு வார் அற்றுக் கிடந்த காலத்தையும் அறிவேன். குளம் இருந்த நிலம் இது தானு என்று கேட்கும்படி மாறிய காலத்தையும் அறிவேன்.

ஆதியில் நான் இம்மரத்தின் கீழே இரண்டு நாகங் களுடன் அமர்ந்திருந்தேன். எனக்குப் பின்புறம் அரச மரமும், வேப்ப மரமும் அழகுற விளங்கிய கதை இக்

குளத்துக்கே தெரியாது. ஒரு கோடை காலத்தில் அரச மரத்தின் மேல் விழுந்த இடி இரண்டு மரங்களையும் ஒரே இரவில் அழித்து விட்டது. இடி விழுந்த பள்ளம் பெரிதாய் இருந்தது. அரசமரத்துப் பிள்ளையாராயிருந்த என்னை ஒரு சிறிய ஆலங் கன்றின் கீழ் அமர்த்தி இடிப் பள்ளத்தைக் குளமாக்க நினைத்தனர். இந்த ஊரில் அன்று ஒற்றுமை இருந்தது. ஊராளன் சொன்ன சொல்லை எல்லா ரும் கேட்ட காலம் அது. நூறு வீடு இருந்த ஊரில் வீட்டுக்கு ஒரு ஆள் வந்து குளம் வெட்ட வேண்டும் என்ற ஏற்பாடு ஆயிற்று. இரவும் பகலும் மாறி மாறி உழைத்து ஒரு மாதத்துக்குள் ஆயிரம் அடி நீளம், ஆயிரம் அடி அகலம் உள்ள குளத்தை வெட்டி விட்டனர். ஆலமரத் துப் பிள்ளையார் இக் குளக் காவலையும் ஏற்க வேண்டும் என்று முடிவு செய்து, என்னை இக்குளத்தின் மேல்கரையில் அமர்த்தினர். எனக்குப் பின்னின்ற ஆலங் கன்று இன்று பெரிய மரமாகிக் குளத்தையே விழுங்கும் நிலைக்கு வந்து விட்டது.

சோழ நாட்டு அமைச்சர் ஒருவர் இவ்வூரைப் பார்க்க வந்தார். அவர் வேதமும் சாத்திரமும் கற்ற விற்பன்னர். அவர் மனைவியும் அவருடன் வந்திருந்தாள். அப்பெண்மணி நான்கு குழந்தைகளை இழந்து, ஐந்தாம் குழந்தையை அன்று வயிற்றில் தாங்கியிருந்தாள். இருவரும் அன்று ஆலமர நிழலில் இளைப்பாறி, ‘இந்தப் பிள்ளையார் வரந்தரும் வள்ளல் ஆக இருந்தால் இந்தக் குழந்தையாவது நீண்ட நாள் வாழ வேண்டும். குழந்தை நல்வாழ்வு பெற்றால் இக்குளத்துக்குக் கற்படி அமைத்துப் பிள்ளையார்க்கும் இங்கே ஒரு அழகிய கோயில் கட்டுவோம்’ என்று பேசிக் கொண்டார்கள். ‘குளத்துக்குக் கற்படி கட்டி, வரும் வழியும், போம் வழி யும் அமைத்துக் கொடுத்தால் அதுவே போதுமானது. எனக்குப் புதிய கோயில் வேண்டா. இந்த மரத்தடியே போதும்’ என்று அவர்கள் கனவிற் கூறினேன்.

அமைச்சர் மகன் அறிவின் செல்வனாய் அழகுக் குமரனாய் நீணாள் வாழ்வு நிரம்பி வாழ்ந்தான். தாயும் தந்தையும் இயற்ற நினைத்த தருமத்தை அவனும் உடனிருந்து நடத்தி முடித்தான். கற்களே கிடைக்காத நாட்டிலே இப்பெருங் குளத்தில் நாற்புறமும் கற்கரை அமைத்து ஒவ்வொரு திசையிலும் இரண்டிரண்டு படித்துறை அமைத்துக் காவிரியிலிருந்தே தண்ணீர் வரத்தக்க வாரி அமைத்து, ஆண்டுக்கு ஒருமுறை தண்ணீரை வெளியேற்றவும் வடிகால் அமைத்து எனக்கே இக்குளத்தை உரிமை ஆக்கினார்கள். அம் மூவரும் வெட்டிய குளம் ஆதலால் இது மூவர் குளம் என்றும் பிள்ளை குளம் என்றும் அன்று சொல்லப்பட்டது. ஆலமரத்தில் ஆட்சி பெரிதான பிறகு ஆலங்குளம் ஆகிவிட்டது. இம்மட்டோ! அடுத்துள்ள சிற்றூருக்கும் ஆலங்குளம் என்ற பெயரே வந்துவிட்டது.

பிறகு இக்குளத்தில் நீராடுவது ஒரு பெரிய விழாவாக ஆண்டுதோறும் நடப்பது உண்டு. காவிரி நீர் வந்து புகுந்தவுடன் புதுநீர் ஆட்டு விழா நிகழும்.

யாரோ ஒரு சிறு பிள்ளை ஒரு நாள் எங்கிருந்தோ ஒரு தாமரைக் கொடியை இக்குளத்துள்ளே கொண்டு வந்து போட்டு விட்டான். மூன்று மாதத்துக்குள் இக் குளம் முழுதும் தாமரை மலர்க்காடு ஆகிவிட்டது. கரையோரத்தில் கொடிகள் மிகுந்திலாமையால் ஆண்களும் பெண்களும் படித்துறையில் நின்று குளித்தனர். நீந்தி நடுக்குளம் பார்க்கும் வழக்கம் மறைந்தது. தாமரை மலரைப் பறிப்பதற்குத் தெப்பம் கட்டிக் கொண்டு நான்கு ஆட்கள் போய் வருவது வழக்கமாயிற்று. இக் குளத்துப் பூக்கள் இங்கே சுற்று வட்டத்தில் உள்ள ஆலயங்களுக்கெல்லாம் போகத் தொடங்கின.

மங்கள வாழ்க்கைத் தொடராக வாழ்ந்த இக் குளத்துக்கு மேலும் மேலும் நலம் பொங்கியது. சோழ மன்னன் ஒரு புது நீராட்டுக்கு இங்கு வந்தான். அவனோடு வந்த

அரசியரும் அந்தப்புரப் பெண்டிரும் பிறர் கண் படாமல் நீராடிப் பொழுது போக்க வேண்டும். அந்த ஒரு நாள் இக் குளக்கரைக்கு வேறு எவரும் வரக் கூடாது என்று பறையறைந்திருந்தனர். மூன்று கண்களையும் துதிக்கை யையும் கொண்டு நான் இக் கரையில் அமர்ந்து இருப்பதை அரசன் மதிக்கவில்லை.

என் அனுமதியின்றியே எல்லாரும் காலையிலே நீர் விளையாட்டுத் தொடங்கினர். அரசிளங் குமரி இன்பவல்லி நீந்தத் தெரிந்தவள். அரசியும் அரசனும் பிறரும் அவளைக் கரையில் நிறுத்த மனம் இல்லாது மேலைக்கரையில் மூன்று பெண்கள் காவலோடு குளிக்கச் செய்தனர். நான் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். தாமரைக் கொடிகள் இன்னும் தலையெடுக்கவில்லை. கொடிகள் தோன் றுதற்கு உதவும் கிழங்குகள் மண்ணுள் மறைந்தே இருந் தன. புது நீரைக் குளத்திற் புகுத்து முன்பு பழைய தண் ணீரை வெளியேற்றி, ஒரு வாரம் குளத்தைக் காயப் போடும் வழக்கம் அன்று இருந்தது. காய விட்ட காலத் தில் தாமரைக் கொடி மண்ணுள் மறைந்து விடும். தண் ணீர் நிரப்பிய சில நாட்களில் மீண்டும் தலையெடுக்கும். அரச குலத்தார்க்கு இக் குளத்தின் சிறப்பு முழுவதும் தெரியாது.

இன்பவல்லி தண்ணீருள் இறங்கி நெடுந் தொலை நீந் திச் சென்றாள். களைப்பே அறியாத இளம் பருவம் ஆத லின், உடன் வந்த பெண்கள் பின்னின்றும் அவள் முன்னே றிக் கொண்டிருந்தாள். மேற்கரையிலிருந்து புறப்பட்ட சிறுமி கீழ்க்கரைக்கே போகின்றாளோ என்றே தோன்றியது. உடன் சென்ற தோழிகள் அவளை அழைத்தனர். அவள் மேலும் நன்கு நீந்திக் கொண்டே எதிர் கரையை நோக்கி னாள்.

இடையில் ஒரு பாறை தடுத்தது. இன்பவல்லி குளத்தில் நீந்தும் திறம் இழந்து, கைகால் அடித்துத் தன்

னைக்காக்க அறியாமல் மூழ்கினுள். தோழியர் பாய்ந்து வந்து அவள் மூழ்கிய இடத்தில் துழாவினர். இன்பவல்லி துன்ப வல்லி ஆயினுள். உயிர் நீங்கிவிட்டது. தோழியர் மூவர் சேர்ந்து முயன்று பிணத்தைக் கரை சேர்த்தனர். அரசனும் அரசியும் மருத்துவர் உதவி நாடினர். மருத்துவர் இருகைகளையும் அகல விரித்துவிட்டார். அரசன் கடுந்துயரம், கொண்டான். துயரம் சினமாக எழுந்தது. "நாளையே இந்தக் குளத்தை மூடுக. இங்கு இனி நீர் நிலை இருத்தலாகாது". என்று ஆணையிட்டான். பரிவாரத்தோடு புறப்பட்டுப் போனுன்.

குளம் வெட்டும் புண்ணியத்தை ஒரு அமைச்சன் ஏற்றுக் கொண்டான். அதனைத் தூர்க்கும் புண்ணியத்தை ஒரு அரசனே ஏற்றுக் கொண்டான். வெட்டுவதற்கு ஆலங்குளத்தார் முயற்சி இருந்தது. தூர்ப்பதற்கு அவருள் யாரும் முன்வரவில்லை. அரசன் ஏவலர் ஒரு திங்கள் நூற்றுக் கணக்கான ஆட்களைச் சேர்த்துத் தூர்த்தே தீர்த்தனர். அன்று குளமாக விளங்கிய இப் புண்ணிய பூமி இன்று சுடுகாடாக நிற்கிறது. குழந்தைகளே, குளக் கதை கூறி விட்டேன். நீங்கள் இன்னும் குளத்தில் நீந்துகிறீர்கள். நீந்தத் தொடங்கிய நேரத்தை மறந்து விட்டீர்கள். உங்களைப் பிடிக்க ஒரு பெண் வருகிருள். அவள் முன் சற்றே விழிப்பாய் இருங்கள்."

தணிகாசலனும் வடிவேலனும் நீந்தத் தொடங்கிய காலத்தை மறந்தனர். பிள்ளையார் கூறிய கதையை உருக்கமாகக் கேட்டுக்கொண்டே கைகோத்துக் குளத்தைச் சுற்றி நீந்திக் கொண்டிருந்தனர். ஒரு பெண்ணிளங் கொழுந்து தலை தூக்குவதைப் பார்த்தனர். "தோழர்களே நானும் உங்களோடு நீந்தலாமா?" என்றுள் அவள். நாங்கள் ஆண்பிள்ளைகள்; நீயோ பெண்ணிளங்குமரி; எங்கள் வலிமையை அறியாய். எங்களோடு நீந்துவது உன்னுல் இயலுமோ?" என்றுன் தணிகாசலன் "ஆற்றல் இருந்தால் நீந்திப் பார்க்கலாம்." என்றுன் வடிவேலன்.

THE MADURA TAMIL SANGAM 16498

"பெண் என்றால் எளிய பொருள் என்று எண்ணி விட்டீர்களோ" எனக்கும் நீந்தத் தெரியும். நான் இக் குளத்தில் பல ஆண்டாக நீந்திக்கொண்டே யிருக்கிறேன். இப்பொழுது இறங்கிய இளஞ்சிறுவர் என்னை இகழத் துணிகிறீர்கள். ஆற்றலைக் காட்டுங்கள்" என்று கூறி முன்னே பாய்ந்தனள். இரு சிறுவரும் அவளைத் தொடர்ந்து நீந்தினர். மூன்று முறை மூவரும் குளத்தைச் சுற்றி வந்தனர். நான்காம் முறை மேற்கேயிருந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்டனர். அவள் முன்பு மூழ்கிய இடம் வந்தது.

"தோழர்களே என்கைகளை இருவரும் இருபுறத்தி லும் பற்றிக்கொள்ளுங்கள். நான் இனிக்கையின் உதவி இன்றியே நீந்துவேன்" என்றாள். இருவரும் நீந்த மகிழ்ச்சியில் தம்மை மறந்து அவள்கைகளைப் பற்றினர். அவளோ இருவரையும் இருகைகளாலும் பற்றி இழுத்துக் கொண்டு தான் முன்பு மூழ்கிய இடத்தில் மூழ்கினள். இரு சிறுவரும் தமது வலிமைஇழந்து இன்பவல்லியின் கைப்பாசத்திலே அகப்பட்டு மூழ்கும்போது "குளக் கரைப்பிள்ளையாரே எம்மைக் காப்பாற்றமாட்டீரா?" என்று கதறினர். பிள்ளையார் துதிக்கை இருவரையும் கரையேற்றியது.

ஆலமரத்தின் வேரிலே தலைவைத்துப் படுத்திருந்த தணிகாசலன் 'கனவு என்ன கனவே!' என்று பாடிக் கொண்டே எழுந்தான். "நான்கண்டது கனவோ நனவோ அறியேனே!" என்றான் வடிவேலன். "அன்ப வடிவேலா நம்நாட்டு வரலாற்றில் நாம் அறியாத பகுதிகள் எத்த னையோ உண்டு. இப்படி மறைந்த குளங்கள் ஊர்கள் எத்தனையோ! அரசகுமாரி அன்று இருந்ததுபோலவே இன்றும் நமக்குக் காட்சி கொடுத்தாள். குளம் இருந்த இடம்இது என்று நாம் இன்று நினைக்கவும் முடியாதாயி னும் நாம் குளத்தில் நீந்தியே பார்த்துவிட்டோம்." என் றான் தணிகாசலன்.

'அன்ப நாம் நாடுபார்க்கப் புறப்பட்டோம். நாட்டின் வரலாறு கற்களிலும் செம்பிலுமே அடைபட்டிருப்பதாக உரைக்கமுடியுமா? எத்தனை அரண்மனைகள் எழுந்தன! எத்தனை கோயில்கள் எழுந்தன! எத்தனை குளங்கள் தோன்றின! எத்தனை அறச்சாலைகள் இருந்தன! எத்தனை கலைக்கூடங்கள் சிறந்தன! நம் தண்டமிழ்நாட்டின் இடைக் கால நிலையை நாம் இன்று மனக்கண்ணுற்காண்பது எளிதன்று. இன்று நம்நாட்டில் அரசப்பூண்டே இல்லாது ஒழிந்தது. அரசர் இருந்த காலத்தில் நாடுபெற்ற நலங் கள் என்ன என்பதை நாம் சோழநாட்டுக் கோயில்களைச் சுற்றிப்பார்த்தே உரைவேண்டும். ஒருநாட்டின் பழைய வரலாறு கூறும் நினைவுக்குறிகளுள் ஆலயங்கள் தலைசிறந் தவை என்பது என் எண்ணம். குளக்கரைப்பிள்ளையார் தமக்கு ஆலயம் வேண்டாதிருந்தாலும் எத்தனை பெரு மையை அடக்கிவைத்துக் கொண்டிருக்கிறார். இருளு முன்பு நாம் அடுத்தவூர் போகவேண்டும்.'' என்றான் வடி வேலன். இருவரும் மாலைக்கதிரவனை வணங்கி நடந்தனர்.

---

# 7. அயல்மொழிப் பயிற்சி

எண் எழுத்து என்ற இருவகையுள் மனிதன் கற்க வேண்டிய கல்வியெல்லாம் அடங்கும் என்று நம் முன்னோர் கருதினர். இந்நாள் நாம் கற்க இயன்றிருக்கும் கல்வியின் துறைகளையெல்லாம் இந்த இருவகையுள் அடக்குவது அருமையே. எழுத்து என்ற துறையில் ஒவ்வொரு சிறுவனும் தன் தாய்மொழிப் பயிற்சியையே முதற்கண் தொடங்குகின்றான். இயற்கைநெறி இதுவே.

தமிழ்ச்சிறுவன் ருஷியாவிலே இளமைதொட்டே வாழநேர்ந்தால் அவன் தன் தாய்மொழியிலே தொடக்கக் கல்வி பெறுதல் எளிதில்லை. என்று கூறுதே அமையும். சில ஆண்டுகளின் முன்பு நம் தமிழ்மக்கள் டில்லி கல்கத்தா பம்பாய் சிம்லா பிரயாகை காசி முதலிய நகரங்களில் அவ்வந்நாடுதந்த மொழிகளிலேயே தம் இளஞ்சிறுவர் தொடக்கக் கல்வி கற்கவேண்டிய நிலையில் இருந்தனர். இன்று அந்நாடுகளில் நம்மினத்தார் கூட்டம் மிகுந்து கல்விச்சாலைகளும் நம்முறைக்கேற்ப அமைந்துவிட்டபடியால் நம் இளஞ்சிறார் இன்று நம்நாட்டிற்போலவே அங்கும் தொடக்கக் கல்விபெற வாய்ப்பு அமைந்துளது.

மலாய் நாட்டிலும் இலங்கையிலும் தமிழச்சிறுவர் தம் தாய்மொழியிற்பெற்ற பயிற்சியைக் காட்டிலும் ஆங்கிலத்தில் அழுத்தமான பயிற்சிபெற்றனர் என்ற உண்மையை உலகம் நன்கு உணரும். தொடக்கக்கல்வி தாய்மொழியிலேயே நிகழவேண்டும் என்ற இயற்கைநெறிக்கு இடையூறுகள் இன்றும் ஆபிரிக்காநாட்டில் நம் இனத்தார்க்கு உண்டு. இங்ஙனம் அங்கங்கே சில வேற்றுமைகள் இருப்பினும் பெரும்பாலும் தாய்மொழியே முதல் மொழியாக எங்கும் பயிலப்படுகிறது.

ஆனால் தமிழகத்தில் நெடுங்காலமாகக் குடியேறி வாழும் தெலுங்கரும் கன்னடரும் மலையாளிகளும் தம்

தம் தாய்மொழியிலே தொடக்கக் கல்விபெறும் பேற்றை இழந்து தாம் குடிபுகுந்த நாட்டுக்கு உரிய மொழியான தமிழையே இளமைமுதல் முதுமையளவும் கற்றுப் பழகித் தம் தாய்மொழிகளில் பேச்சுத்திறம் பெற்றிருந்தும் எழுதவும் படிக்கவும் அறியாதவராய் இருக்கின்றனர். இத்தகைய குடும்பங்களில் உள்ள இளஞ்சிறுவர் இந் நாளில் தமிழ்மொழியே தமக்குத் தாய்மொழி என்று எண்ணித் தம் முன்னோர் மொழியிலே பேசும்பழக்கத்தை யும் இழந்து நிற்கின்றனர். தென்னாட்டில் வாழும் சௌராஷ்டிர இனத்தார் தம் தாய்மொழியிற் பேச அறிந் திருந்தும் எழுதவேஅறியாதகாலம் சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது.

எவ்வகையில் ஆராய்ந்தாலும் தாய்மொழியில் அடிப் படைப் பயிற்சி பெறுவதே இயற்கைக்கும் விஞ்ஞான முறைக்கும் ஒத்ததாம். தாய்மொழியிலேயே காலம் எல் லாம் நடத்தும் வாய்ப்பு உலகில் எல்லார்க்கும் அமைவ தில்லை. தொடக்கக் கல்வி தாய்மொழியில் நன்கு பெற்ற ஒரு சிலர் பிறகு அதனை அடியோடு மறந்து வேற்று மொழிப் பயிற்சியில் ஊறி உலகம் புகழ வாழ்ந்ததும் உண்டு. சிலர் தாய்மொழியிலும் போதியவளவு பயிற்சி பெற்று அயல் மொழியிலும் நற்புலமை பெற்றுத் திகழ்வ தும் உண்டு. தாய்மொழிக்கு முதல் நிலை தருதல் இன்றி யமையாதது என்பதை அறிவுடைப் பெருமக்கள் எவரும் ஏற்றுக்கொள்வர்.

தாய்மொழிப் பயிற்சி ஒன்று கொண்டே உலக வாழ்க்கை நடக்குமா? பெரும்பாலோர்க்கு அயல்மொழி களைப் பயிலவே வேண்டாது வாழ் நாள் எளிதிற் கழிய லாம். அயல் மொழி என்ற வளவில் தமிழர்க்கும் தெலுங் கர்க்கும் மலையாளிகட்கும் பொதுவான புற மொழியாகிய ஆங்கிலத்தைப் பலர் நினைக்கக் கூடும். தமிழர் முதலிய திராவிட வகுப்பினர் எல்லார்க்கும் ஆங்கிலம் புற மொழியே ஆயினும் சென்ற மூன்று நூற்றாண்டாக

இந்திய நாட்டில் எத்தனையோ நன்மொழிகளைத் தாய் மொழிகளாகப் பெற்ற மக்கள் ஆங்கிலத்தைப் பயின்றே வாழ்வு நடாத்தி முன்னேறியிருக்கின்றனர். இந்திய மக்கள் அனைவர்க்குமே புறமொழியாகி, ஆளும் இனத்தார் தலை மேலமர்ந்து திணித்த மொழியாகி, நம் கல்விச்சாலைகளுள் நுழைந்த ஆங்கிலத்தை அயல் மொழி என்று கருதுவதிற் பயனில்லை. அயல் மொழி வேறு, புறமொழி வேறு என் பதை நம் உள்ளம் நன்கு உணரும்.

அயல் மொழிப் பயிற்சி நல்லதே என்று கூறும் அறிஞர், நம் நாட்டில் நம் மொழியோடு ஒத்த இன மொழியாகவோ வேறு வகையிலே தொடர்புள்ள மொழி யாகவோ, அடிக்கடி நம் செவிக்குள் நுழையும் உரிமை பெறும் மொழிகளையே அயல் மொழிகள் என்பர். ஆகவே அயல் மொழிப் பயிற்சி என்ற தொடர் மொழி நம் மொழி யோடு இணங்கத்தக்க உரிமை பெற்ற அயல் மொழியைப் பயிலும் பயிற்சியே என்று எண்ணத்தக்கது. தமிழகத்திற் பிறந்து தமிழகத்தில் வளர்ந்து, தமிழகத்திலேயே அடங் கும் பேற்றை யன்றி வேறு பேறு அறியும் வாய்ப்பே இல் லாத உழவன் மகனுக்கும், தொழிலாளன் மகனுக்கும், வணிகன் மகனுக்கும், அயல் மொழிப் பயிற்சி வேண்டுமா என்றால் வேண்டா என்றே கூறுவோம்.

வங்கத்துச் சரக்குக்களையும் மலையாளச் சரக்குக் களையும் மராட்டியச் சரக்குக்களையும் மரக்கலத்தாற் கொண்டு வந்து தமிழகத்தில் விற்றுப் பொருள் திரட்ட நினைக்கும் பெருவாணிகன் பல மொழிப் பயிற்சி பெற்றிருத் தல் நலமாமன்றோ? அவன் உள்ளூரிலேயே அடங்கியிருப் பினும், அவன் ஏவலரேனும் அயலகங்களுக்குச் சென்று சரக்குக்களை இறக்குமதி செய்தல் வேண்டும். அத் தொழில் துறைக்கு அவர்கள் அயல் மொழிப் பயிற்சி பெற்றேயிருக்கவேண்டும். பர்மிய நாட்டிலே பொருளீட் டச் செல்லும் பொருள் வணிகரும் சிங்கள நாட்டிலே

பொருள்திரட்ட முயன்ற பொருள் வணிகரும் பர்மிய மொழியிலும் சிங்கள மொழியிலும் பேச்சளவுக்கேனும் பயிற்சி பெறுவது இன்றியமையாததாயிற்று. இங்ஙனம் வாணிகம் காரணமாக ஒரு சிலர் பயின்ற புறமொழிகள் இன்று நம் இனத்திலே சிலர்க்கு நல்ல பயன் விளைத்துள்ளன.

வடகோடியிலிருக்கும் மக்கள் தென் கோடி வரை யாத்திரை செய்வதும், தென் கோடி மக்கள் அங்ஙனமே வடகோடி செல்வதும் பல நூற்றுண்டுகளாக இந் நாட்டில் உள்ள வழக்கமே. தென்னுட்டார் வடநாட்டு மொழிகளுள் ஒன்றேனும் அறியாது வடக்கே சென்றால், அங்குள்ள சில ரால் அடையும் துன்பத்துக்கு எல்லை உண்டோ? அவ்வண்ணமே வடநாட்டாரும் தென்னுட்டிலும் மொழியறியா முட்டுப்பாட்டால் அல்லற்படுவதுண்டு. வாணிகத்துறைக்காக அயல்மொழிப் பயிற்சி வேண்டப்படுவதே அன்றி யாத்திரைக்காகவும் வேண்டுவதே என்பது தெளிவாம்.

பொருள் தேடுவது தெய்வம் தேடுவது என்ற இரு வழிகளுள் உலக வாழ்வு அடங்கிவிடவில்லை. கல்வித்துறை, கலைத்துறை, பொழுதுபோக்குத்துறை முதலிய பல துறைகள் உண்டு. இன்று காட்சி நலம் தோன்ற வாழ்வையே படம் பிடித்துக் காட்டி மக்களை மயக்கும் சினிமாத் தொழில் மிகவும் வளர்ந்து விட்டது. இத்தொழிலில் மவுனப்படங்கள் காட்டப்பட்ட காலத்தில் எந்தப் படத்தையும் யாரும் பார்க்கலாம். பேசும்படங்கள் பெருகி வளர்ந்துள்ள இக்காலத்தில் தமிழர் தமிழ்ப்படமே பார்க்க வேண்டும் என்றோ, தெலுங்கர் தெலுங்குப்படமே பார்க்க வேண்டுமென்றோ, இந்தி மொழியாளர் இந்திப் படமே பார்க்கவேண்டுமென்றோ விதி வகுத்தல் கூடாது. இந்திப் படத்தில் உயர்ந்த கலைச்சித்திரம் ஒன்று இருந்தால் அதனைத் திராவிட இனத்தார் எல்லாரும் பார்க்கவே விரும்புவர். தமிழ்ப்படத்தில் சிறந்த கலை நலம் இருப்பது கேட்

டால் வட நாட்டார் எல்லாரும் தமிழ்ப் படம் பார்க்க விரும்பலாம். பேசும் படத்தைப் பார்க்கும்போது மொழியின் சுவையை உணராமல் படத்தின் கலை நலத்தை அறிந்து இன்புற எவராலும் இயலாது. இன்று நம் நாட்டு மக்களிற் சினிமாப் படம் பார்ப்பவர் நூற்றுவர்க்கு எண்பதின்மர்க்கு மேல் இருப்பரே அன்றிக் குறைந்திருக்க இயலாது. இத்தனை மக்களும் அயல் மொழிப் படங்களின் கலை நலத்தை உணர வேண்டின் அயல் மொழிப் பயிற்சி சிறிதேனும் பெற்று நலம் பெற வேண்டும்.

பத்திரிகைகள் மிகவும் வளரும் காலம் இது. புத்தகங்களும் புதுமை புதுமையாக வளரும் காலம் இதுவே. தமிழகத்தில் விளங்கும் பத்திரிகைகளில் உயர்ந்த கருத்துக்கள் வெளியானால் அவற்றைத் தெலுங்கரும், மலையாளிகளும், கன்னடரும், பிறரும் படிக்கக் கேட்க விரும்பலாம். ஒரு சிலரேனும் அச் செய்திகளைத் தமிழ் மொழியிலே நேரிற் படித்துத் தமது மொழியால் உணர்த்தும் ஆற்றல் பெற்றிருந்தாலன்றி அவ்வின்பத்தை அடைய இயலுமா? வங்க மொழியில் சிறு கதைகளும், பெருங் கதைகளும் இன்று நன்கு வளர்ந்துள்ளன. தெலுங்கு மொழியும் கன்னட மொழியும் பாய்ந்து வளர்ந்து வருகின்றன. இந்தி மொழியும், இந்திய நாட்டின் பொது மொழி ஆக வேண்டும் என்ற விருப்பத்தாற் பல துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருகிறது. தமிழில் தோன்றிய ஒரு பொருளை இந்தி மொழியாலும், இந்தி மொழியில் எழுந்த பொருளை அங்ஙனமே தமிழ் மொழியாலும், வங்கக் கருத்தைத் தமிழ் மொழியாலும், சிந்திக் கருத்தைத் தெலுங்க மொழியாலும் உரைக்கத் தெரிந்தவர் சிலரேனும் நாட்டில் இருக்க வேண்டாமா?

கவி ரவீந்திரர் இயற்றிய செய்யுள் எல்லாம் அவர் தாய் மொழியான வங்கத்தில் இயன்றதன்றோ? பாரதி பாட்டுக்கள் தமிழில் இயன்றவையன்றோ? வேமன்ன

பத்தியம் தெலுங்கச் செல்வம் அன்றோ? இம் மூவகைச் செல்வங்களையும் ஒரு கன்னடன் அடைய எண்ணினால் தன் மொழி ஒன்றே பயின்றிருந்தாற் போதுமா? தன் நாட்டை யொட்டிய அயல் நாட்டுள் வாழ்ந்து வளர்ந்து கொழிக்கும் மொழியைப் பயிலாதிருப்பதால், தன் அறிவே நன்கு வளர்வதற்கியலாது முட்டுப் படுவதை உணர்ந்து அவன் வருந்துவான். நம் தாய் மொழியில் இல்லாத பொருள் உண்டா என்ற உணர்ச்சி தாய்மொழிப் பற்றால் எழுவதே ஆயினும், அறிவு வளர்ச்சிக்கு இடையூறே விளைப்பதென்று துணிந்து கூறலாம்.

நம் இந்தியப் பெருநாட்டில் பலவகை மொழிகள் இன்று பேச்சு வழக்கில் உள்ளன. இவைகளுள் வட நாட்டு மொழிகளை ஒரு இனமாகவும், தென்னாட்டு மொழிகளை மற்றோரினமாகவும் கூறலாம். தென்னாட்டிற் பிறக்கும் பேறு பெற்றான் ஒருவன், அயல் மொழிப் பயிற்சி பெற மனம் கொண்டால் முதற்கண் தன் மொழிக்கு இன மொழிகளான தென்னாட்டு மொழிகளுள் ஒன்றிரண்டேனும் பயில வேண்டும். பிறகு மனமும் அவகாசமும் இருக்குமாயின் வட நாட்டு மொழிகளில் ஒன்றிரண்டு பயிலலாம். இங்ஙனமே வட நாட்டானும் தன் மொழிக்கு இனமான வட நாட்டு மொழிகளில் முதற்கண் நுழைவு பெற்ற பிறகே, தென்னாட்டு மொழிகளில் நுழைய வேண்டும். அயல் மொழிப் பயிற்சி வேண்டாத எவரையும், இன்ன மொழியை நீவிர் பயில வேண்டும் என்று கட்டளையிட்டுப் பயிலச் செய்யும் உரிமை எந்த அரசுக்கும் இல்லை.

இன்று நம் நாட்டுக் கல்விச்சாலைகளில் இளஞ் சிறுவர் தம் தாய் மொழியைக் கற்பதே அன்றி நாட்டுப் பொது மொழி என்று பல பெருமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்தி மொழியையும், உலகப் பொது மொழியான ஆங்கில மொழியையும் கற்க வேண்டியிருக்கிறது. இளஞ் சிறுவர்க்கு இங்ஙனம் மூன்று மொழி பயிற்றுவது குருவி

தலையிலே பனங்காய் வைத்த கதையாய் முடியுமே என்று சிலர் கருதுகின்றனர். இளஞ் சிறுவர் மொழிப் பயிற்சி எளிதிற் பெறுவது கண்கூடாகும். பங்களூர் நகரத்தில் உள்ள சிறுவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்துஸ்தானி என்ற நான்கு மொழிகளும் எளிதில் ஆள்கின்றனர். மங்களூர்ப் பக்கம் இருப்பவர் மலையாளம், கொங்கனி, கன்னடம் என்ற மூன்று மொழியும் எளிதில் பயில்கின்றனர். பிறமொழிக் கலப்புக்கு வாய்ப்பமைந்த ஒட்டு நாடுகளில் வாழ்பவர் பல மொழிகளையும் பயில்வது எளிதேயாம்.

புற மொழிகளுள் நமக்கு நெடுங் காலப் பழக்கம் உள்ள மொழி ஆங்கிலமே. உலகப் பெருமன்றங்களில் ஒப்புயர்வற்ற இடம் பெற்றிருப்பது ஆங்கிலமே ஆதலின், நமக்கு வாய்த்துள்ள இவ்வரும் பெறற் செல்வத்தை எவ்வாற்றானும் நாம் இழத்தலாகாது. இன்று நாம் தன்னரசு நாட்டில் வாழ்கின்றோம். உலகப் பெருமன்றம் நம் நாட்டின் கருத்தை அறிய வேண்டும். உலகத்தில் உள்ள பிற அரசுகள் நம் உறவை நாடுவது போல நாமும் அவைகளின் உறவை நாட வேண்டும். இந்த முறையிலே பணிபூணப் புற நாட்டு மொழிகளில் இரண்டு மூன்று அறிந்த அறிஞர் சிலர், நம் நாட்டின் பிரதிநிதிகளாக அயல் நாடுகளுக்குச் செல்ல வேண்டும். ஆங்கிலம் நமக்கு எளிதே ஆயினும் நம்மில் ஒரு சிலரேனும் பிரெஞ்சு, செருமனியம், ருஷியம், ஸ்விசு மொழி, இத்தாலியம் முதலியவை பயின்றிருக்க வேண்டும். இங்ஙனம் புற மொழிப் பயிற்சி பெற வேண்டிய சிறுவர் பலர் இல்லை ஆயினும், இத்துறையில் மிகவும் முயன்று முன்னேறினோர் தமக்கும் தம் குடிக்கும் தம் இனத்துக்கும் தம் நாட்டுக்கும் புகழ் தேடத் தக்க பொறுப்பு ஏற்பவராவர் என்பதை நாம் நன்கு உணர வேண்டும்.

# 8. வாழ்க்கைத் துணை

புகுந்த மனைக்குத் தகுந்த மாண்பு உடையவளாய்த் தன்னை மணந்த தலைவனது வருவாய்க்குத் தகவே குடித் தனம் நடத்தும் பெண்மணியே வாழ்க்கைத்துணை ஆவாள். 'குடித்தனமோ துரைத்தனமோ' என்ற பழமொழிக்கிணங்க ஒரு பேரரசின் வரவு செலவுகளை மேற்பார்க்கும் அமைச் சனைப் போன்ற அறிவும் உழைப்பும் ஒரு மனப்பாடும் வாழ்க்கைத் துணையாய் வருவாளிடம் அமைய வேண்டும்.

வாழ்க்கைத் துணைவிடம் மனைமாட்சி நன்கு அமைய வேண்டும். மனைமாட்சியுள்ள பெண்மணி இவள் என்று எடுத் துக் காட்ட விழைந்த புலவர் ஒரு அழகிய சித்திரத்தைத் தீட்டுகின்றார். நெடுங்காலமாகப் பல தலைமுறையாக நன்கு வாழ்ந்த மனை ஒன்றில் ஒரு பெண் மருமகளாக நுழைகின் றாள். சில்லாண்டுகளில் மழையில்லாக் குறையால் குடித் தனத்தின் வருவாய் குறைகின்றது. வாழ்ந்த குடி ஆத லாலே அதனைத் தேடி விருந்துண்ண வருவோர் குறையா திருக்கின்றார். ஒரு குளத்து நீரையே மனைக்குள் திருப்பினு லும் வருகின்ற விருந்தினர்க்கு உணவும் நீரும் அமைக்கப் பற்றுமோ பற்றாதோ என்றிருக்கும். இங்ஙனம் வாழ்ந்த குடிக்கு வறுமைச்சுவையை அறியும் காலம் வருகிறது. நீர் வற்றிய வற்கடநிலையால் ஒரு குடம் தண்ணீரில் எப் படியோ உணவு ஆக்கி இல்லத்துள் இருக்கும் தலைவன் தலைவியர் கஞ்சியோ கூழோ காய்ச்சிக் குடித்து இரவு கண் ணயரவும் வழியறியா திருக்கின்றனர். இத்தகைய நிலையில் ஒருநாள் நள்ளிரவிலே அயல்நாட்டின் பஞ்சத்தால் வருந் திய சுற்றத்தார் பெருங்கூட்டமாகத் திரண்டு வருகின்ற னர். இரவு முழுதும் வண்டிகள் வந்த வண்ணமாய் இருக் கின்றன. விருந்தினர் இரவெல்லாம் மனைக்குட் புகுகின் றனர். விடியற்காலையிலும் பலர் வருகின்றார். மனைத் தலைவி தனது குடித்தனத்தின் நிலையையும் இத் துணைப் பெருங்

கூட்டம் வந்த வகையையும் நினைத்துப் பார்க்க நேரம் உண்டோ? விதைக்காக வைத்திருந்த நெல்லை எல்லாம் இரவோடிரவாக இடித்துப் புடைத்து அரிசியாக்கி மறு நாட் காலை உலையேற்றி விடுகிறாள். எத்தனை கல அரிசி ஆக்கப்பட்டது என்பதை உண்டவரும் அறியார்; ஊட்டியவரும் அறிய வில்லை. ஒரு கடல் பெருகி வந்தாலும் இந்தக் கூட்டத்துக்கு உண்ணவும் பருகவும் தண்ணீர் பற்றாதே என்று கண்டவர் பேசினர். இக் கேள்வி தன் செவியில் வந்து சார்ந்தும் மனைத்தலைவியின் முகமலர்ச்சி சிறிதும் மாறவில்லை. இன்னும் விருந்தினர் உண்ண வருகின்றாரா என்றே பார்த்திருந்தாள். இச் சித்திரம் தமிழகத்தின் பெண் மக்கள் இயற்கைப் பண்பை விளக்குவதாம்.

புலவர் பாடிய பாட்டு நம் உள்ளத்தில் என்றுமே பொறித்து வைக்கத் தக்கதாம். அவர்காலம் பழையதே. அவர் கருத்து இன்றும் நாளையும் நம் நாட்டில் நின்று நிலவும் பெண் மக்கள் பண்பை விளக்குவதே ஆகும். அவர் பாட்டு இதுவே.

> "குடநீர்அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
> கடனீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
> கடனீர்மை கையாறுக் கொள்ளும் மட நீர்மை
> மாதர் மனைமாட்சி யாள்.

இங்ஙனம் புகழ்ப்பட்ட மனைமாட்சி இல்லக் கிழத்தியிடம் வாயாதிருக்குமாயின் அம்மனை வாழ்வு செல்வச் செழிப்பாலும் கல்விச் சிறப்பாலும் அதிகார நிலைமையாலும் உலகத்தார் விழையும் பிற உயர்வுகளாலும் சிறந்திருப்பினும் உண்மையிற் பெருமை பெறாது என்று புலவர்கருதுகின்றார்.

'புராண இதிகாசங்களில் வரும் வாழ்க்கைத் துணையியர் வரலாறுகளை நாம் கற்றும் கேட்டு மிருக்கிறோம். தமிழக வரலாற்றிலே பெண் மக்கள் பெருமையை நன்கு

விளக்கும் பல வரலாறுகள் உண்டு. வடநாட்டு வரலாற்றிலும் பெண்டிர் சிறப்பை விளக்கும் செய்திகள் பல உண்டு. மேல் நாட்டு வரலாறுகளிலும் பத்தினிப் பெண்டிர் வரலாறு பல உண்டு.

பூதப் பாண்டியன் என்ற தமிழ் மன்னன் தலைவி பெருங்கோப் பெண்டு தமிழினத்துக்கே அழியாப் புகழ் விளைத்தவள் ஆவள். அப் பெண்ணரசி இளமை நலம் சிறந்த அழகி. கல்வியும் கலையும் குடி புகுந்த கலைச் செல்வி. அரச குலத்திற் பிறந்து அரச குலத்தே புகுந்திருந்தும் காதற் செல்வம் குறையாத வாழ்வு படைத்தவள். பூதப் பாண்டியனும் புலமை சிறந்தவன். வாட்போர் விற்போர் மற்போர் வல்லவன். அவன் குலத்திற்கு இசைந்த விளக்காக வந்து புகுந்த அரசி, நூல் ஆராய்ச்சியிலும் கலை நலம் துய்ப்பதிலும் தலைவனுக்கு உற்ற துணையாக இருந்தாள். அவன் வாழ்க்கை அவளால் நிரம்பியது. அவள் வாழ்க்கை அவனால் மணம் பெற்றது. ஒத்த குலமும், ஒத்த நலமும், ஒத்த கல்வியும், ஒத்த பண்பும் உடைய இத் தலைவன், தலைவியரை இசைத்த இறைவன் செயலை உலகமே கொண்டாடியது. போர்க் களங்களுக்கு அடிக்கடி அரசர் சென்ற காலம் அது. பூதப் பாண்டியன் ஒரு போரில் விழுப்புண் பட்டு இறந்தான். செய்தி அரசி செவிக்கு எட்டியது. அரண்மனைப் புறத்தே என்றும் வந்தறியாத இளம் பசும்பொற் கொடியான பெருந் தேவி அன்று புறங்காட்டுக்கு இருள் சூழ்ந்த இரவிலே புறப்பட்டாள். தலைவன் உடல் வேகும் ஈமப் புறங்காட்டை விரைந்தணுகினாள். சான்றோர் தடுத்தனர். புலவர் கண்ணீர் சிந்தினர். அரசி சான்றோரை இகழ்ந்து தீப்பாய்ந்தாள். உண்மையில் வாழ்க்கைத்துணை இஃதன்றோ!

பேகன் மனைவி கண்ணகியும் வாழ்க்கைத் துணைவிக்கு உரிய இலக்கணம் நன்கு அமைந்தவளே ஆவள். காட்டிலே மேகம் எழக்கண்டு ஆடிய மயிலை நோக்கிய பேகன்

தன் தோள் மேலிருந்த விலை மிக்க போர்வை ஒன்றை அதற்குப் போர்த்தினன். அத்தகைய வள்ளல் மயிலினும் அழகிய கண்ணகியை மறந்து வேறொரு பெண்ணுடன் வாழ்ந்தான். மலைமேல் அரண்மனையில் அவன் புதிய காதலியுடன் வாழ்ந்தான். கண்ணகியோ மலையடிவாரத்தில் தனித்து இருந்தாள். புலவர் நால்வர் அவ்வழியே வந்தனர். கண்ணகியின் துயர்க்கோலம் கண்டனர். கற்பரசியின் கோலம் இது வென்று அவள் விளக்கினள். பூவும் நெய்யும் புனையாத வறுந்தலையோடு நெற்றி பொலி விழக்க நின்ற அப்பெண் ணணங்கின் மனத்தை உணர்ந்த புலவர்கள், பேகனிடம் முறை யிட்டு அவள் மனவுறுதியை விளக்கி யுரைத்து வாழ்க்கையை நேர்மையுறச் செய்தனர். துணையைப் பிரிந்த தலைவி இருக்கும் நெறி இது என்பதைக் கண்ணகி நன்கு விளக்கியதை அப் புலவர்கள் பேகனிடம் பாடிய பாட்டுக்களிற் காணலாம்.

கரிகாலன் மகள் ஆதிமந்தியார் வரலாறு ஒன்று சங்கச் செய்யுட்களில் வருகிறது. இளவரசியை மணந்தவன் சேரகுலத்தானாகிய அத்தி என்பவனும். இவன் ஆடல் பாடல் வல்ல கலைச் செல்வன். புகார் நகரத்தை உலகம் புகழ அமைத்த கரிகாற் சோழன் பொன்னிப் புதுநீர் விழாவிற்காகக் கடலும் யாறும் கலக்கும் துறைக்கு வந்தான். அத்தியும் அன்று அங்கு இருந்தான். சோழநாட்டு இளஞ் சிங்கங்கள் நீர்விளையாட்டில் தம் திறமை யெல்லாம் விளக்கினர். அத்தி சேரநாட்டார் விளையாட்டைப் பாராட்டினன். மன்னன் கண்டுகளிக்கும் வண்ணம் தானே இறங்கி நீந்தியும் மூழ்கியும் ஆடியும் தன் நீத்துக்கலைத்திறத்தை விளக்கினன். புது நீர் பெருகியது. கடல் நீர் யாற்று நீரை எதிர்த்தது. நீந்திய இளைஞர் எல்லாம் கரையேறினர். அத்தி ஒருவனே களைப்புறாது நீந்திக் கொண்டிருந்தான். ஒரு சுழியிலே சிக்கி உள்ளே அழுந்தினன். ஆதிமந்தியார் உள்ளம் கலங்கினள். ஆடவர் பலர் நீந்த வல்லார் இருந்தும், ஒருவரும் தன் தலைவனை மீட்க இயலாத நிலையை

உணர்ந்து தானே பெருகும் காவிரியிற் பாய்ந்தாள். அவன் வீழ்ந்த இடத்தே மூழ்கித் துழாவினுள். விரைவில் ஓடும் வெள்ளம் கடலோடு கலக்கும் இடத்தில் அகப்பட்ட உயிரை எளிதில் விடுமா! அத்தி மறைந்த இடம் தெரியாது ஆதிமந்தியார் யாற்றாடே நீந்திச் சென்றாள். ஒரு பெண்ணிளஞ் செல்வி தன் தலைவனைத்தேடி யாற்றுள் நீந்தும் காட்சி கண்டு எல்லாரும் மனம் கலங்கினரே அன்றி, ஒருவரும் உதவிபுரிய வந்தாரிலர். அரசனும் மனம் தளர்ந்து கரை வழியே தேர் நடத்தி ஆட்களை ஏவினான். மருதி என்ற இளம் பெண் ஒருத்தி ஆதிமந்தியார் நிலையை உணர்ந்து யாற்றுட் குதித்து இளவரசி அருகே வந்தாள். இருவரும் தேடுவோம் என்று கூறி நெடுந் தொலை நீந்தினள். சிறிது பொழுதில் கடல் நீரில் மூழ்கிக் கொண்டிருந்த அத்தியின் உருவத்தை ஆதிமந்தியார்க்குக் காட்டினள். இருவரும் விரைவிற் பாய்ந்து அவன் அழுந்திய அலையருகே வந்து அவனைப் பற்றி வந்து கரை சேர்த்தனர். சத்தியவானை இழந்த சாவித்திரி தென்றிசைக்கோனுடன் வாதாடித் தன் நாயகன் உயிரை மீட்டு வந்தாள் என்பது புராணக்கதையாம். ஆதிமந்தி கடற்குட் புகுந்து நாயகனை மீட்டு வந்து வாழ்க்கையை வளம் படுத்தியது தமிழகத்தின் வரலாறும்.

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தின் தலைவன் தலைவியாய் அமைந்த கோவலன் கண்ணகியர் வாழ்வைத் தமிழ் மக்கள் நன்கு உணர்வர். கோவலனுக்கு வாழ்க்கைத் துணையாக அமைந்த கண்ணகி பெருங்குடி வாணிகருள் மாநாய்கன் என்ற பெருஞ் செல்வன் மகளாம். கோவலனும் மாசாத்துவான் என்ற வணிகர் பெருந்தகைக்கு இறைவன் அருளிய அரும் பெறல் மைந்தன். செல்வத்திற் சிறிதும் குறைவற்ற இவ் விருவரும் உரிய பருவத்தே மணம் புரிந்து தம் குல வழக்கப்படி தனிக் குடித்தனம் செய்யப் புறப்படும்போது கோவலன் மாதவி என்ற கணிகையின் உறவு பெற்றான். கண்ணகி மணம் புரிந்த கணவனை ஒரு நாளேனும் தன் இல்லத்திலே வரவேற்று

இன்புறும் பேறு பெற வில்லை. மாதவி பொது மகளிர் குலத்திலே பிறந்தவ ளாயினும் அறுபானான்கு கலைகளிலும் சிறந்த பயிற்சி பெற்று அரசர் மதிக்கும் கணிகையாக விளங்கினாள். அவள் தாய் சித்திராபதியும் அரசரால் மதிக்கப் பெற்ற கணிகை யாவள். குலத்துப் பிறந்த பெண் ஒருவனை மணந்து அவ்வொருவனுக்கே உரிமையாகி வாழ்வை நடத்தும் வழக்கம் போன்றே, கண்ணகி மணந்த கோவலனைத் தனக்கு உரிமையாக்கித் தான் அவனுக்கே உரிமையாகி வாழத் துணிந்தாள். கோவலன் தன் மனைவி கண்ணகியை மறந்தே, சில வாண்டு கழித்தான். கண்ணகி தன் பெற்றோர் அறியத் தன் துயரத்தைச் சிறிதும் விளக்காமல், இல்லற நெறிக்கு அமைந்தவாறு அடங்கி வாழ்ந்தாள்.

விதி வசத்தால் கோவலன் ஒருநாள் நீராட்டு விழாவிலே மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் வந்தான். அப்பொழுது அவன் தன் செல்வத்தை யெல்லாம் இழந்து வறிய நிலைமை அடைந்திருந்தான். அப்பொழுதும் கண்ணகி அவன்மேல் வெறுப்பைக் காட்டவில்லை. 'மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இன்மையால் வந்தாரோ' என்று எண்ணித் தன் சிலம்புகளில் ஒன்றைக் கொடுக்கின்றாள். அதனைப் பெற்ற கோவலன். "பெண்ணே, நான் முன்னோர் வைத்த செல்வத்தை யெல்லாம் இழந்தேன். வாழ்ந்த நகரில் வறிஞனாக இருக்க மனம் கொள்ளேன். இச் சிலம்பை முதலாகக் கொண்டு வாணிகம் செய்து பொருளீட்டத் துணிந்துளேன். இப்பொழுதே மதுரைக்குப் புறப்படுகின்றேன். நீயும் வருவாயா?" என்று கேட்டான். கண்ணகி கோவலன் குறைகள் ஒன்றையும் நினையாது இரவே அவனுடன் புறப்பட்டாள்.

கவுந்தியடிகள் துணைபெற்றுக் கோவலனும் கண்ணகியும் மதுரைக்கு வந்தனர். மதுரையிற் கோவலன், மாதரி என்ற ஆயர் மகள் குடிசையில் கண்ணகியை அமரச் செய்

தான். அன்றளவும் அவளை மனைத்தலைவியாக நடத்தியறியாத கோவலன், அன்று அவள் சிறப்பை உணர்ந்து உருகுகின்றான். மாதரி தந்த இளம் பலாக்காய், வெள்ளரிக்காய், மாதுளங்காய், மாங்கனி, வாழைக்கனி, சாலியரிசி, தயிர், பால், வெண்ணெய், நெய் முதலிய பொருள்களைக் கொண்டு கண்ணகி தன் தலைவனுக்கு உணவு ஆக்கி இடுகின்றாள். அன்றளவும் இப் பேறும் இக் கற்பரசிக்கு வாய்த்திலது என்றே கருத வேண்டும். பனையோலைத் தடுக்கை இருக்கையாக இட்டுத் தலைவனை உண்ண அழைக்கின்றாள். நிலத்தைகுளிர மெழுகிக் குமரிவாழைக் குருத்தை விரித்து "அடிகாள் அமுதம் உண்ண வருக" என்று அழைக்கின்றாள். இப்புதுமையை உள்ளமுற உணர்ந்த கோவலன், மனமகிழ உண்டு கைகழுவி அருகே மற்றோரிருக்கையிற் அமர்ந்தான். அப்பொழுது அவன் மனம் பட்ட பாட்டை இறைவனே அறிய வேண்டும்.

கண்ணகி இலையிட்டு உண்ணப் போகுமுன், அவளைத் தன் அருகே அழைத்தான். "பெண்ணே கல்லும் முள்ளும் மிகுந்த காட்டு வழியில் நடக்க உன் அடிகள் ஆற்றல் உள்ளவையா? நம் பெற்றோர் இருவரும் நம்மைப் பிரிந்து என்ன துயரம் அடைவரோ? இங்ஙனம் நமக்கு அமைந்தது நம் வினைப்பயனோ? செய்யத் தகாத பாவம் எல்லாம் செய்து தீயோர் சேர்க்கையால் அழிந்த எனக்கு நற்கதியும் உண்டோ? இருமுதுகுரவர் ஏவல் இயற்றும் கடமை தவறினேன். இளஞ்செல்வியாயினும் அறிவின் மிக்க கற்பரசியான உனக்கும் சிறுமை விளைத்தேன். நகர் நீங்கிப் புறநகர்க்கு வருக என்று அழைப்பது குற்றம் என்று நினையாமலே அழைத்தேன். அழைத்த அழைப்பை மறுத்து எதிர்மொழி உரையாமல் உடனே வந்தாயே" என்றான். "அறவோர்க்கு அளித்தல், அந்தணரைப் பேணல், துறவோர்க்கு உரியன செய்தல், விருந்தினரை ஓம்பல் என்ற அறங்களை யெல்லாம் இழந்த என்னை, உம் தாயும் தந்தையும் அன்போடு பேணி உம்மிடம் சினங் காட்டியிருந்தனர்.

என்னிடம் அன்பே பூண்டு என்னை என்றும் நன்கு பாராட்டினர். நான் என் மனத்தில் ஒளித்து வைத்த துயரத்தை எனது புன்னகை விளக்குவதாக உணர்ந்து வருந்தினர். இங்ஙனம் உம் பெற்றோர் வருந்தும்படி தகாத ஒழுக்கத்தை மேற்கொண்டீராயினும், அளியேன் என்றும் உம்மை யன்றி வேறு ஒருவரையும் கனவிலும் நினையாத உள்ள வாழ்க்கை உடையேனாதலால், அழைத்தவுடன் புறப்பட்டு வந்தேன்" என்று கண்ணகி இன்முகத்துடன் உரைத்தனள்.

கோவலன் அம்மொழி கேட்டு "நாணமும் மடமும் கற்புமே துணையாக ஆபத்தை நீக்கி என்னோடு வந்து என் துயர் களைந்த பொன்னே, கொடியே, புனைபூங் கோதாய், நாணின் பாவாய், நீணில விளக்கே, கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி" என்று கூறிப் பாராட்டி அவள் சிலம்பு ஒன்றைப் பெற்று நகர்க்குட் சென்றான். சிலம்பு விற்கச் சென்றவன், பொற் கொல்லன் சூழ்ச்சியாற் கொலையுண்டான்.

கண்ணகி தன் கணவன் இறந்த செய்தியை அறிந்து கொண்டாள். தனது கற்பை உலகம் அறிய வெளியிடும் வாய்ப்பைப் பெற்றாள். முறையில் அரசன் ஊரில் இருந்து வாழும் பத்தினிப் பெண்டிரை விளித்தே தன் கருத்தை உரைக்கின்றாள். அங்கு, மாதர்த்தகைய மடவார் முன்னர் தன் காதற் கணவனைக் கண்டு பேசுவதாகச் சூள் உரைக்கின்றாள். அங்ஙனமே கண்டு பேசவும் செய்கிறாள். வாழ்வின் நலம் ஒன்றும் வாயாத இக் கற்பரசி தீயாரை அழிக்க வந்த தெய்வமாகவே விளங்கினாள். மாதரி குடிசைப் புறத்தில் ஒருபொழுது கணவனுக்கு உணவு பரிமாறப் பெற்றபோது, இப்பெண்ணணங்கின் வாழ்க்கைத் துணை நலம் நன்கு வெளியாகின்றது.

'மனைக்கு விளக்கம் மடவாள்' என்று கருதிய தமிழ்த் திருநாட்டில் அன்று முதல் இன்றளவும் பெண்மக்கள் தமக்குரிய அறத்தை அறிந்தே நடக்கின்றார்கள். பாரதப் பெரு

நாட்டுக்கே இவ்வொழுக்கம் பொதுவுடைமையாம் என்பது நம் நாட்டின் வரலாற்றுப் பகுதிகளைப் படிப்பதால் நாம் நன்கு உணரலாம். டில்லி மாநகரின் வரலாற்றில் ஒளி சிறந்த மாணிக்கமாக விளங்கும் சம்யுக்தா தேவியை உலகம் உணரும். பிருதிவி ராஜனுக்கு அமைந்த பத்தினியாக அவ் வீரப் பெண்மணி விளங்கியதை நம் உள்ளம் உணர்ந்து உருகும். இராசத்தானத்தில் பத்மினி என்ற பெண்ணரசி யின் கற்பும், சிறப்பும் உலகம் அறிந்ததொன்றும். கற்பைக் காக்க உயிரை விட்ட பெண் மக்கள் அந்நாட்டிலே எத்துணையோர் என்று இன் று வரையறுத்தல் எளிதன்று.

வாழ்க்கைத் துணை என்ற இப்பொருளுரைக்குச் சிறப் புதவும் வண்ணம் நம் கண் காண வாழ்ந்த ஒரு கற்பின் செல்வியை நாம் நினையாதிருக்க இயலாது. இந்தியப் பெரு நாடு இன்று தன்னரசு நாடாக உலகம் மதிக்க வாழும் பெருமையை அளித்த ஒரு பெரியோர் காந்தியடிகள் என்பதை எவரும் மறுக்கத் துணியார். இவர் ஆப்பிரிக்கா நாட்டில் சத்தியாக்கிரகம் நடத்த நினைத்த காலத்திலும் இந்தியாவில் சுதந்திரப் போர் நடத்த நினைத்த காலத்தி லும் இவர்க்கு உற்ற துணையாக நின்ற புண்ணியச் செல்வி கஸ்தூரிபாய் என்பதை நாம் அறிவோம்.

கஸ்தூரிபாய், காந்தியடிகளுக்கு வாழ்க்கைத் துணை யாய் அமைந்தது மிகவும் இளம் பருவத்திலே ஆகும். அப் பருவம் முதல் தளர்ந்த முதுமை வரையில், நாயகர் இழுத்த வழியெல்லாம், அவர் விரும்பிய வண்ணமே மனமொத்து நடந்து உலகம் கொண்டாடும் உத்தமியாக விளங்கினாள். காந்தியடிகள் வறுமை நோன்பு கடைப்பிடிப்பவர். நண்பர் சிலர் தந்த பரிசிற் பொருளையும் கஸ்தூரிபாய் தனக்கென்று வைத்துக் கொள்ளாமற் பொதுப் பொருளாக்க வேண்டும் என்று அவர் கூறியபோது மறுப்புரைக்காமல் இணங்கியதை அவர் வரலாற்றிற் காணலாம். இளம் பருவத்தின் உணர்ச்சி நீங்காத பொழுதே நாயகர் விரும்பிய வண்ணம்

அவர் பூண்ட பிரம்மச்சரிய விரதத்துக்கு இடையூறு விளையாது துணை பூண்ட பெருமையும் இப்புண்ணியவதிக்கு உண்டு. இன்று கோடிக்கணக்கான பணத்தால் நாட்டிலே பெண் மக்களுக்கு உரிய அறங்கள் பல இப் பெண்மணி பெயரால் நிகழ்கின்றன.

# 9. தமிழ்மக்களும் மலர்களும்

மலர்களை விரும்பாத மக்கள் உலகில் இல்லை. மலர்களின் மணத்துக்காகவே அவைகளைத் தொடுத்தும் கோத்தும் அணியும் வழக்கம் உலகம் எங்கும் உண்டு. ஜப்பானியர் தம்மில்லங்களையும் மலர் மயமாக்குவர். தோட்டம் இல்லாத வீடே இல்லை என்று கூறலாம். சீனருக்கும் மலர்ப் பைத்தியம் உண்டு. ஆங்கிலேய மக்களும் பிரெஞ்சு மக்களும் மலர்களைப் பலவகையால் அடுக்கிவைத்துக் கண்களாற் கண்டு மகிழ்வர். வங்கநாட்டில் ஒரு வழக்கம் உண்டு. மனை வாழ்க்கையில் நிலைத்த பெண்கள் மலர்களை அணிவது சிறுமை என்றும் மனைப்புறவாழ்க்கை தொடங்கிய பெண்களே மலர்களை விழையலாம் என்றும் அங்குள்ள நன் மக்கள் கருதுகின்றனர். கடுஞ்சினம் உருவெடுத்த போர் மறவனும் மலரை விரும்புகின்றான் என்பதை அவன் நடக்கும் வழியில் எங்கேனும் ஒரு மலர்ச்செடி கண்டால் ஒரு பூவை ஆயினும் பறித்து அவன் சட்டையிற் செருகிப் போக விழைவதால் அறியலாம். ருஷியரும் மலர் விருப்பம் உடையர் என்ற உண்மையை நம் முதலமைச்சர் அங்குப் பெற்ற மலர்மய வரவேற்பே விளக்கும்.

தமிழகத்தில் மலர்களுக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. இன்றுள்ள வாழ்க்கை முறையில் பெண்மக்கள் நாள் தோறும் மாலைக்காலத்தில் மலர்களை விலைக்கு வாங்கியேனும் தொடுத்து அணிய விரும்புவதைக் காண்கிறோம். திருமண நிகழ்ச்சியில் மலர்மாலைகள் மிகவும் பயன்படுவது காண்போம். பிணங்களையும் மலரலங்காரம் செய்தே எடுத்துப் போகும் வழக்கம் நாடு முழுவதும் உண்டு. தம் வீட்டுத் தோட்டங்களில் மல்லிகை, முல்லை, பிச்சி, இருவாட்சி, ரோஜா முதலிய மலர்கள் மலரச்செய்து அவைகளை அன்றன்று பறித்து நாண்மலராகத் தொடுத்து அணிவதில் பெண்மக்களுக்கு இருக்கும் விருப்பம் எல்லையற்றதே. செவ்வந்தி, மல்லிகை முதலிய மலர்களே மிகுதியாய் வழங்

கிய தமிழகத்தே இந்நாளில் கனகாம்பரம் என்ற மணம் சிறிதும் இல்லா மலர் ஒன்று புகுந்து நம் நாடெங்கும் பெண்டிர் மனத்தைக் கவர்ந்து வருகின்றது.

பண்டை நாளில் நம் முன்னோர் மலர்களை வாழ்வின் இன்பத் துறையிலும் போர்த்துறையிலும் நன்கு பயன் படுத்தினார்கள். இன்ப வாழ்வு அகப்பொருள் எனப்படும். ஒழிந்த வாழ்வு எல்லாம் புறப்பொருள் எனப்படும். அகப் பொருள் ஐந்து திணைகளை உடையது. குறிஞ்சி என்ற ஒழுக்கம் மலைப்பக்கம் நிகழ்வது. மலையில் மலரத் தக்க மலர்களைக் குறிஞ்சி நிலத்துப் பெண் அணிந்திருக்க வேண் டும். முல்லை என்ற ஒழுக்கம் காட்டுப் பக்கம் நிகழ்வதாம். முல்லைக் கொடியை வளர்த்து மலர்களை அணிவது பெண் டிர்க்கு உரிய வழக்கமாம். மருதத் திணை நாட்டில் நிகழ் வது. வயல்களிலும் குளங்களிலும் மலரும் மலர்கள் மரு தத்துப் பெண்கள் அணியத் தக்கன. நெய்தல் என்ற ஒழுக்கம் கடற்கரையில் நிகழ்வது. நெய்தற் பெண்கள் தாழம்பூவை விருப்பத்தோடு அணிவர். நெய்தற் பூவும் உவப்புக்கு உரியதே. பாலையிலும் காடுகிழாளை வழிபடும் பொருட்டும் பிற தொழில்கள் நிகழும் பொருட்டும் மலர் களைப் பயன் படுத்துவர்.

அகத்திணையிலே மலர்களுக்கு உள்ள மதிப்பைக் காட் டிலும் புறத்திணையில் மதிப்பு அதிகம் என்றே கூற வேண் டும். அகத்திணைகள் ஐந்து என்பது நிலத்தைப் பற்றி உரைக்கப்பட்டது. கைக்கிளை, பெருந்திணை என்ற இரு திணைகள் இந்த ஐந்தோடு சேர்ந்து வரும். அங்கும் மலர் கள் பயன்படுவது உண்டு. புறத்திணை ஏழென்றே தொல் காப்பியர் வகுத்து வைத்தார். பின்னாளில் வந்த ஆசிரியர் கள் புறத்திணைகள் பன்னிரண்டு ஆகுமென்று இலக்கணம் கூறினர். ஒவ்வொரு திணையிலும் போர்த் தொழிலே கூறப்படும். போர்த் தொழில் புரியப் புறப்படுவோர் இன்ன போர் புரிய இன்ன வகைப் பூக்களை அணிந்து போகவேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன.

போர் தொடங்கும்போது பகை நாட்டுக்கு முதலிலே தூது போகும். போர்க்கு உதவாத மக்கள் எல்லாரும் காவல் மிக்க இடங்களுக்குப் போய்விடுவர். அங்ஙனம் தாமே போக அறியாத ஆவினங்களைப் போரில் அழியாது காக்கவேண்டும். ஒரு சிறு அரணைத் தாக்கவரும் பகைவர் முதலில் அவ்வரணுக்குப் புறத்தே மேய்ந்து கொண்டிருக்கும் கன்று காலிகளைக் கவர்வர். 'சண்டைக்கு எடுபிடி மாடுபிடி' என்பது ஒரு பழமொழியாம். பாரதத்தில் பாண்டவர் அஞ்ஞாதவாசம் செய்த விராட நாட்டைத் தாக்க வேண்டும் என்று கௌரவர் எண்ணியபோது மாடு பிடித்ததும் அவை மீட்கப்பட்டதும் அறிவோம். மாடு பிடிக்க வரும் மறவர்கள் வெட்சிப் பூவை அணிந்துவர வேண்டும் என்பது புறத்திணை விதியாம்.

இங்ஙனம் பிடிக்கப்பட்ட கன்று காலிகளை மீட்பது அவற்றை வைத்திருந்த மறவர் கடமையாம். ஆதலின் அவர்கள் கன்று காலிகள் பகை மறவராற் கவரப்பட்ட செய்தி அறிந்ததும் தம் ஊர்க்குப் புறத்தே, வில், வேல், வாள் முதலிய படைகளோடு கூடிய வெட்சியார் அழைத்துச் சென்ற மாடுகளை இடைவழியிலே மறித்துப் போர் புரிந்து மீட்டு வருவர். இங்ஙனம் மீட்டு வரச் செல்பவர் கரந்தை மலர் அணிந்து போகவேண்டும். இவர் புரியும் போரும், நிரை மீட்சியும் கரந்தைத் திணை ஆகும்.

மாடு பிடிப்பதால் போர்க்கு வரும் எண்ணத்தைத் தெரிவித்த மறவர் பெரும்படையோடு புறப்பட்டு வஞ்சி மாலை சூடிப் போர் புரிய வருவர். இங்ஙனம் வஞ்சி சூடி வரும் பகைவரை உள்நாட்டவர் காஞ்சி மாலை சூடிப் படைகளோடு எதிர்த்துத் தம் நாட்டைக் காக்க முயல்வர்.

அரண் அமைத்து அதற்குள்ளே தக்க காவலோடு வாழும் மக்கள் அரண் மதில்மேற் பல படைகள் வைத்திருப்பர். அரண் கடந்து பகைவர் உட்புகுவது அருஞ் செயல் என்றே மதிக்கப்படும். அரணை வளைத்து முற்றுகை

யிட்டுக் கைக்கொள்ள வருவோர் தும்பை மாலை சூடி வர வேண்டும் என்பது விதியாம். தும்பை சூடி அரண் தாக்கும் பகைவரை அரணுள் இருப்பவர் நொச்சி மாலை சூடி எதிர்ப்பர். தும்பையார் வெற்றி பெற்றால் அரண் அழியும். நொச்சியார் வென்றால் தும்பையார் புறங்கொடுப்பர். அரண்காவலுக்கு உரிய நூற்றுவரைக் கொல்லி முதலிய படைக்கலங்கள் இருந்தால் நொச்சியார்க்கு வெற்றி வாய்க்கும்.

வாகைத்திணை என்பது பகைவரை வென்று அவர் நாட்டையும் அழித்து முழங்குதலாம். இத்திணைக்கு வாகைப்பூவைச் சூடவேண்டும் என்பது விதியாம். உழிஞை இதற்கு மாறானது. கைக்கிளை பெருந்திணை பொதுவியல் என்பவை புறத்திணையாம் என்று பிற்காலத்தார் உரைத்தனர். பொதுவியல் பலதிணைகளுக்கும் பொதுவான பொருள்களை உரைப்பது. கைக்கிளை பெருந்திணையும் அகத்தைச்சார்ந்த புறம் எனப்படும் பாடாண்திணை என்பது அரசரையும் வீரரையும் புகழ்ந்து பாடும் முறைகளை விளக்குவது.

தமிழகத்திலே சேர சோழ பாண்டியர் என்ற முடிமன்னர் மூவர் இருந்தனர். சேரர் தமக்கு உரிய பூவாகப் பனம்பூவை ஏற்றுக்கொண்டனர். சோழர் ஆத்திப்பூவை மதித்துச் சூடினர். பாண்டியர் வேப்பம்பூவைத் தமக்குரிய பூவாகக் கொண்டனர். இப் பூக்களைப் புலவர் சிறப்பித்த பாடல்கள் பல உண்டு.

சோழர் குலத்தார் ஆகிய நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் உறையூர் ஆவூர் என்ற அரண்களைக் கைக்கொள்ளப் பகை பூண்டனர். நெடுங்கிள்ளி அரண் அடைத்து அகத்தே இருந்தான். நலங்கிள்ளி முற்றுகையிட்டான். கோவூர் கிழார் அங்கு வந்து நெடுங்கிள்ளியைப் பார்த்து, "அரசிளங்குமர, நீ சூடும் தலைமாலையும் ஆத்திப்பூவால் ஆகியது. உன்னோடு போர்செய்யும்

அவன் அணியும் மாலையும் ஆத்திப்பூவால் ஆகியதே. போரில் உங்களில் யாரேனும் ஒருவர் தோற்றாலும் தோல்வியின் இழிவைப் பெறுவது சோழர் குடியே. இருவரும் வெற்றி பெறலாம் என்பது இயலாது. இப்போர் உங்கள் குடிக்குச் சிறப்பு உதவாது. பிறமன்னர் உங்களைப் பார்த்து இகழ்ந்து சிரிக்கவே இடமாம்'' என்று பாடினர்.

தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இளம் பருவத்திலே பகைவரை எதிர்த்தபோது வேப்ப மாலையும் உழிஞையும் சூடிப் போருக்குப் புறப்பட்டான் என்று புலவர் பாடுகின்றனர். சேரர் பனம்பூவும் சோழர் ஆத்தியும் பாண்டியர்கட்குரிய வேம்பும் தொல்காப்பியத்திலே எடுத்துரைக்கப்பட்டன. தொல்காப்பியர் காலம் முதலே புறத்திணைக்குரிய பூக்களும் அரசர்களுக்குரிய பூக்களும் வழக்கத்தில் இருந்தன என்று உணர்தல் வேண்டும்.

அகத்தும் புறத்தும் பூக்கள் பயன்பட்டதே அன்றி ஆலயவழி பாட்டிலும் மிகுதியாக உதவின. செவ்வந்திப் பூவில் வழிபாடு ஏற்ற சிவபெருமானைச் செவ்வந்தி நாதன் என்று கூறினர். மல்லிகைப்பூவால் வழிபாடு பெற்ற இறைவனை மல்லிகேசன் என்று கூறினர். ஆலயங்களில் ஆறு கால வழிபாடு அமைத்து ஒவ்வொரு காலத்திலும் நீராட்டும் மலர் அலங்காரமும் நிகழவேண்டும் என்று அமைத்துள்ளனர்.

சில தேவாலயங்களுக்குப் பூக்கள் உதவும்பொருட்டே நந்தவனங்கள் தருமமாக விடப்பட்டன என்பதைக் காஞ்சிபுரம் அவிநாசி முதலிய தலங்களில் உள்ள சில வரலாறுகளால் அறியலாம். திருவாரூர் வீதிகளே மலர்க் கதை பேசுவனவென்று புராணங்கள் கூறும்.

கமலாலயம் என்ற பெருங்குளம் திருவாரூரில் உள்ளது. அக்குளத்தின் இடையே திருமகள் கோயில்

ஒன்று உண்டு. அன்றியும் தாமரைப் பூக்கள் அதன் கண் மிகுதியாக வளரவும் இடம் உண்டு.

மயிலாப்பூரில் கபாலீசர் கோயிலுக்கு முன்னுள்ள பெருங்குளத்தில் எப்பொழுதும் தாமரைக்கொடி இருப்பது உண்டு. தாமரை இறைவனுக்கு உதவும் பூ என்று அன்பர் கருதியதால் குளங்கள் தாமரை வளரும் இடங்கள் ஆயின. நம் முன்னோர் மலர்களில் எத்தனை வகையான மாலை கட்டினர் என்பதற்கும் பண்டை வரலாறுகள் சான்று பகரும். மக்கள் நாகரிக சின்னங்களிற் பூ ஒன்றாகும்.

# 10. போரும் அமைதியும்

போரின் விளைவுகளை உலகம் நன்குணரும். போரை வேண்டுவோர் படைஞர் குழுவிலும் இல்லை என்று துணிந்து கூறலாம். படைக்கலங்கள் செய்வதை ஒரு தொழிலாக, வாணிகமாகக் கொண்ட குழுவினர் உலகில் எங்கேனும் போர் நிகழாதா, நம்மிடம் உள்ள படைக் கலங்கள் விலைப்பட இடம் கிடையாதா, நாம் மேலும் மேலும் இவ்வாணிகத்தாற் பொருள் திரட்ட வாயாதா என்று நினைப்பது இயல்பே. இக்குழுவினர் உலகத்து மக்கள் தொகையில் நூறுயிரத்தில் ஒருவர் இருக்கலாம். நூறுயிரத்துளொருவரேயான இவ்வினத்தார் கொழுக்கும் பொருட்டு உலகிலே போர் நிகழவேண்டும் என்றும் பல நூறுயிர மக்கள் உயிர்விட வேண்டுமென்றும் விரும்புவோர் மக்கள் இனத்தில் வேறு எவரும் இருக்க மாட்டார்.

அகம் புறம் என்று பிரிந்த இலக்கணப் பகுதிகளில் புறம் என்பது பெரும்பாலும் போர்த் தொழிலைப் பற்றியே பேசுவது. அகம் என்பது இன்பவாழ்வைப் பற்றி விளக் குவது. தமிழ் மக்கள் அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் இலக்கணம் முறைப்படி வகுத்து, இலக்கியமும் பல்லாயிரம் செய்யுட்களில் இயற்றிக் கொண்டாராயினும் இவ்விரு பொருளையும் பாடுவது தமிழ்ப் புலவரினத்துக்கே சிறப்பான உரிமை என்று கருதக்கூடாது. உலகத்தில் மொழிகளில் எல்லாம் இயன்றிருக்கும் பண்டைச் செய்யுட்களை ஆராய் வோமாயின் அவை கூறும் பொருள் இன்பம், போர் என்ற இரண்டே என்ற முடிவுக்கு வருவோம். தமிழ் மக்களுக்கு உள்ள சிறப்பு இவ்விருவகை வாழ்வுக்கும் பொருளதிகாரம் என்ற இலக்கணம் வகுத்துக்கொண்டதேயாம். பிறமக்கள் இலக்கணம் இன்றியே இலக்கியம் படைத்து இக்கருத்துக் களை வெளியிட்டனர். நம் முன்னோர் இலக்கியக் கடலும் தந்து அவை அமைந்த நெறிவிளக்கும் இலக்கண மலையும் அமைத்து வைத்தனர். ஆதலால் இன்ப வாழ்வில் வாழும்

மக்கள் போர்புரிய நினைப்பது இயல்பே என்பது உலக வரலாற்றை நன்கு ஆராய்வதால் அறியத்தக்க உண்மையாம். உலகம் தோன்றிய காலத்தை அறியோம். உலகத்தில் முதல் மகன் எங்கே பிறந்தான் என்பதையும் அறிய மாட்டோம்.

அகமும் புறமுமான இருவகை வாழ்வுகளையும் தம் தம் நாடுகளில் அமைந்த தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப வாழ்ந்த மக்கள், புறவாழ்வாகிய போர்த் தொழில் முறைகளில் தத்தமக்கு ஏற்ற வழிகளையே அமைத்துக் கொண்டார்கள். வில்லும் அம்பும் போர்ப்படையாக உதவிய வரலாறு தமிழகம் ஆரியநாடு என்ற இரு பகுதியாகப் பிரிந்த நம் நாட்டுக்கே தனியுரிமை என்று எண்ணத்தக்கதாகாது. விற்பயிற்சி உலகத்திற் பல நாடுகளில் முன்னுளில் வாழ்ந்த பழங்குடிகளிடம் இருந்தது என்பதை உலகப்பழங்குடிக ளின் வரலாற்றை ஆராய்வதால் நன்கு உணரலாம்.வேல் வாள் முதலிய அடுபடைகளையும் கேடகம் பரிசை எனப்பட்ட தாங்கு படைகளையும் உலக மக்கள் பலரும் அறிவர். தமிழ் மக்களும் பண்டைக் காலத்தில் வில் வேல் வாள் முதலிய படைக் கலங்களையே கையாண்டனர். தேவாசுர ராமாயண மாபாரதம் என்று கலிங்கத்துப் பரணியாசிரியர் முறைப் படுத்திய போர்களிற் பயன்பட்ட படைக் கலங்கள் பெரும் பாலும் இவையே என்று துணியலாம்.

பண்டைக்காலப் போர் முறையிற் படைஞர் தொகுதி கோடிக்கணக்காக இருந்திருக்க இடமில்லை. இராமாயண பாரதப் போர்களில் இறந்த படைஞர் தொகை மிகுதியே எனலாம். ஆயினும், அவை புலவர் உயர்வு நவிற்சி கலந்த கதைகளே. வடநாட்டு மன்னர் தம்முள் ஒருவரோடு ஒருவர் போர் செய்ய எதிர்த்தபோது தம் தம் நாட்டின் மக்கள் தொகுதிக்குப் பொருத்தமான சிறிய படைகளையே நிறுத்தியிருக்கக் கூடும். தமிழகத்து மன்னரும் வேளிரும் ஓயாது போர் புரிந்த கதைகளைப்

புறப்பாட்டுக்களால் அறிகிறோம். அம்மன்னர் நாடுகள் மிகச் சிறியவையாதலாலும், அங்கு வாழ்ந்த மக்கள் தொகை சுருங்கியதே ஆதலாலும், அவர் நடத்திய போர்களில் இறந்த படைஞர் பல்லாயிரராக இருக்க இயலாது. கரிகாலன் வடநாட்டுப் போர் நிகழ்த்திய போதும் செங்குட்டுவன் இமயப் படையெடுப்பு நிகழ்ந்த போதும் தமிழகத்திலிருந்து பெரும்படை புறப்பட்டிருக்கலாம். எத்தனை பெரும்படை ஆயினும் எதிர்நிற்பாரை நேரிற் பார்த்து அவரவர் ஆண்மை வன்மைகளை விளக்கிப் போர்புரிந்து வெற்றி பெறும் வழக்கமே அந்நாளில் இருந்தது. இங்ஙனம் போர் புரியும் போதும் பகைவன் படையிழந்து வலியிழந்து சலித்தது கண்டால், அவனைக் கொல்லாது விடவேண்டும் என்றே பெருமக்கள் கருதினர்.

ஊராண்மை என்பதோர் பொருள் பொதிந்தசொல் வள்ளுவர் திருவாக்கில் வருகின்றது. "போர்க்களத்தில் பகைவனை எதிர்க்கும் மறவன் ஒருவன் எதிர்ப்புறமிருந்து தன் முகநோக்கி வேல் ஒன்று பாய்ந்து வரும்போது விழித்தகண் அழித்து இமைத்தாலும் புறங்கொடுத்ததாகவே மதிக்கப்படும்" என்று கூறும் வள்ளுவப்பெருந்தகை, பேராண்மை என்பது சிறிதும் அச்சம் இன்றிப் படையை எதிர்த்து நின்று போர் புரிவதே என்றார் ஆயினும், அப்பேராண்மைக்கு எஃகு என்று ஊராண்மையை உரைக்கின்றார். ஊராண்மை ஆவது பகைவன் சலித்துப் படையிழந்து நிற்கும் பொழுது அவன் உயிரைக் கொள்ளை கொள்ளாது உயிரோடு அவன் போமாறு விடுவதே ஆகும். இவ்வரும்பண்பு பேராண்மை என்ற வாளில் முன்புறம் வைத்த எஃகு போன்ற சிறப்புடையது என்று புலவரே கருதுகின்றார்.

தமிழகத்து மறவர் இயற்றிய பண்டைப் போர்களில் பேராண்மையையும் ஊராண்மையையும் விளக்கத்தக்க வாய்ப்புக்கள் பல இருந்தன. ஒரு சிறு தொகையினர்

எதிர்க்கும் போர் வகை ஆதலாலும், ஒருவரை ஒருவர் நேரே பார்த்து அவரவர் திறமை அறிந்து உரியபடைகளால் எதிர்த்துப் போர்புரிய இயலும் ஆதலாலும், அங்ஙனம் போர் புரியும்போதும் தலை குலைந்தவர் மேலும் புறங்கொடுத்தவர் மேலும் அஞ்சியவர் மேலும் அம்பு எய்தல் தகாது என்ற கட்டளை இருந்ததாலும், நம் முன்னோர் இயற்றிய போர் அறப்போர் வகையிற் சேர்ந்ததே என்று கூறலாம்.

தமிழ மறவர் இயற்றிய போரை அறப்போர் என்று கூறுதற்கு மற்றொரு காரணமும் உண்டு. பகை நாட்டின் மேற் படையெடுக்க வரும் அரசன் தனது படை அங்கு அணுகு முன்பே ஒரு விளம்பரம் விடுக்கும் வழக்கம் உண்டு. பாண்டியன் முதுகுடுமியைப் புகழ்ந்து பாடும் புலவர் ஒரு செய்தி கூறுகிறார். 'ஆவினமும் அவை போன்ற நன்மக்களும் பெண்மக்களும் பிணியாளரும் தென்புலத்தார்க்குக் கடன் இறுக்கத்தக்க புதல்வரை பெறாதவரும் போர்க்களம் புகத்தகுதியற்றவராவர். நாங்கள் எங்கள் பெரும் படையோடு உங்கள் நாட்டைத் தாக்க வருகிறோம். எங்கள் அம்புகள் விரைவில் உங்கள் நாட்டில் வந்து விழும். அவை பாயும் முன்னே போர்க்குத் தகுதியில்லாத இத்தகைய மக்கள் காவல் உள்ள இடங்களிலே சென்று மறைந்து வாழ்வாராக. போர்தொடங்கிய பிறகு இவர்க்கு உரிய காப்பு அளிப்பது எளிதன்று. இப்பொழுதே போய் இவர் எல்லாம் ஒளிந்து உயிர் பிழைப்பாராக' என்று வரும் செய்தி தமிழகத்து அறப்போரின் தலைமணி ஆகும் என்று கூறத்தக்கது. இந் நெறியை நன்கு உணர்ந்து மகிழ்ந்த கம்ப நாடர் இராவணன் முன்பு அங்கதன் சென்று தூதுரைக்கும் போது:

"ஏமம் சார்க எளியவிர் யாவிரும்
தூமம் கால்வன வீரன் சுடுசரம்
வேமின் போல்வன வீழ்வதன் முன்னமே
போமின் போமின் புறத்தென்று போயினன்."

என்று முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போற் போற்றி ஆண்டதால் தமிழர் போர் முறையில் தமக் குள்ள நன்மதிப்பை வெளியிடுகின்றார்.

தமிழ மறவர் போர் முறை அறநெறியமைப்பு உடையதாய் நிகழ்ந்ததே ஆயினும் போர் நிகழ்வது நல்லதே என்று கருதிய நன்மக்கள் அன்றும் இருந்த தில்லை என்று துணிந்து கூறலாம். சேர சோழ பாண்டியர் என்ற முடிமன்னர் மூவரும் அவர்க்குப் படைத்துணையாக வந்து சேர்ந்த சிற்றரசுகளும் அவர்கள் திரட்டிய படை ஞரும் போர் புரிவதே பொழுது போக்காகக் கொண்டி ருந்தாரோ என்று நினைக்கத்தக்க செய்யுட்கள் பல புறத் தில் உண்டு. அரசர்களை ஒருவரோடொருவர் போர்புரியத் தூண்டுவதே புலவர் தொழிலாய் இருந்ததோ என்று கருதவும் இடம் உண்டு. ஆயினும் சில பெரும் புலவர்கள் சேர சோழ பாண்டியர் போர்புரியாது ஒற்றுமையோடு வாழ்வதே நாட்டுக்கு நலம் பயப்பதாம் என்று மனமார வாழ்த்திப் பாடியிருக்கின்றனர். போர் முறையை நெறிப் படுத்தற் கென்றே புறப்பொருள் மரபு வகுத்த தமிழகத் தில் போரைக் காட்டிலும் அமைதியை விழைந்த மக்களே பலர் என்று நாம் நினைப்பது தவறாகாது.

இன்றைய உலகத்தில் உலகமக்கள் நினைத்தாலும் நெஞ்சு நடுங்கும் போர்களே நிகழ்கின்றன. அறப்போர் நெறி என்பது இருந்த இடமே தெரியாவண்ணம் அழிந்து விட்டது. ஒரு நாடு மற்றொரு நாட்டை அடியோடு அழித் துச் சுடுகாடாக்க நினைக்குமாயின் இரண்டு குண்டுகளை வானத்தில் இருந்து வீசுவதே போதுமானது. வான வீதியே இன்று போர்ப்படை நடக்கும் களமாகிவிட்டது. நிலப்படை கடற்படை என்ற படைப் பகுதிகள் இன்னும் சில நாளில் பழைய கதையாக மறைந்து ஒழிந்து விடுமோ என்று தோன்றுகிறது. வானத்தே திரிந்து நாடுகளை நொடியளவில் அழிக்கவல்ல படையின் கையிலே இன்று

புதிய புதிய குண்டுகள் புகுகின்றன. இக் குண்டுகள் விளைக்கும் இன்னலின் அளவை ஒவ்வொரு நாடும் நன்கு உணரும். உணர்ந்தும் புதிய புதிய கூற்றுவன் தொழிலாளரைப் படைத்துக் குவித்துக் கொண்டே இருக்கின்றன. இக் குவியல் எந்நாட்டில் மிகுதியோ அந்நாட்டு மக்களே இரவும் பகலும், நனவிலும் கனவிலும் அச்சமும் நடுக்கமும் கொண்டு வாழ்கின்றார்கள். அணுசக்தி என்பது உலக மக்கள் நலம்பெறப் பல துறைகளாலும் உதவக் கூடும் என்ற உண்மையை உணர்ந்திருக்கும் விஞ்ஞானிகள் அதுவே குண்டுருவம் பெற்று உலகத்தையே ஒரு நொடியில் அழிக்கப் புறப்பட்டிருக்கும் காலக் கொடுமையைக் கண்டு நடுங்குகிறார்கள். விஞ்ஞானம் மனித வாழ்வுக்கு நலம் விளைக்கும் சிறந்த கருவியாக இருக்கும் உயர் நிலையை இழந்து உலகத்தையே அழிக்கும் இழிநிலைக்கு உரிய பெருங் கருவியாக ஆகிவிட்டது.

செருமனிய நாட்டிற் சிறந்த விஞ்ஞானியாக விளங்கி, ஹிட்லர் ஆட்சியிலே நாடு நீங்கி மறைய நேர்ந்த உத்தம ஞானியான ஐன்ஸ்டீன் என்பவர் அணுசக்தியின் தத்துவத்தையே உணர்ந்து உணர்த்திய பேரறிஞரே ஆயினும், அணுகுண்டு மலையை உலகம் பல திசைகளிலும் வளர்ப்பது கண்டு பெரிதும் மனம் வருந்தியே உலகத்தை நீங்கினார். இன்று வாழும் மக்கள் இனம் தன் மரபு இன்னும் நெடுங் காலம் இவ்வுலகில் வாழவேண்டும் என்று நினைக்குமாயின் அணுகுண்டு மலைகளைக் கடலுக்குள் இட்டு மறைத்தழிக்க ஒருப்பட வேண்டும். இக்கொள்கையையே இன்று நம் நாட்டுப் பெருமக்கள் அனைவரும் உலகம் அறிய முழங்கி வருகின்றனர்.

உலகில் இன்று இரண்டு பெருங்கட்சிகள் இருக்கின்றன. ஒரு கட்சியின் தலைமை தாங்குவது அமெரிக்க ஐக்கிய நாடுகளாம். ஐக்கிய நாட்டுத் தலைவர் இக் கட்சியின் தலைவர் என்று நினைக்கத் தக்கவர். நேற்றுவரை உலகப்

பேரரசாக விளங்கிய பிரிட்டிஷ் அரசு இக்கட்சியை ஒட்டி வாழ்கின்றது. இக்கட்சி செல்வத்தை வளர்க்கும் வணிகர் குழுவைத் தன் மூலபலமாகக் கொண்டது. முதலாளி களே இதன் உயிர், உடம்பு எல்லாம் என்று கூறிவிடலாம். மற்றொரு கட்சி பொதுவுடைமைக் கொள்கையை அடிப் படையாகக் கொண்டது. இக்கொள்கையை இன்று கொடி யேற்றி உயர்த்தி வாழும் நாடுகளின் தலைமை தாங்குவது ருஷிய நாடே எனல் வேண்டும். ருஷிய நாட்டின் நிழலில் வாழும் நாடுகள் எல்லாம் இப்புதுக் கொள்கையைத் தழுவு கின்றன. அமெரிக்கக் கொள்கைக்கும் ருஷியக் கொள்கைக் கும் உள்ள வேறுபாடுகள் பலவாம்.

உலகத்து நாடுகள் எல்லாம் தம் தம் கட்சியிலே சேர் வதே உலக வாழ்வுக்கு உகந்ததாகும் என்று இவ்விரு பெருநாடுகளும் கருதுகின்றன. நம் நாடோ இவ்விரு திறத்தோடும் சேராமல் நடுநிலையில் நிற்பதே தக்கது என்று கருதுகின்றது. இதனால் இரு பெருங் கட்சிகளின் பகை நம் நாட்டுக்கு விளைய இடம் உண்டு என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். ஆயினும் நம் நாட்டுத் தலைவர்கள் ஒரு திறத்தும் சாராமல் நடுவில் நிற்பதால் விளையும் நலத்தை இன்று உணர்ந்து வருகின்றனர். உலகமும் நம் கொள்கையின் தனிப் பெருமையை உணர்ந்து நம் நாட்டை நன்கு மதிக்கத் தொடங்கியுள்ளது.

இரு பெரு வலிய நாடுகள் ஒன்றை யொன்று அழிக் கவே வழியும் வாய்ப்பும் தேடிக்கொண்டிருக்கும் காலத்தில் "கொள்கைகள் இரண்டா யிருந்தாலென்ன; இருபதாய் இருந்தாலென்ன? உலக நாடுகள் தம் தம் கொள்கையில் தாம் தாம் உறுதியாக நின்றாலும், பிற நாடுகளின் கொள் கைகள் தம் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தா லும், ஒருவர்க்கொருவர் தீங்கு நினைக்காமல் உலகத்திலே வாழலாம்" என்ற உண்மைக் கருத்தை இன்று நம் நாடு உலகத்துக்கு விளக்குவதாய் உள்ளது.

உண்மையில் இன்று சீன அரசு எத்திறத்தார் கைய கம் உள்ளதோ அவர்க்கு உலக அரங்கில் இடம் இல்லை என்று அமெரிக்கா சொல்லுகிறது. இதற்குக் காரணம் கொள்கை வேறுபாடும் பொதுவுடைமைக் கட்சி உலக அரங்கில் வலிபெற்று விடுமோ என்ற அச்சமுமே ஆகும். ருஷிய நாடு அங்கு இடம் பெற்றிருக்கும்போது சீன நாடு புகுவதால் உலகம் புரண்டுவிடாது. ஒரு சிறு தீவைப் பற்றிக்கொண்டு அமெரிக்க உதவியால் உயிர் வைத்திருக் கும் சாங்கே சேக்கின் தலைமையை இன்னும் அமெரிக்க ஐக்கிய நாடு ஆதரிப்பது புதுமையாகவே நமக்குத் தோன் றும். இன்று உலக அமைதி நிலைக்க வேண்டும் என்பதே கருத்தாக உழைக்கும் நாடு நம் நாடே. நமக்கு ஒரு வகை யாரும் வேண்டாதவர் இல்லை. அவர் கொள்கையை நாம் தழுவாவிடினும் இரு வகையாரும் அணுப் படையைப் பயன்படுத்தி உலகத்தை அழிக்க முற்படா திருக்கவே நாம் வழி கூறுகிறோம். ஆதலால் உலகம் போர் என்ற பிணி நீங்கி அமைதி என்ற நல்வாழ்வு பெறவே கருது மாயின் நம் கருத்தைத் தக்கது என்று ஏற்பதே பொருத்தமாம்.

# 11. ஏடுகளும் எழுதுவோரும்

நம் நாட்டில் பண்டையோர் தேடிவைத்த அறிவுச் செல்வம் எல்லாம் ஏட்டிலேயே அடங்கியிருந்தது. வட நாட்டிற் பனைமரம் மிகுதியாய் இன்மையால் அந் நாட்டார் பனையோலை யொழிந்த வேறு சில நீண்டகன்ற இலைகளிலும் தம் நூற் செல்வங்களைப் போற்றி வைத்தனர். இன்னும் அத்தகைய வடநாட்டுப் பண்டையேடுகளைக் காசுமீரம், நேபாளம், காசி, நவத்வீபம், பிரயாகை முதலிய நாடு நகரங்களிற் காணலாம். சென்னையில் உள்ள அடையாற்றுப் புத்தகசாலையில் இத்தகைய வடநாட்டு ஏடுகள் சில போற்றப்படுகின்றன. புனா என்னப்படும் புண்ணிய நகரில் உள்ள பண்டாரகர ஆராய்ச்சிச் சாலையிலும் இத்தகைய பழைய ஏடுகள் பல உண்டு.

தமிழகத்திலே ஏடுகள் எல்லாம் பனையோலையிலேயே எழுதப்பட்டன. பனையோலையில் உச்சியில் வரும் குருத்தே எழுத உதவுவதாம். இக்குருத்தோலை சில மரங்களில் ஒடுங்கிக் குறுகியிருக்கும். சில மரங்களில் அகன்று நீண்டிருக்கும். அகன்று நீண்டமைந்த குருத்தோலையே எழுதத் தக்க தகுதி பெறுவதாம். சிறு நூல்களை எழுதும் புலவர்கள் சிறிய ஓலைகளையும் மதித்துப் பயன் படுத்துவதுண்டு. குருத் தோலையைச் சிறிது காய்வித்துத் தக்க உருவம் பெறும்படி வாருதல் வேண்டும். வாரி உரிய அளவில் தறித்து ஒரு துளையோ இரண்டோ இட்ட பிறகே அவை ஏடுகளிற் சேரத்தக்கவை ஆகும்.

ஏட்டுருவம் பெறும் குருத்தோலைக்கு உள்ள மதிப்பு அறிவுள்ள மக்களிடையே மிகவும் அதிகம் என்பது கூறாமலே விளங்கும். ஏடு அமைப்பதே ஒரு கலையாகக் கருதப் பட்ட பண்டை நாளில், குருத்தோலையைப் பல உருவத்திலே வாரித் தறித்து ஏடுகளை அமைத்தனர். நூற்றுக் கணக்கான ஏடுகளை அடக்கும் நூற் செல்வங்களைப் பொது

வில் ஒரே அளவுள்ள குருத்தோலைகளாற் செய்து, இரு துளை இட்டு, இருபுறமும் பலகை சேர்த்துக் கயிறு கொடுத்துக் கயிற்றின் ஒரு புறம் ஒரு சிறு குச்சியை இணைத்து, அக் குச்சி ஒரு துளை வழியே சென்று ஏட்டை ஒழுங்காக நிறுத்த, மற்றொரு துளை வழியே கயிற்றை இழுத்துப் பல முறை சுற்றி ஏட்டைக் கட்டி வைப்பது முறையாம். இங்ஙனம் அமைந்த ஏடுகளே நம் பண்டைத் தண்டமிழ்ச் செல்வங்களை இன்றளவும் நமக்குக் காத்து உதவின என்ற உண்மையைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

ஏடுகள் அமைக்கும் கலையிலே கைதேர்ந்த சிலர் மீன் போலவும் ஆமை போலவும் அன்னம் போலவும் பிற அழகிய உருவமாகவும் ஏடுகள் தோன்றும்படி குருத்தோலையைத் தறித்துத் துளையிட்டு, இருபுறமும் பலகையிட்டு அமைப்பதும் உண்டு. பகவத்கீதை என்ற வட நூலைச் சிறு பந்து போல அமைந்த ஒரு ஏட்டுள் எழுதி வைத்திருக்கும் அழகை இன்றும் காணலாம்.

அகன்று நீண்டமைந்த ஏடுகளில் எழுதுவோர் திறமைக்கு ஏற்ப இருபது, முப்பது வரிகள் வரை எழுதப்படுவதுண்டு. ஓளி நூலோர் போற்றி வைத்திருக்கும் பழமையான ஏடுகளிற் சிற்சில நாற்பதுக்கு மேற்பட்ட வரிகள் உள்ளன என்று கூறுவதுண்டு. முன்னாளில் நம் கல்வி கலைகள் சிலவகைகளிலே விரிந்திருந்தன. வட மொழியால் விரிந்த அளவுக்குத் தென் மொழியிலே கல்வி கலைகள் வளர்ச்சி பெறவில்லை. அதனால் வட மொழியேடுகள் தென் கோடி முதல் வட கோடி வரை பன்னூறாயிரமாகப் பெருகியிருக்க நம் தண்டமிழ் ஏடுகள் ஆயிரக்கணக்கிலே தமிழகத்தில் மட்டும் சிற்சில ஊர்களிலே நிலைபெற்றுள்ளன.

வட நூலேடுகளும் தமிழ் நூலேடுகளும் இந்நாட்டுக்கு வந்த அயல் மக்களாற் கவரப்பட்டுச் சிறு

பொருட் செலவிலே அந் நாட்டார்க்கு உரிமையாகி லண்டன், பாரிசு, பெர்லின் முதலிய நகர்களில் உள்ள பண்டை நூற் கருவூலங்களில் நன்கு போற்றப்படுகின்றன. திபெத் நாட்டிலும் நம் நாட்டு ஏடுகள் சில இன்று அகப் படுவதுண்டு. இங்ஙனம் நம் கைவிட்டே பிரிந்து போன ஏட்டுச் செல்வம் எத்தனை ஆயிரம் என்பதை இன்று நாம் அளந்தறிதல் எளிதில்லை. லண்டன் மாநகரில் நம் பண்டை அறிவுச் செல்வம் பலவுருவங்களிற் புதைந்து கிடப்பதை உணர்ந்த நம் பெருநாட்டுக் கல்வியமைச்சர் இன்று அவற் றை நமக்கு உரிமையாக்க முயன்று கொண்டிருக்கிறார்.

நாம் இழந்த செல்வம் ஒரு புறமிருக்க, நம் நாட்டி லேயே இன்றளவும் இருந்து வந்த ஏட்டுச் செல்வத்தை நன்கு போற்றும் முறைகளை நாம் கடைப்பிடித்தோமில்லை. ஏடுகளைத் தம் பண்டைச் செல்வமாகப் போற்றிய குடும் பத்தினர் மரபு முறையே கல்விச் செல்வமும் படைத்திருக் கின்றார் என்று உறுதி கூற இயலாமையால், முன்னோர் வைத்த செல்வங்களின் மதிப்பறியாத பின்னோர் அவற்றை மனம்போல விற்றதும், எடுத்து வீசியதும், ஆடி பதினெட் டில் நிகழும் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றோடு கடலுக்கு ஓட விட்டதும் உண்டு.

இங்ஙனம் நம் கலைச் செல்வம் அழிப்புண்டதே யன்றி, இராமபாணம் என்ற பூச்சியாலும் கறையானாலும் அழிந் தது கணக்கு வழக்கில்லை. இராமபாணப் பூச்சி முதலேட் டிற் புகுந்தால் முந்நூறும் ஏடு வரையில் ஒரே துளையாகச் செய்துவிடும். நான்கைந்து பூச்சிகள் இவ்வண்ணம் ஒரு ஏட்டிற் புகுந்தால் அதன் கண் பலவிடங்களிலே துளைகள் உண்டாயிருப்பதைக் காணலாம். இந்த இராமபாணத் துளைகளால் நேர்ந்த சேதத்தை இன்று அச்சாகியிருக்கும் சங்கச் செய்யுட்களில் இடையிடையே எழுத்தின்றி அமைந்துள்ள புள்ளிகளால் அறியலாம். கறையான் செய் திருக்கும் கொடுமையோ எண்ணித் தொலையாது; ஏட்டில்

அடங்காது. இன்று நாம் நம் பண்டைச் செய்யுட்களில் இடையிடையே சில பல அடிகளும் முழுப்பாட்டுக்களுமே மறைந்திருக்கும் காட்சியைக் காண்கின்றோமே; இக் காட்சிகள் எல்லாம் கறையான் திருப்பணியே ஆகும்.

முன்னாட்களில் ஏடுகளைப் போற்றிய முறை வேறு. இந்நாளிலே விஞ்ஞானத்தின் உதவியால் ஏடுகளைப் போற்ற நமக்கு வாய்த்துள்ள முறை வேறாகும். முன்பு மரச் சட்டங்களால் இயன்ற ஏணிகள் போன்ற சட்டகங்களில் ஏடுகளை அடுக்கிவைத்தோம். ஆண்டில் ஒரு முறையேனும் இருமுறையேனும் அவற்றை எடுத்துப் பார்த்து எண்ணெய் இட்டுப் படிக்கத்தக்க உதவியாகக் கரிபூசியும் காத்து வந்தோம். இந்நாளில் ஏடுகளை இரும்பால் இயன்ற உயர்வுள்ள சட்டகங்களில் முறைப்படி அடுக்கிவைக்கிறார்கள். ஏடுகளுள் நுழைந்து அவற்றை உண்ணும் பூச்சிகளை அழிக்கும் வண்ணம் புகையுருவமாகவும் வேறு வழியாகவும் செலுத்தத்தக்க மருந்துகள் சில வந்துள்ளன. இம் மருந்துகளைக் காலமறிந்து பயன்படுத்திப் பல்லாண்டு சென்ற பழைய ஏடுகளையும் நன்கு போற்றும் நெறி இன்று நமக்கு எளிதாக அமைந்துள்ளது.

இங்ஙனம் பண்டைய செல்வங்களைப் போற்றிவைப்பதே யன்றி அவற்றை இந்நாளையோர் அறிந்து பயன் பெறுமாறு வெளியிடவும் வேண்டும். அச்சுத்தொழில் மலிந்திருக்கும் இந் நாளில் இச் செல்வங்களை உலகம் உணர வெளியிடுவதே தக்கது என்று சான்றோர் பலர் கருதினர். வடமொழியிலே வேதம் முதல் காவியம் நாடகம் வரை உள்ள எத்துணையோ நூல்களும் செய்யுட்களும் உரைகளும் இன்று அச்சில் வந்துவிட்டன. எத்தனையோ பழஞ் செல்வங்கள் வெளியாகியிருந்தும் இன்னும் பண்டைய நூற்கருவூலங்களில் மறைந்திருப்பவை பலவாம். இவ் வண்ணமே தமிழ்மொழியிலும் அரும்பெரு நூல்கள் பலவற்றை ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை, உ. வே.

சாமிநாதையர், ச. பவானந்தம் பிள்ளை முதலிய சான்றோர்கள் அரும்பாடுபட்டு ஆராய்ந்து அச்சிட்டு வெளியிட்டுத் தமிழ் மக்கள் நன்றிக்கு உரிமை பூண்டிருக்கின்றார்கள். இன்னும் நம் தாய்மொழியிலே அரசாங்கக் கையெழுத்துப் புத்தகச் சாலையில் எத்தனையோ அரும்பெரு நூல்கள் வெளியேறாது அடங்கியிருப்பதை அறிந்து நம் சென்னைத் துரைத்தனத்தார் அவற்றை ஒவ்வொன்றாக ஆராய்ந்து வெளியிடும் பொறுப்பை ஒரு அறிஞர் குழுவிடம் ஒப்பித்து ஆண்டுதோறும் பல்லாயிரம் ரூபாய்களை இத்துறையிலே செலவழிக்கவும் முற்பட்டுள்ளனர். இதனால் இன்னும் பல நூல்களை உலகம் விரைவிலே பெறக்கூடும். இக்குழுவினர் வடமொழி தென்மொழி வேற்றுமை கருதாது பலதுறையிலும் நூல்களை வெளியிடுகின்றனர்.

ஏடுகளைப் போற்றும் முறைபற்றி நாமும் இக்கால விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தல் நன்றாம். எல்லா ஏடுகளுமே உலகம் பயில வெளியிடத் தக்கவையா என்பதும் ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டிய உண்மையாம். இந்நாளளவும் நாம் இழந்த ஏடுகளிற் பல நாம் நினைத்து வருந்தத்தக்க சிறப்புள்ளவையே ஆயினும் இன்றளவும் நமக்கு வந்துள்ள ஏடுகள் எல்லாம் நாம் பயிலத்தக்க சிறப்புள்ளவையே என்று கூறல் இயலாது.

ஏடுகளை எழுதுவோர் திருப்பணி எளியதன்று. பன்னூறாண்டுகள் கண்ட ஏடுகள் சில சிறிதும் பிழையற்ற தூய பாடம் உள்ளவையாய் இருக்கக் காண்கிறோம். தொல்காப்பிய ஏடுகளும் திருக்குறள் ஏடுகளும் பாடபேதம் மிகுதியில்லாமல் நல்ல பாடங்களைப் போற்றி வைத்திருக்கும் சிறப்பு, தமிழ் மக்கள் பெருமையை விளக்குவது என்றே கூறலாம். ஆனால் கம்ப ராமாயண ஏடுகள் பட்டிருக்கும் பாடு இவ்வளவு அவ்வளவு இல்லை. கம்ப ராமாயணத்தில் இன்று நம் நாட்டில் நூற்றுக் கணக்கான ஏடுகள் உண்டு. அவைகளில் உள்ள பாட பேதங்களும்

எண்ணிறந்த பலவகையாம். இன்று கம்பர் கடவுள் செயலால் வரக்கூடுமாயின், அவருக்கே கம்ப ராமாயணச் செய்யுளின் உண்மை யுருவத்தைப் பற்றி ஐயங்கள் பல எழ இடமுண்டு. இங்ஙனம் நம் நாட்டுப் பெருங்காவியம் ஒன்று ஏடு எழுதும் புண்ணியர்களாற் சிதைந்து போயிருக்கும் சிறுமையை ஏடுகளைப் பார்த்தாலன்றி அறிய இயலாது. இவ்வேடுகளில் ஒன்று கம்பர் வாக்கின் முதற் சொல்லைக் கொண்டு மற்றச் சொற்களை யெல்லாம் மாற்றிச் சிதைத்திருக்கும் சிறுமையும் உண்டு.

ஏடெழுதுவோர் எல்லாரும் பெரும்புலவராய் இருந்தால் ஏடுகள் பிழையற்ற பாடங்களோடு இன்றளவும் வந்திருக்கும். சிறிதளவே தமிழ் கற்ற அளவில் ஒரு குழு ஏடெழுதப் புறப்பட்டது. அக்குழு நம் தமிழ் நூல்களைச் சிதைத்திருக்கும் எல்லை அளப்பரியது. எழுத்துக்களும் சொற்களும் இப்புண்ணியர் கையில் மனம் போல மாறுதலால் சில பாடங்களின் உண்மை யுருவம் காண்பதே அரிதாகிவிட்டது. இவர்களுக்குப் பொருள் விளங்காத அருஞ் செய்யுட்களை எழுதும் போது தொடக்கமும் இடைநிலையும் முடிவும் எளிதில் விளங்கா வண்ணம் இவர்கள் எழுதி யிருக்கும் அழகை இன்றும் ஏடுகளிற் பார்க்கலாம்.

மகா வித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஏடுகளை எழுதிப் போற்றுவதிற் சிறந்த பயிற்சியுள்ளவர்கள் என்பதை இச்சான்றோர் வரலாற்றால் அறிகின்றோம். இந்நாளைப் புலவர் வணங்கத்தக்க பெருமை பூண்ட இப்புலவர் பெருமான் கைப்பட எழுதப்பெற்ற ஏடுகள் சில கிடைத்ததாலேயே மகா மகோபாத்திய உ. வே. சாமிநாதையரவர்கள் வெளியிட்ட சிறந்த நூல்கள் செப்பமான உருவம் பெற்றன. அண்மைக் காலத்தில் வாழ்ந்த இப்புலவர் திலகர் எத்தனையோ நூல்களை அரும்பாடு பட்டுத் தேடி எழுதியே பயின்றதால் நல்ல நூல்கள் சிறந்த பாடம் கண்டன.

இந்நாளில், எழுத்தாணி என்ற எழுதுகருவி என்ன உருவம் உள்ளது? ஏட்டில் எழுத்தாணியால் எழுதுவது எப்படி? எழுதப்பட்ட பண்டைய ஏடுகளை எடுத்துப் படிக்கும் முறை யாது? என்ற உண்மைகளை அறிந்திருப்பவர்கள் கற்ற மக்களிலும் ஆயிரத்தில் ஒருவர் இருவரே இருப்பர். இச்சிறு குழு மறையும் முன்னர் நம் பண்டை யேடுகள் எல்லாம் உலகம் பெற்றுணர்ந்தின்புற வெளிவருமாயின் நம் பெரும் பேறு என்றே துணியலாம். உலகத்தில் எத்தனையோ நாடுகள் பண்டைய நூல்களைப் போற்றி வருகின்றன. பண்டைப் பெருமைகளில் மற்றெந் நாட்டுக்கும் பிற்படாத நம் நாடும் ஏடுகளைப் போற்றியும் ஆராய்ந்தும் வெளியிட்டும் உலகம் அறியாது மறைந்த உண்மைகளை எடுத்து உதவிய புகழைப் பூண வேண்டும். சில வடமொழி யேடுகள் ஆகாய விமான விஞ்ஞானத்தையும் விளக்குவதாக உரைக்கின்றனர். அவையும் வெளிவரும் காலம் வருவதாக.

---

# 12. சொல்லும் பொருளும்

ஓரெழுத்தாலோ இரண்டு முதலிய பல எழுத்துக்களாலோ அமைந்து ஒரு பொருளை அறிவிப்பது சொல்லாம் என்று இலக்கணங்களால் அறிவோம். சொல் மொழி என்பன ஒரு பொருள் தருவன. மொழியப்படுவது மொழி எனவும் சொல்லப்படுவது சொல் எனவும் உணர்கிறோம். எழுத்து என்ற சொல் எழுதப்படும் வரிவடிவத்துக்கே இயல்பாக அமைந்த பெயராம். ஆயினும் அது ஒலிவடிவத்திலே வழங்கும் எழுத்தையும் குறிப்பதாகிறது. 'கண்ணன் எழுதிய எழுத்து நம்மால் எளிதிற் படிக்க இயலாதது' என்ற வாக்கியத்தில் எழுத்து என்ற சொல் வரிவடிவத்தையே குறிக்கிறது. 'உன் பேச்சில் ஒரு எழுத்தேனும் நன்கு விளங்கவில்லையே!' என்ற வாக்கியத்தில் எழுத்து என்னும் சொல் ஒலிவடிவத்தையே குறிக்கிறது.

இங்ஙனமே மொழி சொல் என்ற இருசொல்லும் உண்மையில் ஒலி வடிவத்தில் உள்ள சொல்லைக் குறிக்க எழுந்தவையே ஆயினும் புலவர் வழக்கில் அவை எழுத்து உருவமொழியையும் குறிக்கத்தக்கவை ஆகின்றன; சொற்களை ஒருவர் வாயாற் கேட்கும் போது அவர் மனவுணர்ச்சி அச் சொற்களிற் கலந்திருப்பதைக் காண்போம். அவ்வண்ணமே புலவர் வாக்குக்களை ஏடுகளிற் படிக்கும் போது அப் புலவரையே கண்டு அவரோடு அளவளாவி அவர் கருத்தை அறியமுயல்வது போன்ற உணர்ச்சியைப் பெறுகிறோம். புலவர் மொழி, எழுத்துருவத்தில் நம் கண்முன் தோன்றினும் சிறந்த அறிஞர் ஒருவர் நேர்நின்று பேசும் வாய்மொழி போன்றே நம் உள்ளத்தைக் கவரும் திறம் உள்ளது.

ராபர்ட் சதே என்ற ஆங்கிலப் புலவர் 'அறிஞன்' என்ற பொருள் பற்றி ஒரு சில செய்யுட்கள் இயற்றியிருக்கின்றார். அவற்றின் கருத்து இங்கு நினைக்கத்தக்கதுவாம்.

"என் நாளெல்லாம் பண்டு வாழ்ந்த பெருமக்களோடு கழிகின்றன. என் விழிகளை நாற்புறமும் திருப்பும் போது என்னைச் சுற்றிப் பண்டு வாழ்ந்த பெரும் புலவர் மனங்களையே காண்கின்றேன். அப் பெருமக்களே என்றும் என்னையகலா நண்பர்கள். நான் அவர்களோடு நாளெல்லாம் பேசுகிறேன்.

இன்பக் காலையில் நான் அப்பெருமக்களோடு கலந்து இன்புறுகின்றேன். துன்பக் காலையில் என் துயரை அவர்களிடம் தெரிவித்து என் மனத்தின் பொறையைக் குறைக்க முயல்கிறேன். நான் அப் பெருமக்களுக்கு எத்துணைக் கடம்பூண்டுளேன் என்பதை நினையும் போது நன்றிகலந்த நினைப்பால் என் முகம் எல்லாம் உணர்ச்சிக் கண்ணீரால் நனைந்ததுண்டு. என் நினைப்பெல்லாம் பண்டு வாழ்ந்த அப் பெருமக்களோடே கலந்துள்ளது. நானும் அவர்களுடன் நெடுங்கால முன் கழிந்து போன காலத்தில் வாழ்கிறேன். நான் அவர்கள் நற்பண்புகளைப் பாராட்டுகின்றேன். அவர்களிடம் குறைகாண்பேனுயிற் கண்டனம் செய்யவும் துணிகின்றேன். அப் பெருமக்கள் உள்ளங்கள் நம்பும் பொருள்களிலும் அஞ்சும் பொருள்களிலும் என் மனமும் ஒன்றுகின்றது. அவர்கள் போதனைகளால் என் வாழ்வுக் குரிய சிறந்த வழியைப் பணிவுள்ளத்தோடு அறிய முயல்கின்றேன். என் நாட்டம் எல்லாம் இறந்த சான்றோர் இடையே உள்ளது. விரைவில் நானும் அவர்கள் இனத்திற் சேர்வேன். அவர்களோடு எதிர்காலம் எல்லாம் இயங்கவும் பெறுவேன். எனினும் மண்ணோடு மண்ணாகி மடியாத ஒரு பெயரை இங்கு நிறுத்திச் செல்லவே நினைத்துளேன்."

இப் புலவர் பெருமான் தமது நூல் நிலையத்தில் அமர்ந்து தம்மைச் சுற்றியுள்ள நூல்களை நோக்கிக் கொண்டே இக்கருத்துக்களை வெளியிடுகின்றார். இந் நூல்களில் உள்ள உரையும் செய்யுளும் மொழியும் எழுத்திருவத்தில் உள்ளனவே என்பது வெளிப்படை. அவற்றை

நோக்கும்போது அவ்வரும் பொருள்களை என்றே உலகுக்கு உதவிய பெரும் புலவர்களின் இணக்கமே தமக்கு அமைவதாகக் கருதுகின்றார். இறந்த காலப் பெருமக்களோடு நிகழ்கால மக்கள் உறவாடுதற்கும் எதிர்காலத்தில் தம் பெயர் பொறித்தற்கும் உற்ற துணையாய் இருப்பது சொல்லே என்பதை நாம் நன்கு உணரவேண்டும். இச் சொல் எழுத்துருவத்தில் காட்சி தருவதே என்பதை நாம் மறத்தல் ஆகாது.

'மேன் மக்கள் சொற்கேள்' 'மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்' என்ற முதுமொழிகளில் வரும் சொல் வார்த்தை என்ற மொழிகள் அப் பெருமக்கள் என்றே சொல்லி வைத்து எழுத்துருப் பெற்ற சொற்களையே யன்றி இன்று நம் கண் முன்னே உள்ள சான்றோர் கூறும் நன் மொழிகளையும் குறிக்க வல்லவையாம். எழுத்துருப் பெற்ற திருவள்ளுவர் வாக்குப் போன்ற நன் மொழிகள் நம் வாழ்வுக்கு உறுதி பயப்பது போலவே, இன்றுள்ள நன் மக்கள் மொழிகளும் நலம் விளைப்பனவே என உணர்வோம்.

சொற்கள் பொருளை விளக்க உள்ள கருவிகள் எனவே மதிக்கப்படும். ஒருவர் உள்ளத்தே கருதிய கருத்தைப் பிறர் அறிய உதவும் கருவியே மொழியாம். சொற்கள் வாயி லிருந்து வெளிப் பட்டவுடன் அவை தெரிவிக்கும் கருத் தின்மேல் நம் மனம் செல்கின்றதே யன்றி, அவ்வொலி களைப் பற்றி நாம் ஒன்றும் நினைப்பதில்லை. ஆழ்ந் தகன்ற கருத்தமைதி பொருந்திய பெரு மக்கள் வாய்மொழியும் எழுத்துருவ மொழியும் அவை விளக்கும் பொருளால் நமது நன்மதிப்புக்கு உரியன ஆகுமே அன்றிச் சொல் லழகுக்காக இல்லை.

அணியியல் என்பதோர் இலக்கணம் ஒவ்வொரு மொழி யிலும் உண்டு. அணிகள் பொருளணி என்றும், சொல்லணி என்றும் இரு வகைப்படும். பொருளணி அமைந்த செய்யுட் களை அறிஞர் படித்தும் கேட்டும் இன்புறும் வழக்கம் உலகம்

எங்கும் உள்ளது. சொல்லணி அமைந்த யமகம், திரிபு போன்ற செய்யுட்களை இயற்றுவாரும் சிலர். அவற்றைப் படித்தும் கேட்டும் இன்புற நினைப்பவரும் மிகச் சிலரே. சொல்லைக்காட்டிலும் பொருளே உயர்ந்தது என்பது உலகம் உணர்ந்த உண்மையாம். சொல்லே பொருளை அறிவிப்பதாதலின் சொல்லே சிறப்புடையது என்று சிலர் நினைப்பதுண்டு. பொருளே சொல்லைப் பயனுள்ள தாக்குவதால் உண்மையிற் சொல்லைக் காட்டிலும் பொருளே சிறந்தது என்பது அறிஞர் கருத்தாம்.

நாவன்மை படைத்த பெருமக்கள் பலர் உலகம் தோன்றிய காலம் முதல் இருந்திருக்கின்றனர். நாவன்மையே கருவியாகக் கொண்டு ஒரு நாட்டின் வாழ்வையே தம் மனம் போல் மாற்றும் திறமையுள்ளாரும் உண்டு. சொல்லின் ஆற்றல் முழுவதும் விளக்குவதே நாவன்மையாகும். ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஜூலியஸ்ஸீசர் என்பது சிறந்தது ஒன்றும். அதன்கண் ப்ரூடஸ் என்ற பெருநாவலர் வருகின்றனர். ஸீஸரும் பெரும் பேச்சாளர் என்று மதிக்கப் பெற்றவர். மார்கஸ் அண்டோனியஸ் என்ற நாவலர் ப்ரூடஸ் முதலிய பெருமக்களைப் புகழ்வது போலவே பேசி மக்கள் மனத்தை யெல்லாம் தம் விருப்பம் போல் இயங்கும்படி பேசிய பேச்சை அந்நாடகத்திற் காணலாம். ஸீஸரோ, டெமாஸ்தெனிஸ் முதலிய பெருமக்கள் பெரும் பேச்சாளர் என்று போற்றப்பட்டனர். ஸாக்டரடீஸ் ஒருவகையிலே சிறப்பமைந்த நாவலரே. இப்பெருமக்கள் எல்லாம் பிறரைத் தம் கருத்துக்கு இணங்குமாறு விரைவிலே செய்யும் நாத்திறம் படைத்தவர். இந் நன்மக்கள் சொல்லிய சொல்லும் கருதிய பொருளும் கேட்ட மக்கள் உள்ளத்தில் உருவிப்பாய்ந்து தம் தொழிலைச் செய்தன என்ற உண்மையை உலகம் அறியும்.

புறப்பாட்டுக்களால் அறியப்படுகின்ற கோவூர் கிழார் இத்தகைய சொற்றிறம் படைத்தவரே. அவர் உள்ளம்

கருதிய உயர்ந்த கருத்து வாய் மொழியாகப் புறப்படும். அதனைக் கேட்பவர் தீய உள்ளம் படைத்தவரே ஆயினும் நல்லுள்ளம் படைத்தவரே ஆயினும் அவர் கருதிய வண்ணமே செய்யவேண்டியவராய் இருந்தார். அதுவே அவர் கருத்தின் உறுதியையும் அவ்வுறுதியை வெளியிடும் மொழித்திறத்தையும் விளக்குவதாம்.

சொல்லோடு பொருள் பொருந்தவேண்டும் என்ற கருத்தே இல்லாது பேசும் பெரும் பேச்சாளர் சிலர் இந்நாளில் உண்டு. சொற்களை அடுக்குவதிலும் ஓசையை எழுப்புவதிலும் முழக்கத்தை வளர்ப்பதிலும் முனையும் இக்குழுவினர், மூன்றுமணி பேசினும் அவர் கருத்தென்ன; அதனை எங்ஙனம் கூறித் தெளிவிக்கின்றார் என்பதை, அவர் வாய்மொழியை மிக்க கருத்தோடு கேட்ட நூற்றுக் கணக்காண மக்களில் ஒருவரும் வெளியிட இயலாது பிரிந்து போகும் செய்தியை எங்கும் காணலாம்.

சிலர் அழகிய சொற்களை அடுக்கி நல்ல ஒலியோடு பேசிக் கேட்பார் மனத்தைக் கவருவதுண்டு. இப்புண்ணியர் பேச்சின் சாரம் என்ன என்பதை இறுதியிலே கணக்கெடுக்கும் போது ஒருமணியோ இரண்டு மணியோ செவிக்கின்பம் பெற்றதை யன்றி வேறு ஒன்றும் இல்லை என்ற முடிவே வரும். சிலர் நற்கருத்தை உரைக்கக் கருதினும் சொற்றிறம் வாயாது குழப்புவதுண்டு. சொற்றிறம் அமைந்தும் கருத்தை ஒழுங்குபடுத்தாமற் குழப்புவாரும் உண்டு.

பெரும் புலவர் இயற்றியருளிய காவியங்களைச் சுவைத்து இன்புறும்போது சொற்கள் அவர்களுக்கு அடிமையாகி அப் பெருமக்கள் கருதிய கருத்தை அழகுற வெளியிடும் நலத்தை உணர்ந்து இன்புறலாம். முனிவர்க்கும் புலவர்க்கும் சொல்லைத் தொடர்ந்து பொருள் செல்லும் என்றதோர் வடமொழி வாக்கியம் உண்டு. பெரும்

புலவர் தம் கருத்தை வெளியிடச் சொற்களைத் தேடி அலைவது என்பது என்றும் இல்லை. அவர்கள் அறிந்தோ அறியாமலோ ஒரு சொல்லை இசைத்து விட்டால், அதனைத் தொடர்ந்து அவர்கள் கருதிய பொருள் தானே வந்து இயையும் என்று உலகம் கருதுகிறது.

ஒரு பெரும் புலவர் “ ஈ யென இரத்தல் இழிந்தன்று அதனெதிர் ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று—கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று, அதனெதிர் கொள்ளேனென்றல் அதனினும் உயர்ந்தன்று ” என்று பாடுகின்றார். சொற்கள் மிகவும் எளியவை. என்றும் நாம் கேட்டுப் பயின்றவை. இரும்பு பொன்னைப் போன்ற பெருமையை இச் சிறு சொற்கள் அவர் வாக்கிற் புகுந்து பெறுகின்றன. இரப்பது இழிவு என்பதை உலகமே அறியும். அதனினும் இழிந்தது ஒரு செய்கை உண்டு என்பதை அழகாக உணர்த்துகிறார். ஒருவன் பல் எல்லாம் தெரியக் காட்டிப் பருவால் முகத்திற் கோட்டிச் சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி, மல்லெலாம் அகல வோட்டி, மானம் என்பதனை வீட்டி, இல்லெலாம் இரத்தல் அந்தோ! இழிவு !! இழிவு !!! என்று இக் கருத்தையே நேற்று வாழ்ந்த புலவரும் கூறினார். இரப்பது இழிவு ஆயினும் அதனினும் இழிந்த செய்கை ஒன்று உண்டு என உணர்த்தக் கருதிய புலவர், இங்ஙனம் மானத்தையே விழுங்கி இரக்க வரும் வறியோர் முகம் புலர மனம் கருக உடல் ஒடுங்க அவர் முகம் நோக்கி “ நாம் என்றும் எவர்க்கும் ஈயும் வழக்கம் இல்லோம். உமக்கும் ஒன்றும் கொடோம். போகலாம் ” என்று கூறும் செல்வர் மனத்தின் சிறுமையையே கூறுகிறார். இதனையே வள்ளுவரும் “ இரப்பன் இரப்பாரை யெல்லாம்—இரப்பின் கரப்பார் இரவன் மின் என்று ” என்று வேறொரு வாய்பாட்டால் உரைக்கின்றார். இரண்டடிகளில் அமைந்த கருத்தே ஆயினும், சில வாகிய சொற்களால் வெளியிட்ட கருத்தே ஆயினும் எத்தனை உயர்வுள்ளது என்பது எளிதில் விளங்கும்.

இங்ஙனமே மற்றொரு கருத்தும் பொன்னிற் பொதிந்த மணிபோல அமைந்திருப்பதைக் காண்போம். புலவர் 'செல்வம் மிக்க ஒருவன் வறிய ஒருவனைக் கண்டதும் மனம் மலர்ந்து இப்பொருளைக் கொள்க என்று கொடுப்பது உயர்ந்த செய்கையே' என்கிறார். இக்கருத்தையே 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு' என்று கூறுகின்றார். இங்ஙனம் கொடுப்பது உயர்ந்த செய்கையே என்று உலகம் உணரும். ஆயினும் இதனினும் உயர்ந்த செய்கை ஒன்று உண்டு என்று புலவர் விளக்குகின்றார். ஒரு பெருஞ் செல்வன், அரும் பொருள் ஒன்றைக் கொடுக்கும் போது உண்மையில் வறுமையால் வாடும் ஒருவன் "ஐய, இப்பொருள் எனக்கு வேண்டா. உம்மிடம் நான் இப்பொருள் பெறும் கருத்தால் வந்தேன் இல்லை. நீர் நீடூழி வாழ்க! நான் விடைபெறுகின்றேன்" என்று கூறிவிட்டு மனவமைதியோடு தன் சிறுகுடில் நோக்கி நடப்பானே ஆயின், அவன் செய்கை செல்வனது கொடையைக் காட்டிலும் சிறந்ததே என்று உலகம் உணரும்.

டாக்டர் ஜான்ஸன் என்ற ஆங்கிலப் புலவரைப் பற்றி வழங்கும் வரலாறு ஒன்று உண்டு. அப்புலவர் சொற்செல்வர். பொருளை மனம் போல இயக்கும் திறம் படைத்தவர். அவர் ஆங்கில மொழிக்கு ஒரு பேருதவி புரிந்தார். அந்நாளில் இல்லாதிருந்த அகராதி ஒன்றைப் பிறர் உதவியின்றித் தமது முயற்சியாலேயே இயற்றினார். இந்நாளில் ஒரு அகராதி இயல வேண்டும் எனிற், பல பெரும் புலவர் பல்லாண்டு உழைக்க வேண்டியுளது என்பதை நாம் நன்கு உணர்வோம். இத்தகைய அரும் பணியில் முதல்வராய் நின்ற இப்புலவர் பெருமான் அக்காலத்தில் சிறந்த புலமை படைத்த செல்வராகிய செஸ்டர் பீல்ட் என்ற பிரபுவின் ஆதரவைத் தமது அகராதியின் பொருட்டுப் பலமுறை நாடினார். அவர் நாடி வந்தபோதெல்லாம் பிரபு அவர்க்கு முகங் கொடுக்கவில்லை. புலவர் அரும்பாடுபட்டு அகராதியை ஒருவர் உதவியும் எதிர்பாராது வெளியிட்டார். அது

வெளியான பிறகு பத்திரிகை உலகம் அதன் பெருமையை உள்ளவாறு பாராட்டியது. அதனையறிந்த செஸ்டர் பீல்டு பிரபு தாமும் அன்று பாராட்ட வேண்டுமென்று கருதி ஒரு கடிதம் எழுதித் தம் கடமையை நிறைவேற்றியதாக நினைத்துக் கொண்டார். பத்திரிகையில் வந்த அக் கடிதத்தைப் பார்த்த ஜான்ஸன், செஸ்டர் பீல்டுக்கு ஒரு சிறு கடிதம் எழுதினார். அந் நிருபம் புலவர் மானத்தை மிகவும் நன்கு விளக்குகின்றது. 'கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று' என்ற கருத்தைத் தெளிவாக்குகின்றது.

சொல் நயம் பொருள் நயம் என்ற இருவகை நயமும் அமைந்த கவிதையே உலகத்தால் மதிக்கப் படுகிறது. கருத்தை யெல்லாம் செய்யுளாகவே இசைத்த நாளில் புலவரது சொன்னோக்கும் பொருணோக்கும் தொடை நோக்கும் நடை நோக்கும் காவியங்களிலே தேடி யெடுத்துத் துய்க்க இடமிருந்தது. இன்று மக்கள் செய்யுளைக் காட்டிலும் உரை நடையையே மிகவும் விரும்புகின்றார்கள். செய்யுளையே ஒருவர் இருவர் செய்தாலும் அவை உரை நடை போல இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். செய்யுள் நடை வேறு, உரை வேறு என்றே இந்நாள் வரை நம்பி யிருந்த தமிழ் மக்கள் இன்று இரண்டையும் ஒன்றாக்கவே முனைகின்றார்கள்.

செய்யுட்கள் அமைப்பதில் உள்ள சில கட்டுப்பாடுகளையும் தகர்த்து எறிந்து, புது வழி காணவே இன்றைய உலகம் துணிந்துள்ளது. சொற் பொருள் நயங்களைச் செய்யுட்களிற் காணவேண்டும் என்றாற் சிறிதளவேனும் மொழிப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். எழுதப் படிக்கத் தெரிந்த வளவிலே ஆராய்ச்சி செய்யப் புறப்படும் அறிஞர் மிகுந்திருக்கும் இக்காலத்தில், ஒரு அளவு வரை கற்ற பிறகே, சொல் நயம் பொருள் நயங்களை அறியக் கூடும் என்று ஒருவர் கூறத் துணிந்தால் எவரும் கேளார்.

வள்ளுவர் வாக்கிலும் பிற சங்கப் புலவர் வாக்கிலும் உள்ள சொற்களின் கருத்தாழம் செறிவு தெளிவு முதலிய நயங்களை அறிய வல்ல பயிற்சியை இன்று தமிழ் பயில நினைக்கும் எல்லாருமே எளிதிற் பெற இயலாது. கம்பரைப் போன்ற இடைக்காலப் புலவர் வாக்குக்களைப் பல பெரு மக்கள் பலவாறு தெருக்கள் தோறும் பேசியே மக்களுக்குத் தெரிவித்து வருதலால் அவற்றைச் செவித் துணையால் அறிய வல்லவர் பலர் இருக்கலாம். இத்துறையில் நயம் தேர்ந்து இன்புறும் மக்களைக் காட்டிலும் இந்நாளிலே உரை நடையால் இயன்ற சிறு கதை, பெருங் கதை, கட்டுரை முதலிய விருந்துத்துறையிலே நுழைந்து இன்பம் கண்டு மகிழும் மக்களே மிகப் பலராவர். இத்துறையில் நயம் உணர்ந்து இன்புறுதற்கு மிகுந்த கல்வி யறிவு வேண்டும் என்பதில்லை. உரை நடையைப் பிழையறப் படித்துணர வேண்டிய அறிவே போதுமானது. இந்த அறிவின் துணைகொண்டே எத்துணையோ மக்கள் இன்று நம் மொழி வளரும் புது நெறிகளில் உள்ள இன்பச் சோலைகளில் புகுந்து இன்புறுகின்றனர்.

# 13. வாய் வாளாமை

மக்கள் இனத்துக்கு இறைவன் அருளிய தனிச் செல்வம் உள்ளக் கருத்தைப் பிறர் அறிய வெளியிடும் திறமையே. விலங்கினமும் புள்ளினமும் தம்முள் ஏதோ குறிப்பாற் கருத்தை வெளியிடுவது உண்டே ஆயினும் அவை மக்கள் இனம் போல மொழியை வளர்த்தவை இல்லை என்று துணிந்து கூறலாம். இன்று ஆங்கில மொழியில் எத்தனை சொற்கள் உண்டு? இந்தி மொழி எத் துறைகளால் வளர்ச்சிபெற முயல்கின்றது? தமிழ் மொழி எத்தனை சொற்களைத் திரட்டியுளது? பிறமொழிகளில் உள்ள வளர்ச்சி நிலை யாது? என்ற இவைபோன்ற வினாக்களை எழுப்பி ஆராயப் புகுந்தால், மக்கள் இனம் பேச்சுக்குக் கொடுத்திருக்கும் மதிப்பை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

ஒரு குடும்பத்தில் ஏழு குழந்தைகள் பிறந்து அக் குழந்தைகளுள் ஆறு நன்றாகப் பேசி விளையாடி இன்புற்றிருக்க, ஒரு குழந்தை இளமையிலேயே செவித்துளை தூர்ந்ததால் நாத்திறம் படையாமல், ஊமையாய் இருந்து விட்டால், ஆறு குழந்தைகள் நன்கு மழலை மொழிகின்றனரே; ஒரு சிறுவன் ஊமனாகவே இருந்தால் என்ன? இவன் இப்படி இருப்பதும் ஒரு அழகுதான்! என்று பெற்றோர் நினைத்து மனவமைதி பெறுவதுண்டா? அந்தக் குழந்தையும் வாய் திறந்தே ஆகவேண்டும் என்று மருந்தும் மந்திரமும் தேடிக் கோயில்களையும் சுற்றிவரும் காட்சியையன்றோ எங்கும் காண்கின்றோம்.

வாயைத் திறப்பதே பேறு. வாய் அடைப்பது துயர் நிலை என்று மக்கள் மனம் எங்கும் நினைக்கிறது. இங்ஙனம் நினைக்கும் உலகத்தில் வாய்வாளாமை சிறப்புடையது என்று ஒருவர் கூறினால் எவரேனும் செவி கொடுத்துக் கேட்பாரா? ஆங்கில மொழியில் ஒரு சிறு வாக்கியம் உண்டு. "பேச்சு

வெள்ளி பேசாமை பொன்'' என்று அதனை மொழி பெயர்க்கலாம். வெள்ளியிலும் பொன் உயர்ந்தது என்பதை இளங் குழந்தையும் அறியும். வெள்ளிக் காப்பையும் தங்கக்காப்பையும் கையில்வைத்துக்கொண்டு உனக்கு எதுவேண்டும் என்று கேட்டால் ஏழைக் குழந்தையும் பொற்காப்பையே விரும்பக் காண்கிறோம். வெள்ளியிலும் பொன் பன்மடங்கு சிறந்தது ஆவது போலவே வாய்திறந்து பேசிமகிழ்வதைக் காட்டிலும் வாய் வாளாமை பன்மடங்கு உயர்ந்தது என்று பெருமக்கள் கருதுகின்றனர்.

6498

ஊமன் வாய் மூடியிருக்கும் நிலை, அவனுக்கு வேறு வழியின்மையால் நேர்ந்ததாகும். பல்லாயிரமக்கள் செவி யின்பம் பெறுமாறு நாத்திறம் படைத்துப் பேசவல்ல பெருநாவலன் ஒருவன், வாரத்தில் ஆறு நாள் நாக்கடிப்பாக வாய்ப்பறை அறைந்துவிட்டு, ஒருநாள் வாய் வாளாமை பூண்பானாயின், அவன் அப்பொழுது தன்னுள் அடையும் இன்பம் பிறர் அறியாததே. துறவறம் பூண்டு உலக மக்களுக்கு நலம் விளைப்பதே கருத்தாக நாடெங்கும் நடந்து தருமோபதேசம் செய்துவரும் சான்றோர், ஆண்டில் சில திங்கள் எவரோடும் எவ்வகையிலும் தொடர்பு பெறாமல் தனிநிலையிலே வாய் வாளாமை பூண்டிருக்கும் வழக்கம் இன்றும் உண்டு. புறத்தே செல்ல விட்ட பொறிகளை அகத்தே அடக்கி அகப்பொருளைத் துருவியறிய வாய் வாளாமையே சிறந்த உதவி என்று பெருமக்கள் கருதினர். 'யாகாவார் ஆயினும் நாகாக்க' என்ற வள்ளுவர் திருவாய்மொழிக்கும் இக்கருத்தே பொருந்தும் என்று கூறலாம்.

காந்தியடிகள் சிறந்த கருமயோகி என்பதை உலகம் உணரும். அவர் ஞானயோக நெறியிலும் பக்தியோக நெறியிலும் உயர்ந்த நிலையில் நின்றார் என்றே உலகம் கருதியது. அத்தகையமகான் ஒரு நாளிலே பத்து இருபது பெருங் கூட்டங்களிற் பேசிப் பன்னூறாயிர மக்களைத்

தம் வழியில் நடக்குமாறு செய்த வரலாற்றை உலகம் அறியும். அன்பு நெறியும் இறை யுண்மையும் விளங்கப் பின்னாளில் அவர் பிரார்த்தனைக் கூட்டங்களிற் பேசிய பேச்சுக்கள் இன்னும் செவியில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இத்தகைய பெரும் பேச்சாளர் எத்துணையோ பொதுநலப் பணிகளில் ஈடுபட்டவராய் இருந்தும் வாரத்தில் ஒரு நாள் மவுனம் பூண்பது என்ற விரதத்தை உறுதியாகப் பின் பற்றியதை உலகம் நன்கு உணரும். பேசியே எழுதியே பொது நலப்பணிகளில் ஈடுபட்ட இப்பெரியோர் மவுனத்தின் பெருமையை நன்கு உணர்ந்தே இருந்தார்.

சொல்லின்பமும் பொருளின்பமும் விளங்க, எண்ணற்ற மக்கள் செவிநலம் பெறப் பேசவல்ல பெரு மக்களே ஆயினும், வாய் திறப்பதைக் காட்டிலும் வாய் மூடுவதே சிறப்பு என்பதை ஒரு காலத்தில் உணரவே செய்வர். முன்னாளிலே அரசர்க்கு உரிய அமைச்சராகவும் புரோகிதராகவும் இருந்த முனிவர் எல்லாம் வனவாழ்க்கையும் மவுனமுமே பெரிதும் விரும்பினர் என்று கேட்கிறோம். இன்று வனவாழ்க்கைக்கு வழியில்லையாயினும் எத்தகைய நிலையில் வாழ்பவரும், ஒரு நாளிற் சிறிது பொழுதேனும் வாரத்தில் ஒரு நாளேனும் மவுனம் பூண்டு தமது அக வாழ்வைத் தூய்மை செய்து கொள்ள முயலலாம். அக வாழ்வு சிறிது சிறிதாகத் தூய்மை பெறவே புறவாழ்வும் தானே தூய்மை எய்தும்.

ஒருவர் தம் உள்ளக் கருத்தைக் காலம் இடம் அறிந்து தக்க மொழிகளால் வெளியிடுதலால் எத்துணையோ மக்களுக்கு நன்மை விளைக்கக் கூடும். ஒருவர் வாய்மூடி மவுனியாய் இருப்பதால் அவர்க்கேனும் பிறர்க்கேனும் எத்தகைய நலம்விளையும்? என்று வினவுவாரும் உலகில் இருப்பர். உலகத்து மகான்கள் எல்லாம் தாம் நெடுநாள் முயன்று தேடிப்பெற்ற பெறற்கருஞ் செல்வத்தை உலகமக்கள் பெறுமாறு உதவுவதற்கு வாய்மொழியே சிறந்த உதவி

யாம் ஆயினும், அம்மகான்கள் வரலாற்றையே கூர்ந்து நோக்கின் அவர்கள் சிலகாலம் காட்டிலோ மலையிலோ பிற இடங்களிலோ தனிமையில் மவுன நிலையில் இருந்தே தம் மெய்யறிவைப் பெற்றார் என்பது தெளிவாகும்.

முசல்மான்கள் தமது நபி நாயகமாகப் போற்றுகின்ற முகம்மது நபி அவர்களும் ஒரு மலைமேற் சென்று சில காலம் மவுன நிலையில் இருந்து ஆண்டவன் திருவருட் செல்வத்தைப் பெற்றார்கள் என்பது உண்மை வரலாறும். கிறிஸ்தவர்கள் தேவகுமாரன் என்று கூறும் இயேசுநாதரும் மலையுபதேசம் செய்யுமுன் கடவுளைத் தியானம் பண்ணி அடங்கியிருந்த உண்மையை அறிவோம். 'அனல் ஹக்' என்ற மெய்ப்பொருளை உணர்ந்து உணர்த்திய முஸ்லீம் சூபியான ஹுசேன்மான்சூரும் உள்ளத்தின் உள்ளுறை பொருளை உணரப் பலநாள் மவுனதவம் பூண்டார் என்று அறிவோம். அண்மைக் காலத்தில் உலகம் போற்றும் தெய்வப் பித்தராக விளங்கிய இராமகிருஷ்ணபரமஹம்ஸர் பல சீடருக்கு இனிய எளிய மொழிகளால் உபதேசித்த ஆன்ம அனுபவத்தை எத்தனை காலம் மவுன தவத்திலிருந்து பெற்றார் என்பதை அவர் வரலாற்றால் அறியலாம். விவேகானந்தரும் இமயத்துச்சியில் பல திங்கள் மவுனம் பூண்டவரே.

வாய்வாளாமை என்பது தவத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது என்பதை உலகத்து நன்மக்கள் வரலாறுகளால் எளிதில் உணரலாம். இக்கருத்தையே தாயுமானவர் பல மொழிகளால் அழகுற உரைக்கின்றார். வாயை அடக்கி, மனத்தையும் உட்போக்கி, அடங்கியிருப்பதை அப்பெரியோர் 'சும்மா இருப்பது' என்று சுருக்கியுரைக்கின்றார். அவர் பாடல்கள் பல இக்கருத்தை உரைப்பினும் ஒன்றை இங்கு ஆராய்வோம். அவர் மெய்யறிவு படைத்த பெரியோர் ஆதலின், சும்மா இருப்பதுபற்றி அவர் கூறும் கருத்து அவர் மனப் பண்புக்கு ஏற்ற உயர் கருத்தே

ஆகும். வாய்மூடியிருப்பது மட்டும் அன்றி மனத்தையும் நெறிப்படுத்த வேண்டும் என்று அப்பெரியோர் கருதியதால் மனவடக்கமே நாவடக்கத்துக்கு அடிப்படையாக உணர்த்தப்பட்டது.

குதிரைகளைத் தெருவில் ஓட்டும் வண்டிக்காரர்கள் சில பொழுது அடக்க இயலாது தவிப்பதை நேரிற் காண்கிறோம். யானைகளைப் பாகர் அடக்க இயலாது உயிர்விடும் காட்சிகளையும் காண்கிறோம். இக்காட்சிகளை யெல்லாம் நினைந்தே தாயுமானவர்.' "குதிரையையும் அடக்கலாம்; மதக்களிற்றையும் அடக்கியாளலாம். கரடி, புலி முதலிய வனவிலங்குகளையும் நமக்கு அடங்கி நடக்கும்படி செய்யலாம். சிங்கத்தின் முதுகின் மேல் அமர்ந்து செலுத்தலாம். நஞ்சுமிக்க பாம்பையும் எடுத்து ஆட்டலாம். நெருப்பில் இரசத்தை வைத்து ஐந்து உலோகங்களையும் மாற்றி அவற்றை விற்று உண்ணலாம். வேறு ஒருவர் நம்மைக் காணுவண்ணம் உலகத்தில் உலாவலாம். எப்பொழுதும் இளமையோடு இருக்கலாம். கூடுவிட்டுக் கூடுபாயலாம். நீர் மேல் நடக்கலாம். நெருப்பின் மேல் இருக்கலாம். இவை போன்ற எத்தனையோ சித்திகளைப் பெறலாம். ஆயினும் மனத்தை அடக்கிச் சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்று கூறுகிறார்.

சும்மா இருப்பது என்ற இந்நிலை பற்றி நம் நாட்டில் ஒரு கதை வழங்குகிறது. ஒரு தேவாலயத்தில் நெடுங்காலமாக ஒரு சாமியார் மவுனவிரதம் பூண்டிருந்தார். அவர் பெருமையை அறிந்த தருமகர்த்தா அவர்க்கு உச்சிக் காலத்தில் ஒரு பட்டைச் சோறு கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். இரண்டு மூன்று ஆண்டுகளாக இவ் வழக்கம் இருந்துவந்தது. பழைய தருமகருத்தா விலக நேர்ந்தது. புதியவர் ஒருவர் அப் பதவிக்கு வந்தார். அவர் கோயிற் கணக்கைப் புரட்டிப் பார்க்கும்போது உச்சிக் காலத்தில் 'சும்மா இருக்கும் சாமியார்க்குச் சோற்றுப்பட்டை ஒன்று'

என்ற கணக்கு வரக்கண்டார். கண்டதும் கடுஞ்சினம் கொண்டு 'சோம்பேறிகளுக்குச் சோறு கொடுக்க இந்த ஆலயம் இடம் இல்லை' என்று முடிவு செய்து, அன்று முதலே சாமியார் பெற்ற சிற்றுதவியை நிறுத்திவிட்டார். சாமியார் கோயிலுள் ஒரு புறத்தில் வழக்கம் போல மவுன மாகவே அமர்ந்திருந்தார். மாதம் மூன்றாகியும் அவர் உணவைப் பற்றி நினைக்கவில்லை. அவர் உடம்பும் வாட்ட முறவில்லை. புதிய தருமகருத்தா இக்காட்சி கண்டு பொறு மல் "சாமியாரே, நீர் சும்மா இருப்பதற்கு இது இடம் இல்லை. வெளியே போகலாம்" என்றார். மவுனமே பூண்ட துறவியார் வாய்திறந்து "சும்மா இருக்க ஆலயத்தில் இடம் இல்லை என்றால் வேறு எங்கு போவது?" என்றார். தரும கருத்தா இனி இங்கு உமக்கு உணவு இல்லை. "சும்மா இருப்பதற்காகச் சோறும் கொடுப்பாரோ?" என்று கேட்டார்.

சாமியார் தருமகருத்தாவை நோக்கி "ஐய, உம்மால் ஒரு மணி நேரம் சும்மா இருக்க முடியுமா? முடியுமானால் என்னோடு இங்கே அமர்ந்திரும்" என்று கூறினார். "சும்மா இருப்பது பெரிய வித்தையா? இதோ அமர்ந்து விட்டேன்" என்று சாமியார் முன் தருமகர்த்தா கால் மடக்கி அமர்ந்தார். சாமியார் வழக்கம் போல மோன நிலையிலே உண்ணேக்குடன் இருந்தார். அவர் உள்ளத்தே ஆனந்த வெள்ளம் நிலவியது. தருமகருத்தாவோ கால் மணி நேரம் அமர்வதற்குள் நூறு நினைப்புகள் நினைத்துவிட்டார். அந் நாளில் அவர்க்கு மணப் பருவம் பெற்ற மகள் ஒருத்தி இருந்தாள். அவள் திருமணம் நிகழ்த்துவதும் அத் திரு மணத்தில் நிகழவேண்டிய பாட்டுக் கச்சேரியும் மாலையில் பெண்ணும் மாப்பிள்ளையும் ஊர்வலம் வருவதும் ஊர்வலத் திலே சம்பந்தியும் தாமும் நாதசுரக் கச்சேரி கேட்பதும் அவர் மனத்திலே பொங்கி வழிந்த நினைப்புக்களாம். அரை மணி ஆனதும் தருமகருத்தா "இனிமேல் என்னால் இப்படி அமர்ந்திருக்க முடியாது" என்று கூறிவிட்டார். சாமியார்

மெல்லக் கண் திறந்தார். எதிரில் இருந்த அதிகாரியை நோக்கி, "ஐய, நீர் ஒரு நிமிஷமேனும் சும்மா இருந்தீரா? உமது மனக்குரங்கு எத்தனை கொப்புக்களில் தாவியது. அக் குரங்கைப் பிடித்து அடக்கி ஒரு வழியில் நிறுத்த உம்மால் இயன்றதா? உமது மகள் திருமணம் இன்னும் இரண்டாண்டுகளின் பிறகே நிகழப் போகிறது. அதைப் பற்றி எத்தனை நினைப்பு நினைத்து விட்டீர். உமது மதிப்பை யெல்லாம் நாதசுரக் கச்சேரியிலே நாட்ட நினைத்தீரே! ஒரு நொடியேனும் உமது மனம் வெளிச் செல்லாது அடங்கி யிருந்ததா? சும்மா இருப்பது சோம்பேறியின் செயல் இல்லை. எனக்கு நீர் ஒரு பிடி சோறு கொடுக்க மனம் இல்லாது நெடு நாளாக நடந்த தருமத்தை நிறுத்தி விட்டாலும், நான் சிறிதும் மனம் மாறுபட மாட்டேன். என் மனம் நிலைத்திருக்கும் இடம் இவ்வுலகப் பொருள் ஒன்றிலும் இல்லை. தன்னையே மறந்திருக்கும் நிலையே சும்மா இருப்பது ஆகும்'' என்று கூறி மவுனம் பூண்டார். தர்மகர்த்தா மறு நாள் முதல் அந்தச் சாமியார்க்கு வழக்கம் போல் உணவு தரும் உத்தரவைப் போட்டுவிட்டு அவர் வழிக்குப் போகாது விலகிக் கொண்டார். இக் கதை உண்மையே ஆயினும் பொய்யே ஆயினும் நாம் அந்த ஆராய்ச்சியில் இறங்காமல், இதனால் விளங்கும் ஒரு உண் மையை உணரலாம். 'யாகாவார் ஆயினும் நாகாக்க' என்று கூறிய வள்ளுவர் பொறிகளை ஒழுங்குப் படுத்தி அடக்கி வைக்க இயலாவிட்டாலும் மனத்தை அடக்க இயலாவிட் டாலும் நாவையேனும் ஒரு எல்லையுள் அடக்கி வைக்க என்று ஆணையிடுகிறார். நாவை அடக்குவதால் மற்றவை மெல்ல மெல்ல அடங்கும் என்பது அவர் கருத்தாம்.

நாவன்மையிற் சிறந்த ஒரு பெருமகன் ஒரு சிறந்த சந்தர்ப்பத்தில் நாவை அடக்கி வாய்வாளாமை பூண்ட வர லாற்றை இராமாயணத்திலே கம்பர் படைப்பிற் காண்கி றோம். வீடணன் இராமபிரானிடம் சரண் புகுந்தான். இராமன், அவனுக்குக் கடற்கரையிலே இலங்கை யரசை

அளித்து முடி கவித்த பிறகு வானரப் படைக்கு அவனை அறிமுக மாக்கினான். பின்பு அவனை நோக்கி, 'அன்ப, இலங்கையின் வலி நிலையை உரைப்பாயாக' என்று கேட்டான்.

வீடணன் இராவணாதியர் வலிமையை விளக்கியுரைத்து இராவணாதியர் தோள் வலிமை படைஞர் திரளின் வலிமை மட்டு மன்றிக் கடலே அகழாக உடைய இலங்கை அரண் வலிமையும் பகைவர் நெருங்குதற்கரிது என்று விளக்கி யுரைத்தான். இவ்வளவும் கூறிய பிறகு "இராமா, இலங்கை வலிமை உரைத்துவிட்டேன். இன்னும் ஒரு சிறிது கூற விரும்புகிறேன். இங்கு வணக்கவொடுக்கத்துடன் நிற்கும் அனுமான் செய்த செயலை என்னென்றுரைப்பேன்! இலங்கையில் உள்ள அரக்கர் இனமே இவ்வனுமான்முன் புலியைக் கண்ட ஆடுகள் பட்டபாடு பட்டது. இவன் தோரணத்தின் எழுவைக் கையில் ஏந்தியபோது இறந்த அரக்கர் தொகை கடல் மணலினும் மிகுதியே. அரக்கர் பிணம் எல்லாம் கடலில் விழுந்தன. இவன் எங்கள் தமையனை இராவணன் மகன் அக்கனைக் காலினால் தேய்த்த குழம்பு இன்னும் ஈரமாய் உளது. படைத்தலைவர் ஐவர் இவனால் இறந்தனர். அவர் தேவர் மானம் போக்கிய வலிமையாளர். கிங்கரர் எண்பதினாயிரர் இவன் வால் கால் தோள் வலிமையால் இறந்தொழிந்தார். இந்திரனை நடுங்கவைக்கும் சம்புமாலியும் இவன் கையால் இறந்தான். இவன் சுட எரிந்த இலங்கை இறந்த அரக்கர் இரத்தத்தால் அவிந்தது. இலங்கை வெந்த கதையை எவ்வண்ணம் உரைப்பேன்! இலங்கை வேந்தன் ஏழு நாள் புட்பகத்தில் தன் பரிவாரங்களோடு இருந்து தன் திருநகர் வெந்த காட்சியை நோக்கினான். பின்பு அவன் வேண்டுகோளால் நான்முகன் விரைவில் இலங்கையைநன்கு அமைத்துதவினான்." என்று கூறி வணங்கினான்.

இராமன் அனுமானை நோக்கி, "ஐய, அரக்கர் படையைப் பாதிக்குமேல் அழித்து விட்டாய். ஊரையும் நெருப்

பால் அழித்தாய். இன்னும் அங்கு ஏதேனும் உண்டோ? சீதையைப் பார்த்தும் நீயே மீட்காது வந்தது நான் என் விற்றொழிலைக் காட்ட இடம் தரும் பொருட்டோ? நீ தனியே சென்று உன் தோள்வலியாற் சாதித்த செயலை நான் பெரும் படையோடும் வில்லோடும் சென்று இனி நிகழ்த்த இருக்கிறேன். என் வலிமையும் இராவணன் வலிமையும் உனதாக்கிக் கொண்டாய், பாக்கியமே உருக்கொண்டது போன்ற புண்ணிய உனக்கு இனி நான்முகன் பதம் வருவதாக.'' என்று வாழ்த்தினன். இது கேட்ட அனுமான் வணக்கத்துடன் எழுந்து இராமனை வணங்கி ஒன்றுமே மறுமொழி யுரையாமல் நின்றான். இங்கு நாவல்லவனை அனுமான் ஒன்றும் பேசாத நிலையே அவன் பெருமையை நன்கு விளக்குகிறது. "வல்லவன் அடக்கமே அடக்கம்'' என்பது உண்மை அன்றோ.

---

# 14. காலமும் உலகமும்

காலமும் உலகமும் எல்லே யற்றவை என்றே கருதத் தக்கவை. காலம் என்ற கருத்து என்று தோன்றியது? என்று முடிவது என்று சொல்லவல்லவர் ஒருவரும் இல்லை. உலகமும் அங்ஙனமே மனித அறிவின் எல்லைக்குள் அடங்கிவிட்டது என்று கூற இயலாது. உலகம் எத்தனை என்று உறுதி கூற வல்லவர் உண்டா? நாம் வாழும் மண்ணுலகத்தில் உள்ள நில நீர்ப்பரப்பு முழுவதும் ஒரு சிறிதும் எஞ்சாமல் நாம் அளந்து விட்டோமா? மண்ணுலகைப் பற்றிய நம் அறிவே நிரம்பாத குறையுள்ளதாய் இருக்கும்போது, 'மண்ணுலகம் ஒழிந்த மற்றைய உலகங்கள் எத்துணைய? அங்கு உயிர்கள் உண்டா இல்லையா? தாவரம் உண்டா இல்லையா? நீர்வளம் நிலவளம் உண்டா இல்லையா?' என்ற வினக்களுக்கு நம்மால் விடைகூற இயலுமா? மனித அறிவு வளர்ந்துகொண்டே வருகின்றது என்பது உண்மையே. எத்தனை வளர்ந்தாலும் உலகத்தில் உள்ள எல்லா வற்றையும் அறிந்துவிட்டது என்று துணிந்து கூற இயலாது. காலத்தைப் பற்றிய மனித அறிவும் இங்ஙனமே குறைபட்ட தாயுளது. 'மண்ணுலகத்தில் நூறுயிர ஆண்டுகளின் முன் வாழ்ந்தவர் யார்? பத்து நூறுயிரம் ஆண்டுகளின் முன் வாழ்ந்த உயிர்கள் எவை? அதற்கு முன் மண்ணுலகம் எப்படி இருந்தது? இனி எதிர் காலத்தில் பன்னூறுயிர ஆண்டுகளின் பின்னே எப்படி இருக்கும்?' என்ற வினக்கள் ஒன்றன் பின் ஒன்றாக எழும்போது இவைகளுக்கு ஏற்றவிடை கூற விஞ்ஞானிகளும் துணிய மாட்டார் என்றே சொல்லலாம்.

மண்ணுலகத்தைப் பலவழிகளால் அளந்து படம் எடுத்துக் காட்டுகின்றார்கள். நிலத்தில் நீர்ப் பரப்பு இவ்வளவு என்று கணக்கெடுத்துவிடுகிறார்கள். கடல்களின் ஆழத்தையும் மலைகளின் உயரத்தையும் கணக்கிட்டுத் தருகிறார்கள். காடுகளையும் பாலை நிலங்களையும் கடந்து இன்

னின்ன இடத்தில் இன்னின்ன புதுமைகள் உள்ளன என்று கூறுகின்றார்கள். இத்தனை வகையால் அளந்துமா உலகம் மனிதன் அறிவுக்கு மீறி நிற்கின்றது? என்ற வினா எழலாம். நாம் இவ்வினாவுக்கு விடை கூறுவது எளிதேயாம். நம் நாட்டின் வட வெல்லையான இமயமலையையும் தென்னெல்லையான கடலையும் எடுத்துக் கொள்வோம். இமய மலைமேல் உள்ள முடிகள் எத்துணைய? அவையனைத்தும் மனிதன் அறிவுக்குள் அடங்கிவிட்டனவா? முடிகள் எல்லாம் அளக்கப்பட்டு விட்டாலும் உச்சிவரை சென்ற சில மக்கள் பிடித்த வழியன்றி அம்முடிகளை அடைய வேறு வழிகள் இல்லையா? வழிகளில் உள்ள புதுமைகள் என்ன? அங்குவாழும் உயிர்கள் யாவை? மனிதருள் எவர் அங்கு வாழும் உரிமை பெற்றுள்ளனர்? காடுகளாக அங்கங்கே உள்ள இடைவழி யெல்லாம் துருவி அவற்றுள் மறைந்திருக்கும் பொருளை யெல்லாம் மனிதர் அறிந்துவிட்டனரா? மூலிகைவகை எத்தனை தாழ்வரைகளிலும் இடைவரைகளிலும் உச்சிப்பகுதிலும் உண்டு? அவற்றை யெல்லாம் மனிதன் அறிந்து விட்டானா? உலகத்து மலைகளில் உயர்ந்தது என்ற பெருமையை இமயம் பெற்றது எக் காரணங்களால்? அம்மலை மனித அறிவுக்கு எட்டாது தன்னுள் இன்னும் மறைத்துவைத்திருக்கும் உண்மைகள் எத்துணையோ? ஒன்றும் எஞ்சாமல் இமயத்தின் செல்வ மெல்லாம் மனிதன் வசப்படும் காலமும் உண்டா? இவ்வண்ணமே தென்கடலின் எல்லை அளந்த அறிஞரையும் நாம் சில கேட்கலாம்.

தென்கடல் நிலப்பரப்பாய் இருந்த நாள் ஒன்று உண்டா? அந்நாளில் அங்கு எத்தனை நாடுகள் இருந்தன? இமயமே கடலாய் இருந்த காலம் உண்டா? இமயம் கடலாய் இருந்த போது தென் கடல் நிலப்பரப்பாய் இருந்திருக்கலாமா? அந் நிலப்பரப்பிலே வாழ்ந்த மக்கள் யாவர்? அவர்கள் வாழ்வு முறை எத்தகையது? எழுநூற்றுக்காவதம் அளவுள்ள பெருநிலப்பரப்பு ஒன்று கடலுள் அழுந்தியதாகத் தமிழகத்தில் வழங்கும்

செய்தி உண்மைதானா? உண்மையாயின் அந் நிலப்பரப்பின் வரலாற்றை அறியும்பொருட்டு இன்றுள்ள தென் கடலின் அடிப் பரப்பைத் துருவி உண்மைகாண முயன்றவர் உண்டா? முயன்றவர் பெற்ற பயன்தான் யாது? தென் கடல் மனிதர்க்கு உதவும் பொருள்கள் உப்பும் முத்தும் மீனும் தானா? வேறு எதுவும் இல்லையா? இன்னோரன்ன வினாக்கள் பலவற்றை எழும்புதல் எளிதே. இவற்றுக்கு உரிய விடைகளைத் தருதல் அத்துணை எளிதென்றுகூற இயலாது. ஏனெனில் மனிதன் அறிவு ஒரு எல்லைக்குட்பட்டதே. மலையின் உயர்வும் கடலின் ஆழமும் அவன் அறிவுக்கு மீறியவையே.

அரபிய நாடு பெரும் பகுதி பாலை நிலமாக இருக்கின்றது. சகாரா, கோபி என்ற பாலைநிலங்களும் உலகில் உண்டு.நம் நாட்டில் இராசத்தானத்திலே பல பகுதிகள் பாலைபோன்றுள்ளன. உலகத்தில் இன்று பாலையாக உள்ள நிலங்கள் என்றுமே பாலையாக இருந்தனவா? பாலைக்குநிலம் இல்லை என்று தொல்காப்பியர் கூறுகின்றார். முல்லையும் குறிஞ்சியுமே வெயிற் கொடுமையாற் பாலைநிலம் ஆவதாக இளங்கோ வேந்தன் உரைக்கின்றார். இவ்விருபெரும் புலவரும் கூறும் கருத்துஉண்மையாயின், இப்பாலை நிலங்கள் ஒரு காலத்தில் முல்லை குறிஞ்சிநிலங்களாக இருந்திருக்கலாமோ? அங்ஙனம் இருந்த வரலாற்றை இன்று ஆராய்ந்தறியத்தக்க சின்னங்கள் இன்று இந் நிலங்களில் இருக்குமா, இருக்கும் எனின் அவற்றின் நிலையை ஆராய எத்துணை அறிஞர் புறப்பட்டனர்? அரபிய நாட்டில் சில பழைய கோயிற் கட்டடங்கள் உண்டே; அவை எந் நாளில் எவ்வினத்தவரால் எழுந்தன? இஸ்லாமியக் கொள்கை தலை யெடுக்கு முன்பு அந் நாட்டில் இருந்த கொள்கைக்கு அடிப்படையான இக் கோயில்களை எந் நாட்டு மக்கள் அமைத்தார்கள்? என்று இன்று நாம் ஆராய்ந்து அறிவது எளிதாகுமா? அமெரிக்க நாட்டிலும் நம் முன்னோர் சென்று வந்த வரலாறு உண்டு என்று சில அறிஞர் கூறுவதுண்டே. அங்கும் நாட்டுத்

தேவகுலகங்கள் இப்பண்டை யுருவத்தில் ஆங்காங்கு இருப்பதாக அறிஞர்கள் உரைக்கின்றரே. எந்த நாளில் இந்தக் குடியேற்றம் நிகழ்ந்ததோ?

இங்ஙனமாக நம் கண்முன் இருக்கும் நிலம், நீர், மலை, கடல் முதலியவைகளைப் பற்றிய வரலாறே நமக்குப் பூரணமாகத் தெரியாதபோது, நம் ஆற்றலுக்கு மிஞ்சிய மற்றைய உலகங்களைப் பற்றிய உண்மை வறலாறுகளை நாம் தீரத் தெளிய அறிந்து முடிவுகட்டுவது எப்படி? மனித வருக்கம் மேலும் மேலும் புதுப் பொருளை அறியவும் அடையவும் முயன்று கொண்டே இருந்தாலும், பழம் பொருள்களையும் துருவும் கருத்தும் கொண்டதாகவே இருப்பதால் இந் நாள்காறும் அறியப்படாத உண்மைகள் பல எதிர் காலத்தில் வெளிவரலாம் என்றே நம்பலாம். உலகம் எல்லையற்றதாயினும் மனிதன் அறிவு அவ் வெல்லையை அறியவே முயன்று கொண்டிருக்கிறது.

காலமும் இங்ஙனமே நம் அறிவின் எல்லையைச் சோதிப்பதாகவே உள்ளது. இன்று வரை நாம் அறிந்துள நாகரிகங்களுள் முதற்கண் தோன்றியது எது? அது எந் நாட்டிலே தோன்றியது? மண்ணுட் புதைந்து கிடக்கும் பண்டைய வறலாற்றுச் சின்னங்களில் இன்றளவும் நம் அறிவுக்கெட்டாதவை இருக்கக் கூடுமா? இருக்க இடம் இல்லையா? அவை மண்ணுள் மறைந்திருக்குமா? கடலுள் மறைந்திருக்குமா? பழமை துருவும் திருப்பணி பூண்ட மக்கள் எத்தனையோ நாகரிகங்களைப்பற்றி அறிந்திருப்பினும் அவர் அறியாதவை இன்னும் பல இருக்கலாம் என்றே நாம் நினைக்கவேண்டும். ஏனெனில் இம் மண்ணுலகம் பிறந்து வளர்ந்து வாழத்தக்க தகுதி பெற்றது சில்லாயிர ஆண்டுகளின் எல்லைக்குள் என்று துணிந்து கூற வல்லவர் யாவரும் இல்லை.

மண் பிறந்தது எத்தனையோ நூறுயிர ஆண்டுகளின் முன்பு என்று நில நூலாளர் கூறுதலால் அந்த

மண்ணிலே புல் பூண்டு மரம் செடி கொடி வளர்ந்து, புழு பூச்சி முதலியவை தோன்றி, விலங்கினமும் பறவை யினமும் குரங்கு வகையும் பிறந்து, வளர்ந்த பிறகே மனிதன் பிறந்தான் என்று வைத்துக் கொண்டாலும் அந்த முதல் மனிதன் பிறந்தகாலம் எந்த நூற்றாண்டிற் சேர்ந்ததோ? எத்தனை ஆயிர ஆண்டுகளுக்கு முந்தியதோ? அவன் எப்படி வாழ்ந்தானோ? அவன் வாழ்ந்த நிலப்பகுதி இதுதான் என்று உறுதி கூற இயலுமா? ருஷியர் தம் நாடே முதல் மனிதன் தோன்றிய நாடு என்பர். செரு மனியர் தம்நாடே முதல் மனிதன்தோன்றிய நாடு என்பர். தமிழ் மக்கள் கடலுள் மறைந்த குமரி கண்டமே முதல் மனிதன் தோன்றிய நாடு என்பர். சில வரலாற்று ஆசிரி யர்கள் ஆசிய நாட்டு இடை நிலமே முதல் மனிதன் தோன்றிய நாடு என்பர். சிலர் வேதமே உலகத்தில் முதல் எழுந்த அறிவு நூல் என்றும் அது பிறந்த நிலம் ஆர்க்டிக் கடலின் இடையே முன்பு இருந்த நிலமே என்றும் உரைக் கத்துணிவர். ஆர்க்டிக்கடலின் இடையே இருந்த பண்டை நிலமே முதல் மனிதன் பிறந்து வாழ்ந்த நிலமாக இருக்க லாமோ? முதல் மனிதன் எங்கே பிறந்தால் என்ன? மனித நாகரிகம் எப்படி வளர்ந்தது என்று ஆராய்ந்து பார்ப்போம்.

இன்றுள்ள உலகத்தைச் சுற்றிப் பார்ப்போம். சீன நாகரிகம் என்று தோன்றியது? நிப்பன் நாகரிகம் எப் பொழுது தோன்றியது? பாரத நாகரிகம் எந்நாளிலே தோன்றியது? சாவகம், பலி முதலிய தீவங்களின் நாகரிகம் எக்காலத்தே தோன்றியது? கீழை நாடுகளில் மிகவும் பழமையான வரலாறுள்ளவை என்று கருதப்படும் இந்நாடு களின் நாகரிகம் பிறந்த காலத்தை அறுதியிடுதற்கு, இன் னும் நாம் துருவ வேண்டிய ஆராய வேண்டிய நிலங்கள் பல உண்டு என்றே கூறவேண்டும். நமக்கு அணுக்கமான நிலங் களைப் பற்றிய நம் அறிவே இன்றும் நிரம்பாததாய் இருக் கிறது என்றே கூறவேண்டும். சிந்து நதிப் படுகை நாகரிகம்

என்றோர் தொடர் மொழி சென்ற சில ஆண்டுகளாக நம் நாட்டில் புதுமைக் கோலத்தோடு முழங்குகின்றது. மஹெஞ்சோ தாரோ என்ற புராதன நகரத்திலும், ஹரப்பா என்ற நகரத்திலும் கிடைத்துள்ள பழமைப் பொருள்களைப் பற்றி ஆராய்ச்சியாளர் தம் தம் மனம் தெளிந்த உண்மைகளை வெளியிடலாயினர். சில்லாண்டுக ளின் முன் நம் அறிவுக்கு இலக்காகிய இந்தப் புராதன சின்னங்களைப் போன்று இன்னும் நம் நாட்டிலே நம் கண்ணிற் படாது மறைந்திருக்கும் புராதன சின்னங்கள் எத்தனையோ! இவ்வண்ணமே சீன நாட்டில் இன்னும் மனிதர் கண்களுக்கு இலக்காகாது மறைந்திருக்கும் புரா தன சின்னங்கள் எத்தனையோ! அடிக்கடி பூகம்பங்களுக்கு இரையாகும் நிப்பன் நாட்டில் அதன் புராதன நாகரிகத்தை விளக்கும் பழைய சின்னங்கள் இன்று எங்கெங்கே மறைந் திருக்குமோ! அணுக்க நாடுகளைப் பற்றியே நாம் நன்கு அறிய இயலாதிருக்கும்போது, சேய்மையில் உள்ள உத்தர துருவம், தக்கிண துருவம், ஆர்க்டிக் நாடு, அன்டார்டிக் நாடு முதலியவைகளைப்பற்றி நாம் தெளிவாக அறிந்து கொள்வது எங்ஙனம்? உலகம் காலத்துள் அகப்பட்டு எத்தனையோ ஏற்றிழிவுகளை அறிந்திருக்கிறது என்பதை உலக வரலாறு களைப் பொறுமையுடன் ஆராய்வதால் உணர்வோம்.

உலக சரித்திரம் மிகப் பரந்து விரிந்து கிடக்கிறது. உலகமும் காலமும் இணங்கி அதன்கண் இடம் பெற்றுள் ளன. அரசர்கள் ஆண்டதும், போர் இயற்றியதும், செல்வம் திரட்டியதும், கேளிக்கைகளிற் பொழுது போக்கியதும், பிற வலிய அரசுகளால் நாடு இழந்து திரு விழந்து அழிந் ததும், முன்னிருந்த அரச குலத்திடம் அன்பு பூண்ட மக்கள் பின் வந்த அரசகுலத்தால் துன்புற்று வாடியதும், பிறவுமே சரித்திரம் என்று எண்ணிய காலம் ஒன்று இருந்தது.

இன்று உலகத்தின் உண்மை வரலாறுக மதிக்கப் படுவன, உலகத்தின் பல நாடுகளிலும் அவ்வக் காலங்களில்

மக்கள் வாழ்ந்த முறையும், அவர்கள் வாழ்க்கையிலே காலந் தோறும் ஏற்பட்ட மாறுபாடுகளும், கல்வி, கலை வளர்ச்சியில் அவர்கள் மனம் சென்ற நெறியும், அகத்துறையிலும் புறத் துறையிலும் அவர்கள் சென்ற செலவும், முன்னோர் வைத்த பொருளைப் போற்றிப் பின்னோர்க்கு அவர்கள் விட்டுச் சென்ற வண்ணமும், நாடு நகர் அமைத்து வாழ்ந்த நாகரிக நெறிகளும் பிறவுமாம்.

காலமும் உலகமும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு இணங்கி மக்கள் வாழ்க்கைக்கு உற்ற துணையாக இருந்திருக்கின்றன. சுமேரிய, அசீரிய, பாபிலோனிய, கிரேக்க, ரோம நாகரிகங்கள் எல்லாம் தோன்றி மறைந்து பல நூற்றாண்டுகள் ஆயினும் இன்னும் அவற்றை ஆராய்ந்து தெளிய முயல்கின்றோம். இவ்வண்ணமே உலகத்தின் பல அரங்குகளில் ஆதியில் வழங்கிய மொழிகளையும் இன்று வழங்கும் மொழிகளையும் பற்றிய பழமையாராய்ச்சியில் இறங்கி உண்மை காண முயல்கின்றோம்.

மண்ணுட் புதைந்து கிடக்கும் நகரங்களில் வாழ்ந்த மக்கள், வீடுகள் எங்ஙனம் அமைத்தார் என்றும், குளங்களை எங்ஙனம் வெட்டியிருந்தார் என்றும், நீர் போகும் வழிகளை எங்ஙனம் அமைத்தார் என்றும் அறிந்து அவைகளின் மூலம் அம்மக்களின் முன்னேற்றத்தின் எல்லையை அறிய முயல்கின்றோம். அந் நிலங்களிற் கிடைக்கின்ற குயக் கலங்களையும், அணிபணிகளையும், சிற்பங்களையும், ஓவியங் களையும், நாணயங்களையும், முத்திரைகளையும் துணையாகக் கொண்டு அவர்கள் நாகரிகத்தையே அறிய முயல்கின்றோம்.

நாற்பது நூற்றாண்டுகளின் முன்பு எகிப்திய மக்கள் எத்தகைய வாழ்வு வாழ்ந்தார் என்று அறிய அவர்கள் இயற்றியுள்ள கூர்நுனிக் கோபுரங்களைக் குடைந்து பார்க் கின்றோம். அவர்கள் எழுத உதவிய பாபைரஸ் என்ற ஏடுகளையும், அரசப்பிணங்களின் கல்லறைகளில் வைத்த தானியங்களையும், பான வகைகளையும், பிறவற்றையும் ஆராய

முயல்கின்றோம். பண்டையோர் குறிப்புக்களால் நம் நாட்டுக்கும் பிற நாடுகளுக்கும் உள்ள தொடர்புகளையும் அறிய வழி தேடுகின்றோம். வேதம் தோன்றிய காலம் எது, அன்று மக்கள் வாழ்ந்த முறையாது என்று ஒருவர் ஆராய்கின்றார். விவிலிய நூலிற் சொல்லிய செய்திகளைப்பற்றி ஒருவர் ஆராய்ச்சி நிகழ்த்துகின்றார். ஷேக்ஸ்பியர்தான் அவர் பெயரால் வழங்கும் நாடகங்களை இயற்றினரா, இல்லையா என்ற உண்மையைத் தெளிவிக்கும் பொருட்டு ஒருவர் பழைய கல்லறைகளைக் குடைகின்றார். இவை எல்லாம் உலகமும் காலமும் இணங்கிய இணக்கமே.

# 15. உறக்கமும் விழிப்பும்

விழித்திருக்கும் காலம் பகல் என்றும், உறங்கும் காலம் இரவு என்றும் உலகம் பொதுவாக நினைக்கிறது. பகலில் உறங்கும் மக்களும், இரவில் விழித்து உழைக்கும் மனிதரும் இருக்கவே செய்கிறார். விழிப்பு என்பது பொறிகளும், புலன்களும், மனமும் தத்தமக்கு அமைந்த பணிகளை முறையே இயற்றும்படி அமைந்த நிலையாம். உறக்கம் என்பது அவை எல்லாம் ஓய்வு பெற அமைந்த நிலையாம். நம் உடம்பு ஒரு அரும்பொறி என்பதை நாம் உணர்வோம். அதன்கண் நம் அறிவோடு இசைந்து நிகழும் பணிகள் பலவாம்; ஆயினும், நம் அறிவுக்கு அகப்படாமலே நிகழும் பணிகளும் பலவாம். நாம் உறங்கினாலும் விழித்தாலும் மூச்சு விட்டு இழுக்கும் செயல் ஒரு நொடிப் பொழுதும் நிற்பதற்கில்லை. நின்றால் என்ன விளையும் என்பதைக் கூறவும் வேண்டுமா? இவ்வண்ணமே இதயத்திலிருந்து உடம்பெங்கும் ஓடி மீண்டு ஆங்கே வரும் உதிரப் போக்கும் நம் உறக்கத்தையும் விழிப்பையும் எதிர்பாராது நிகழும் செயலே ஆகும். உடல் என்ற பொறி, பெரியதொரு தொழிற்சாலை போல எத்தனையோ பிரிவுகளையுடையதாய் ஆங்காங்கு நிகழும் தொழில்களை நெறிப்படி இயற்றும் தலைவனைப் பெற்றதாய் அமைந்துள்ளது.

உறக்கம், விழிப்பு என்ற இரண்டும் இரவும் பகலும் போல ஒன்றற்கொன்று மாறானவை ஆயினும், ஒன்றுக்கு ஒன்று உதவுவன ஆகவே உள்ளன. விழிப்பு வேண்டிய அளவு இருந்து விழிப்புக் காலத்தில் தக்க உழைப்பும் பொருந்தியிருந்தாலன்றி உறக்கம் என்பது எளிதில் வாராது. உறக்கம் வேண்டுமளவு இருந்து, களை நீங்கி விழித்தாலன்றி மேல்நிகழ்த்த வேண்டிய பணிகளையேற்றுக் கொள்ள உடலுக்கு ஆற்றல் இராது. பகலை இரவாக்கும் விலங்குகளையும், இரவைப் பகலாக்கும் விலங்குகளையும்

வனங்களிற் காண்கின்றோம். மக்களிலும் சிலர் இயற்கை நெறிக்கு மாறுபட்டு இங்ஙனம் நடப்பதுண்டு.

உறக்கம் இன்றியே சிலர், பல்லாண்டு வாழ்ந்த கதையை அயல் நாட்டுச் செய்திகளால் அறிகிறோம். விழிப் பின்றியே பல்லாண்டு உறங்கிய ஒரு இளம் பெண்ணின் கதையை இளமையிற் படித்திருக்கிறோம். வட கடலில் வாழும் உயிர்கள் பல திங்கள் உணவு நினைப்பின்றி உறங்கிக் கிடக்கும் என்று உயிர் நூல் வல்லோர் கூறுகின்றனர். இயற்கை நெறிக்கு மாறுபட்ட இவ்வரலாறுகள் என்றும் எப்பொழுதும் காணக் கிடைப்பவை அல்ல. எப்பொழுதோ எங்கோ புதுமையாக எதிர்ப்படுபவையே.

உறக்கம் எல்லார்க்கும் ஒரே அளவில் அமைவதில்லை. இளங்குழவிகள் பகலும் இரவும் பெரும்பாலும் உறங்கியே பொழுது போக்கும். முதுமையில் தளர்ந்த பெருமக்கள் பகலும் உறங்காது இராவிலும் சிறிது பொழுதே உறங்கி எழுவதைக் காண்போம். இடைப் பருவத்தில் இருப் பவர்களே அளவான உறக்கம் உள்ளவர் ஆவார். விழிப்பு உள்ள காலம் மிகுதியாய் இருப்பதும், உறக்கத்துக்காக ஒதுக்கும் காலம் குறைவாக இருப்பதும் மன வுழைப்பு உள்ள பெருமக்களுக்கு அமைவனவாம். உடலுழைப்பு உள்ளவர்களுக்கு உறக்கம் மிகுதியாக வேண்டும்.

கண்ணை மூடி அடங்குவதே உறக்கம் என்று கருது வது இயல்பு. கண்கள் விழித்திருக்க அவைகளின் உதவியோடு பிறபொறிகள் எல்லாம் தம் தம் பணிகளைப் புரிவதே விழிப்பு என்று கருதுகிறோம். உறக்கத்தை ஒரு பேறாகப் பெற்ற கும்பகன்னனைப் பற்றி இராமா யணத்திலே கேட்கிறோம். அவனை எழுப்ப அரக்கர் பட்ட பாட்டையும் அக் காவியத்திலே படிக்கிறோம். ஆறு திங்கள் உறங்கி ஒரு நாளே விழித்திருக்கும் வாழ்வை அவன் பெற்றிருந்ததாகக் கதை கேட்கிறோம்.

சிலர் எதிரிலிருப்பாரோடு பேசிக்கொண்டிருக்கும் போதே திடீரென்று கண் மூடிக் குறட்டைவிடக் காண்கிறோம். இந்த உறக்கத்துக்கு இடமும் பொழுதும் இல்லை. எப்பொழுதும் எவ்விடத்திலும் இது வருவது உண்டு. தமிழகத்தில் ஒரு சிறு நகரில் ஒரு சிறந்த நியாயவாதி இருந்தார். அவர் தமது கட்சியின் வாதத்தை மிகவும் தெளிவாகவும் அழகாகவும் பேசவல்லவர். அவர் நாவன்மை கண்டே நியாயாதிபதிகள் விருப்போடு அவர் வாதத்தைச் செவி சாய்த்துக் கேட்பர். அவருக்கு இவ் வுறக்கம் உண்டு. பெருவழக்கு ஒன்றைப் பற்றிச் சிக்க லான வாதத்தைப் பேசிக்கொண்டிருக்கும்போதே, இடை யில் இவ்வுறக்கம் வந்து அவரை அழுத்தும். சிறந்த வாதத்தைச் செவிசாய்த்துக் கேட்ட நீதிபதிகள் தமக்கு முன்னே நியாயவாதி நின்ற வண்ணம் உறங்கும் காட்சி யைக் காண்பர். அவர் பெருமையை அறிந்திருப்பதால் சற்றே பொறுத்திருப்பர். பதினைந்து இருபது நிமிடங் களில் நியாயவாதி விழிப்படைவது உண்டு. இவ்வுறக்கம் வந்து அழுத்துமுன்னே நியாயவாதத்தில் எந்தச் சொல் லோடு நிறுத்தியிருந்தாரோ அதற்கு அடுத்து வரத்தக்க சொல்லை அமைத்து வாக்கியப்பிழை தோன்றாமலும் வாதச்சோர்வு நேராமலும் அவர் பேசி முடிப்பதை அனை வரும் கேட்டு மனம் மருண்டு பெருமகிழ்ச்சி அடைவர். இவ்வுறக்கம் நோய்களுள் நல்லதோர் வகையென்று மதிக்கத்தக்கது.

'விலங்குகள் பறவைகள் மக்கள் முதலிய உயிர் வகை கள் உறங்குவதே அன்றி, மரம் செடி கொடி வகைகளும் உறங்கி விழிப்பதுண்டு' என்று விஞ்ஞான நூல் வல்லவரான வங்கத்துச் சான்றோர் ஜகதீச சந்திரவசு உரைப்பார். அவர் தாவரங்களுக்கு இன்ப துன்ப உணர்ச்சி யுண்டு என்பதையே விளக்கிக் காட்டிய பெரியோர். செடிகளைத் துன்புறுத்துவது என்பது அவற்றின் இலை கிளைகளைக் கிள்ளுவது ஒடிப்பது வளைப்பது போன்ற செயலே ஆகும்.

செடிகளை இன்புறுத்துவது என்பது அவைகள் தளிர்ப்புறத்தக்க தண்ணீரையோ மருந்தையோ காலம் இடம் அறிந்து உதவுதலாம். செடிகளுக்குச் சில ரசாயன உரங்களை இடும்போது அவற்றின் தண்டு, இலை, பூ, காய், பழம் எல்லாம் செழித்துக் கொழுத்திருக்கும் காட்சியைக் காண்கிறோம். இவ்வண்ணமே இயல்பாக உறங்காத செடிகளைச் சில மருந்துகளைக் கொடுத்து உறங்க வைக்கலாம் என்றும் வேறு மருந்துகளால் அவைகளை விழிக்கச் செய்யலாம் என்றும் அவரே விளக்கியிருக்கிறார். அவர் உறைவிடத்தின் அருகே இருந்ததோர் மாமரம் ஒழுங்காகச் சில குறித்த வேளைகளில் உறங்குவதன் பொருட்டே சாய்வதுண்டு என்பதையும் விளக்கியிருக்கிறார். இவ்வுண்மைகள் விஞ்ஞானத்தாற் பெற்றவை. இயல்பாகவே மாலைக்காலத்தில் உறங்கும் மரம் ஒன்றை நாம் சாலைகளிற் பார்க்கிறோம். அம்மரத்தை மக்கள் தூங்கு மூஞ்சி மரம் என்று கூறும் வழக்கம் உண்டு. மாலைக்காலத்தில் அம்மரத்தின் இலைகள் தாமாகவே பகலெல்லாம் நிமிர்ந்து கதிரவன் கதிர்களைப் பருகி யிருந்த நெறிக்கு மாறாகக் கீழ்நோக்கிச் சாய்ந்து உணர்ச்சி யற்றிருப்பதைக் காணலாம். செடிகளுக்கு உணர்ச்சி உண்டு என்பதைத் தொட்டாற் சிணுங்கி என்ற செடியின் இலைகளைத் தொட்டுப் பார்த்து அவை சுருங்குவதைக் கண்டு தெளியலாம்.

உறக்கம் விழிப்பு என்ற இரண்டும் தனி மனிதரையும் தனித் தனியே பிற உயிர் இனத்தையும் பற்றி அடிமைப் படுத்துவதே அன்றி, நாடுகளையே பற்றுவதும் உண்டு. குடும்பம், ஊர், நகரம், நாடு என்று ஒன்றன்மேல் ஒன்றாக வளர்ந்த மனிதர் குழுவில் எந்தக் குழுவை உறக்கம் பற்றினும் அது வளர்ச்சி குறைந்து மழுங்குகிறது. எகிப்திய நாடு நாலாயிர ஆண்டுகளின் முன்பே நாகரிகம் படைத்த நாடு என்பதை நாம் அறிவோம். பாரோ என்ற பெயர் பூண்ட மன்னர் பெருமக்கள் அரசாண்டகாலத்தில் மிக்க சிறப்புடன் கல்வியும் கலையும் ஓங்கி வளர்ந்திருந்தது என்று

கேள்வியுறுகிறோம். "பாரோக்களின் மரபு எப்பொழுது மறைந்தது? பிறகு வந்த மரபு யாது? நேற்று அரசாண்டு மக்கள் வெறுப்பால் வெளிப்பட்ட அரசர் குலத்துக்கும் முன்னைய குலத்துக்கும் தொடர்பு யாது? பாரோக்கள் குலம் மறைந்த நாளிலிருந்து பின் வந்த மரபு அரசாட்சியை ஏற்கும் நாள் வரை அந் நாடு இருந்த நிலை யாது? அக் காலத்தில் மக்கள் வாழ்ந்த நெறியைப் பற்றி அறிய இன்று ஏதேனும் கருவி உண்டா?" என்பன ஆதிய வினாக்களை எழுப்பினால் பாரோக்களுக்கும் பிற்பட்ட மன்னர்க்கும் இடைப்பட்ட காலம் எகிப்த நாட்டுக்கு ஒரு பேருறக்கமே என்று தோன்றும். இன்று அந்நாடு நன்கு விழித்திருக் கிறது என்றே கருதுவோம். இங்ஙனமே துருக்கியில் கெமால்பாஷா நிமிர்ந்து எழு முன்பு மக்கள் நிலை உறக்கமே என்று கூறவேண்டும்.

இன்று அமெரிக்கா உலகத்திலேயே செல்வச் செழிப் பாலும் கல்விச்சிறப்பாலும் தொழில் வளர்ச்சியாலும் வியாபார விருத்தியாலும் விஞ்ஞானத் துறையாலும் ஒப்பு உயர்வற்ற நாடாக விளங்கக் காண்கிறோம். ஜியார்ஜ வாஷிங்டன் அந் நாட்டின் குடியரசுத் தலைவர் ஆகு முன்பு, வெள்ளையர் அந்நாட்டிற் குடியேறு முன்பு, கிறிஸ் தபர் கொலம்பஸ் அந் நாட்டிற் கால்வைக்கு முன்பு அந் நாடு இருந்த நிலையாது என்று கேட்போமாயின் ஒரு பேரு றக்கமே என்ற உண்மையை உள்ளவாறு கூறவேண்டும். ஒரு நாடு உறங்குவது என்பது சில நாட்கணக்கில் இருப்ப தில்லை. நூற்றாண்டுக் கணக்கில் இருக்கும். அது விழித் தெழுந்து உலகத்தில் உயர்ச்சி பெறுவதும் நூற்றாண்டு அளவிலேயே எண்ணத்தக்கதாம். கிரேக்க நாடும் ரோம நாடும் மிக்க விழிப்போடிருந்த பண்டைக் காலத்தின் பயனே இன்று நாம் காணும் சிறந்த வரலாறுகளும் காவிய நாடகங்களும் ஆகும். அவைகளும் பண்டைய நாகரிக முறை நீங்கிப் புதுமுறையிற் புகுவதற்கு இடைப்பட்ட காலத்தில் உறக்கமே கொண்டன. செருமனிய நாடு கெய்

சர் வில்லியம் காலத்தில் மிக்க விழிப்போடிருந்தது. அதற்கு முந்திப் பல பிளவுகளாக இருந்த நாட்டை இணைக்கும் பொறுப்பேற்ற பிஸ்மார்க்கின் நாளிலே விழிப்புற்றது. அதற்கு முன் தன் வலிமை யுணராது உறங்கிக் கிடந்தது.

ஹிட்லர் காலத்திலும் அளவிறந்த விழிப்பைப் பெற்றது. இன்று இருவகை வல்லரசுகளின் இடையே சிக்கி உறக்கமோ மயக்கமோ என்று கூறற் கியலாத நிலையில் உள்ளது. மக்களிடம் விழிப்புத் திறம் இருந்தும் இருவகை அழுத்தத் திடையே சிக்கி யிருப்பதால் இந் நாடு நாளை என்னுகும் என்பது விளக்கமாக இல்லை என்றே கூற வேண்டும். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் என்ற மூன்று நாடுகளும், அயர்லாந்தும் இணைந்து ஒன்ருய் இருந்த பிரிட்டிஷ்நாடு அயர்லாந்து உறங்கியவளவும் பிற மொழி நாடாகிய அதனைத் தனது ஆட்சியுள் அடக்கி அதன் உரிமைகளை அளந்து வழங்கிக் கொண்டிருந்தது. அது விழித்து எதிர்க்கத் தொடங்கியதும் பிரித்து விட்டது. ரோமாபுரியின் ஆட்சிச் சின்னங்களை இன்னும் தன்னிடம் காத்து வைத்திருக்கும் இங்கிலாந்தின் அரசு உலகத்தையே தன் ஒரு ஐக்கியக் கொடியின் கீழ்க் கொணர முயன்றது உண்மையே. அமெரிக்க சுதந்திரப் போராட்டமும் இந்திய சுதந்திரப் போராட்டமும் இதற்கு இடையூறுகளாய் முடிந்தன. இங்கிலாந்தில் இருந்த ஜ்யார்ஜ் மன்னரை அமெரிக்காவில் எழுந்த ஜ்யார்ஜ் வாஷிங்டன் குடிகளை ஒன்று கூட்டிப் படைதிரட்டி எதிர்க்கத் துணியாதிருந்தால், இந்தியாவிலே ஒருதிலகரும் காந்தியும் பிறவா திருந்தால், இன்று உலகத்தில் ஒப்புயர்வற்ற பேரரசாக விளங்கத் தக்கது எலிசபெத் அரசியார் அரசாட்சியன்றே! அமெரிக்காவும் இந்தியாவும் எதிர்பாராக் காலத்தில் விழித்துக் கொண்டதால் இன்று ஐக்கியக் கொடியின் உலகவுயர்வு நிலை குறைந்தது. ஒரு நாடு விழிப்பதால் மற்றொரு நாட்டுக்கு விளையும் சிறுமை பெருமைகளை இதனல் உணரலாம்.

இனி நம் பாரதப் பெரு நாட்டின் வரலாற்றில் உறக்கமும் விழிப்பும் மாறி மாறி வந்த கதையைப் பார்ப்போம். வேத காலத்தில் நம்நாடு சிறப்புமிக்க விழிப்பு நிலையில் இருந்தது. அதற்கு முந்திய காலம் எத்தகைய நிலையில் இருந்ததோ அறியோம். வேதத்தில் அன்றளவும் உலகம் கண்டு கேட்டறியாத மெய்ப் பொருட் செல்வங்கள் வெளியாகி யிருத்தலால், அக் கருத்துக்களை உணரத்தக்க மனப் பண்பு படைத்த மக்கள் வேத காலத்துக்கு முன்பே சில பல நூற்றாண்டுகள் பாரதப் பெரு நாட்டில் வாழ்ந்திருக்க வேண்டும். ஒருவகை அறிவுச் செல்வமும் படையா திருந்த குடும்பத்திலோ ஊரிலோ நாட்டிலோ திடீரென்று பேரொளி எழும் என்பது இயற்கை நெறிக்கு ஒத்ததன்று. ஆதலால் வேதம் பிறக்கு முன்னே அது பிறக்கத் தக்க மனப்பண்பு இந் நாட்டுக்கு வந்து விட்டது என்றே முடிவு செய்ய வேண்டும். வேதகாலத்தின் முந்தை நூற்றாண்டுகளில் பத்து நூற்றாண்டளவும் இந் நாடு விழிப்புக் குரியதாகவே இருந்தது எனவும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்க வில்லை யென்றும் கருதுவதும் பொருத்தமே.

பல நூற்றாண்டுகளின் பிறகே வேதாங்க காலம் தோன்றியது. பிறகே சாத்திர காலம் பிறந்தது. அதன் பின்பு இதிகாச காலம் என்பதும், சாத்திர காலத்துக்கு முன்பே இதிகாச காலம் என்பதும் இரு திறப்பட்ட கருத்தாம். இதிகாச காலமும் சாத்திர காலமும் நம் நாட்டின் ஒளிமிக்க காலங்களாதலால், அவையும் உறக்கமறியா விழிப்புக் காலமே என்று துணிந்துரைக்கலாம். புராண காலத்திலே ஒளி சிறிது மழுங்கியது என்றே கூற வேண்டும். அரை விழிப்புக் காலம் என்று அதனைக் கருதலாம். அதன் பிறகே சரித்திர காலம் தோன்றியது என்பது அறிஞர் கருத்தாம். அரசர்களையும் அவர்கள் இயற்றிய போர்களையும் பற்றி இங்கு நாம் சிந்தனை செய்ய வேண்டா. வர்த்தமான மகா வீரரும், புத்த தேவரும் தாம் தாம் தெளிந்த மெய்ந்நெறிகளை விளக்கிய காலத்தை நம் நாட்டின் விழிப்

புக் காலங்களுள் ஒன்றென்றே கருத வேண்டும். அதன் பின்பு இப் புதுக் கொள்கைகள், தென்னாடு வரை வளர்ந்து புகுந்து மக்கள் மனத்தை மாற்றத் தொடங்கிய பிறகே சைவ வைணவ காலம் பிறந்தது. சைவ வைணவ இயக்கங்கள், பௌத்த சைன நெறிகளை எதிர்த்து நெடுங்காலம் போராடி, அவை இந்நாட்டில் நிலைபெறா வண்ணம் செய்தன. இக் காலத்திற்கும் ஒளிக் காலம் என்ற பெயரே தகுவதாகும். இக் காலம் ஏறக்குறைய மூன்றாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை நிகழ்ந்த எட்டு நூற்றாண்டுகளில் அடங்கும்.

இவ்வண்ணமே அளந்து பார்க்கும்போது, பதினோராம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில் தென்னாட்டில் விழிப்பில்லை என்றும் வட நாட்டில் இடையிடையே விழிப்பைப் பெற்ற அரை விழிப்பு நிலை என்றும் அறிவோம். வட நாட்டிலே வல்லபர், நிம்பார்க்கர், கௌராங்கர், ராமானந்தர், கபீர் முதலிய மகான்கள் பிறந்து ஒளி பரப்பிய காலம் இச் சில நூற்றாண்டுகளுக்குட்பட்டதே. இராசத்தானத்தில் மீரா பாயின் பக்தியொளி விளங்கிய விழிப்புக் காலமும், இச் சிறு காலமே. அக்பர் புதிய கொள்கை ஒன்றை நாட்ட முயன்று தோல்வி பெற்ற காலமும் இதுவே. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வங்க நாட்டிலே இராமகிருஷ்ண பரமஹம்ஸர் தோன்றி ஒரு புதிய ஒளியை நாட்டுக்குக் கொடுத்தார். அதே காலத்தில் தென்னாட்டிலே இராமலிங்க அடிகள் தோன்றி அத் திருப்பணியை நிகழ்த்தினார். தென்னாடு இந் நூற்றாண்டில் நன்கு விழித்துக் கொண்டது. மெய்ப்பொருள் தேட்டில் நம் நாட்டின் விழிப்பும் உறக்கமும் இடையிடையே மாறி மாறி வந்த நிலை இவ்வாறிருந்தது. அரசியல் நிலையிலும் நம் நாட்டுக்கு விழிப்பும் உறக்கமும் இருந்தது.

அரசியல் நிலையில் கிரேக்க நாட்டிலிருந்து பாரத நாட்டுக்குப் படையெடுத்தல் எளிதென்று துணிந்து வந்த

அலெக்ஸாண்டர் நம்மிடையே புகுந்து வெற்றியும் பெற்ற காலத்தை இருண்ட காலம் என்றே கூற வேண்டும். அன்று அரசருள் ஒற்றுமையும் விழிப்பும் இருந்திருக்குமாயின் நாட்டுக்கு அத்தகைய சிறுமை நேர்ந்திருக்குமா? நவ நந்தர் ஆட்சிக்காலம் வடநாட்டின் ஒரு சிலபகுதிக்குப் பெருமையே விளைத்தது. ஆயினும் சாணக்கியர் துணை பெற்ற சந்திரகுப்தன் ஆட்சிக்காலம் போன்ற ஒளி பெறவில்லை. பிந்துசாரன் ஆட்சியும் ஒளிக்காலமே. அசோகர் ஆட்சிக்காலம் போன்ற சிறந்த ஒளிக்காலம் நம் நாட்டின் வரலாற்றிலேயே மிகுதியாக இல்லை என்று துணிந்துரைக்கலாம். இக்காலத்தில் வடகோடி முதல் தென் கோடி வரையில் தேவானும் பிரியர் என்ற பட்டம் பூண்ட அசோகர் அருள் நெறியை வளர்க்க முயன்ற வரலாற்றை அவர் பொறித்து வைத்த கற்சிலைகளால் அறிகிறோம்.

அசோகருக்குப்பின் இந்நாட்டின் அரசை யேற்றமன்னர் பலரும் நாட்டு மக்கள் விழிப்பு நிலையை அவர் இயன்றவளவு முயன்று வளர்த்தார் என்று கூறுதற்கில்லை. தென்னாட்டில் சங்கம் வளர்த்த பாண்டியர் காலம் இதுவே ஆதலின் தமிழகத்துக்கு இது விழிப்புக் காலமே. இவ்விழிப்பு தமிழகத்தே ஆறு நூற்றாண்டு வரை சென்றது. தென்னாட்டிற் பல்லவர் ஆட்சிக் காலத்திலே இரண்டு நூற்றாண்டுகள் கலையும் கல்வியும் வளர்ந்த விழிப்புக்காலம் என்றே கூறத்தக்கன. இதன்பின் சில காலம் வடநாட்டில் உறக்கமே குடி கொண்டது. அதன் பயனாகவே பிற நாட்டார் படையெடுப்பும் உள்நாட்டு மன்னர் ஒற்றுமையின்றிப் போர்க்களங்களில் தோல்வி பெற்ற கதையும் நிகழ்ந்தன. டில்லிமா நகரம் எத்தனையோ இரவு பகல்களைப் பார்த்தது. அவற்றுள் மிகவும் வருந்தத்தக்க இருட் காலம் நாட்டைக்காக்க நினைத்த பிருதிவிராஜனை மடியவிட்டகாலமே. பின்னர் இருளும் ஒளியும் கலந்திருந்தன. வெள்ளையர் இந் நாட்டைக்

கைக்கொண்டது பதினேழாம் நூற்றாண்டிலே தொடங்கிய சூழ்ச்சியின் பயனும். அன்று முதல் இருபதாம் நூற்றாண்டின் அரைப்பகுதியளவும் நம் நிலை விழிப்பு என்று கூறத்தக்கதாகாது. இன்று நாம் உரிமை பெற்று நன்கு விழித்து, பிறரையும் உறக்கம் நீக்கி எழுப்பும் நிலையில் இருக்கிறோம்.

THE MADRAS